# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2020
ரூ. 20.00



நிகோலாவோஸ் மிக்கேலோலியாகோஸ்

மோடி

அத்வானி

## பாசிசக் குற்றக் கும்பல்களைத் தண்டிப்பது எப்படி?

# கிரீஸ் மக்களிடமிருந்து கற்போம்!

# இந்திய தேசிய ஜோதியில் தமிழகம் கலக்க மறுப்பதேன்?

அரியானாவை ஆண்டு வரும் பா.ஜ.க. அரசு, அம்மாநிலத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் பட்டப் படிப்பிற்கான கல்விக் கட்டணத்தை இந்தக் கல்வியாண்டு முதல் இருபது மடங்கு அதிகரித்து நிர்ணயித்திருக்கிறது. கடந்த கல்வியாண்டு வரை ரூ.53,000/- ஆக இருந்த கல்விக் கட்டணத்தை, இந்தக் கல்வியாண்டு தொடங்கி முதலாம் ஆண்டு எம்.பி.,பி.எஸ். படிப்புக்கு ரூ.80,000/-, இரண்டாம் ஆண்டுக்கு ரூ.88,000/-, மூன்றாம் ஆண்டுக்கு ரூ.96,000/- நான்காம் மற்றும் இறுதி ஆண்டுக்கு ரூ.1,06,480/- என நிர்ணயம் செய்திருப்பதோடு, அம்மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கல்விக் கட்டணத்தையும் உள்ளிட்டு 10 இலட்சம் ரூபாய் மதிப்பிற்கு உத்தரவாதப் பத்திரம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டிருக்கிறது. இந்த உத்தரவாத தொகையையும் சேர்த்தால், எம்.பி.,பி.எஸ்., படிப்பிற்கான மொத்தக் கல்விக் கட்டணம் நாற்பது இலட்சம் ரூபாயைத் தொடுகிறது.

மாணவர்கள் இந்த உத்தரவாதப் பத்திரத்தை அளிப்பதற்கு மாநில அரசு உதவி செய்யும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, நான்கு ஆண்டுக்கான மொத்தக் கல்விக் கட்டணத்தில், ரூ.3,70,480/- ரூபாயை மாணவர்கள் சொந்தமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை மாநில அரசு 6 சதவீத வட்டியில் கடனாக வழங்கும். கடனுக்கான வட்டியையும் சேர்த்தால் அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். படிப்பை முடிப்பதற்கான மொத்தச் செலவு 55 இலட்ச ரூபாயைத் தொடுகிறது.

எம்.பி.பி.எஸ்., படிப்பை முடித்த மாணவர்களுக்கு அரசு வேலை கிடைத்தால், அரசே தவணைத் தொகையைச் செலுத்தும் என்றும், இல்லாவிடில் அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் அரசு வழங்கிய கடன் தொகையை மாணவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. எம்.பி.பி.எஸ்., படிப்பை முடிக்கும் அனைவருக்கும் அரசு வேலை கிடைக்கப் போவதில்லை என்பதால், மாணவர்கள் தமது சொந்த வருமானத்திலிருந்துதான் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

அரியானாவில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் வெறும் எண்ணூறு இடங்கள்தான் உள்ளன. தமிழகத்திலோ 26 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 3,400 இடங்கள் உள்ளன. அவற்றுள் மூன்று கல்லூரிகளைத் தவிர்த்து, மற்றைய அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ்., படிப்பிற்கு ஆண்டுக் கல்விக் கட்டணம் (*Tution fees*) ரூ.4,000/-; கல்வி தொடர்பான மற்ற கட்டணங்களையும் சேர்த்தால் ஆண்டுக் கட்டணம் ரூ.13,610/-தான். இதன்படி பார்த்தால், அரியானா மாநில பா.ஜ.க., அரசு எம்.பி.பி.எஸ்., படிப்பிற்கான ஆண்டுக் கட்டணத்தை ரூ.10 இலட்ச ரூபாயாக அதிகரித்திருப்பது வெறும் கட்டணக் கொள்ளை மட்டுமல்ல. கட்டண உயர்வு என்ற போர்வையால் அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தனியார்மயப்படுத்தியிருக்கிறது.


ஓரிரு ஆண்டுகளுக்கு முன் நீட் தேர்வு தொடர்பான தொலைக்காட்சி விவாதம் ஒன்றில், நீட் தேர்வை எதிர்த்துப் பேசிய பங்கேற்பாளர், தமிழகத்தில், மாவட்டத்துக்கொன்று என்ற வீதத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருவதையும் வட இந்திய மாநிலங்களில் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான், குறிப்பாக குஜராத்தில் 6 அரசு மருத்துவக் கல்லூரிகள் மட்டுமே இருப்பதையும் ஒப்பிட்டு வாதாடினார்.

அதற்குப் பதில் அளித்துப் பேசிய ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர், அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுவதைத் தண்டச் செலவு எனப் பொருள்படும்படி, குஜராத் அரசு கடனில்லாத நிதி மிகை மாநிலமாக இருப்பதையும், தமிழக அரசின் கடன் அதிகரித்திருப்பதையும் ஒப்பிட்டார்.

அரசு ஒடுக்குமுறைக்கான கருவி என்பதை நாம் அறிவோம். ஆனால், சங்கிகளோ அரசு ஒடுக்குமுறை கருவியாக இருந்தால் மட்டும் போதாது; அது இலாபம் ஈட்டும் இயந்திரமாகவும் இருக்க வேண்டும் என்றும் கருதுகிறார்கள். அதனால்தான் அரசு மருத்துவக் கல்லூரிகளைத் தனியாருக்கு இணையான கட்டணக் கொள்ளைக் கூடாரமாக மாற்றியமைத்திருக்கிறது, அரியானா மாநில பா.ஜ.க. அரசு.

● கீரன்

அரியானா அரசின் மருத்துவக் கல்விக்கட்டண உயர்வுக்கு எதிராக,''உயர்த்த வேண்டியது கல்வித் தரத்தை, கட்டணத்தை அல்ல'' என்ற முழக்கத்துடன் போராட்டம் நடத்திய மருத்துவ மாணவர்கள்.



புதிய
ஜனநாயகம்
மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 35 இதழ்: 10-12
தொகுதி: 36 இதழ்: 1-2
ஆக.2020 - டிச. 2020

தனி இதழ்: ரூ. 20.00
ஆண்டு சந்தா: ரூ.240.00

வடிவமைப்பு : மு.துரை

தொடர்பு முகவரி :
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com
வாட்ஸ் அப்: 94446 32561

# கார்ப்பரேட் நிர்பர்!

நடப்பு நிதியாண்டின் (2020-21) முதல் இரண்டு காலாண்டுகளில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி சுழியத்திற்குக் கீழாக வீழ்ச்சியடைந்திருப்பதையடுத்து, நாடு பொருளாதார மந்த நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்ற எச்சரிக்கையை ரிசர்வ் வங்கி வெளியிட்டிருக்கிறது. இதற்குச் சற்று முன்னர்தான், உலகப் பட்டினிக் குறியீடு தரவரிசைப் பட்டியலில் இந்தியா, தனது அண்டை நாடுகளைவிடப் பின்தங்கி, 94-ஆம் இடத்தில் இருக்கும் அறிக்கை வெளியானது. இவற்றுக்கு இணையாகவே வேலையிழப்பு, வேலையில்லா பட்டாளத்தின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஊதிய வெட்டு, அத்தியாவசிய உணவுப் பொருட்களில் விலை உயர்வு எனப் பொருளாதாரமும் மக்களின் வாழ்நிலையும் அபாயத்தில் இருப்பதைக் காட்டும் அம்சங்கள் யாவும் முதலாளித்துவப் பத்திரிகைகளில் பேசு பொருளாக இருந்து வருகின்றன.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்யும் அருமருந்தைப் போல சுயசார்பு இந்தியா திட்டத்தின் (ஆத்ம நிர்பர் பாரத்) மூன்றாவது தவணை குறித்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது, மோடி அரசு. இத்தவணையில் அறிவிக்கப்பட்ட 2.65 இலட்சம் கோடி ரூபாய் பெறுமான பொருளாதார திட்டங்களையும் சேர்த்து, மூன்று தவணைகளிலும் 30 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு (நாட்டின் மொத்த உற்பத்தியில் 15 சதவீதம் அளவிற்கு) சிறப்புப் பொருளாதாரத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், இத்திட்டங்களின் விளைவாக, கரோனா பொதுமுடக்கத்திற்குப் பிறகு இந்தியப் பொருளாதாரம் வலுவான வளர்ச்சியைக் கண்டுவருவதாகவும் கூறியிருக்கிறார், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

இச்சிறப்புப் பொருளாதாரத் திட்டங்களாலும் அதனால் ஏற்பட்டு வருவதாகக் கூறப்படும் வலுவான வளர்ச்சியாலும் இந்திய மக்கள் கை மேல் கண்ட பலன் என்ன? தொழிலாளர் சேமநல நிதித் திட்டத்திலிருந்து சமீபத்தில் 30,800 நிறுவனங்கள் வெளியேறிவிட்டதால், ஏறத்தாழ 18 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கக்கூடும் என்றொரு மோசமான செய்தி வெளியாகியுள்ளது. இப்புள்ளிவிவரம்தான் இந்திய உழைக்கும் மக்கள் எதிர்கொண்டுவரும் துயரத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இரண்டு தவணைத் திட்டங்களாலும் அடித்தட்டு மக்களுக்குப் புழுத்துப்போன ரேஷன் அரிசியும், கோதுமையும் கிடைத்ததைத் தாண்டி வேறெதுவும் கிடைக்கவில்லை என்ற நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் இந்த மூன்றாவது தவணையில் பலனடையப் போகிறவர்கள் யார்?

எலெக்ட்ரானிக்ஸ், மருந்து, கைபேசி உள்ளிட்ட பத்து துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக அடுத்த ஐந்தாண்டுகளில் 1.45 இலட்சம் கோடி ரூபாய் ஊக்கத்தொகை மானியம்; ரியல் எஸ்டேட் துறையை மீட்பதற்காக 2 கோடி ரூபாய் வரையிலான மதிப்புகொண்ட வீடுகள் விற்பனையின்போது 20 சதவீதம் வரை வருமான வரி விலக்கு; சிமெண்ட், இரும்பு உள்ளிட்ட கட்டுமான நிறுவனங்களின் விற்பனையை ஊக்குவிக்க பிரதமர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 18 இலட்சம் வீடுகளைக் கட்ட 18,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு; உர மானியம் என்ற பெயரில் உர நிறுவனங்களின் கஜானாவை நிரப்ப 65,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு; சர்க்கரை ஆலை அதிபர்கள் கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய நிலுவையைப் பற்றிக் கவலைப்படாமல், அவ்வாலைகளின் ஏற்றுமதியை ஊக்குவிக்க 5,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு என நீளுகிறது இந்தப் பட்டியல்.

இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தொழில் நிறுவனங்கள் புதிய முதலீடுகளைச் செய்து உற்பத்தியை அதிகரிக்குமாம்; உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுமாம்; வேலைவாய்ப்பு அதிகரிக்கும்போது மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்து இந்தியப் பொருளாதாரம் மீட்சிப் பாதையில் நடைபோட ஆரம்பிக்குமாம். கொக்கு தலையில் வெண்ணையை வைத்துப் பிடிக்க முயற்சிப்பதற்கும் இதற்கும் ஏதேனும் வேறுபாடு உண்டா? பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோதே, "அரசாங்கம் அளிக்கும் சலுகைகளை கார்ப்பரேட் முதலாளிகள் மக்களுக்குத் திருப்பி அளிப்பதில்லை" எனக் கூறியதை நினைவில் கொண்டால், மோடி அரசு அளித்திருக்கும் சலுகைகளின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியமேயில்லை.

பொருளாதார மந்தத்தாலும், கரோனா ஊரடங்கு முடக்கத்தாலும் மக்கள் எதிர்கொண்டு வரும் துயரங்களைத் துடைப்பதைவிட, கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் இலாபங்கள் சரியக்கூடாது என்பதில்தான் மோடி அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. அதனால் அவர்களுக்குச் சலுகைக்கு மேல் சலுகையாக வாரி வழங்கும் இச்சிறப்புப் பொருளாதாரத் திட்டங்களை ஆத்ம நிர்பர் (சுயசார்பு) என அழைப்பதைவிட, கார்ப்பரேட் நிர்பர் என அழைப்பதே பொருத்தமானதாக இருக்கும். ●

# 7.5 சதவீத இட ஒதுக்கீடு:

# புண்ணுக்குப் புனுகாகிவிடக் கூடாது!

**மருத்துவக் கல்லூரி சேர்க்கையில்**
**நீட் தேர்வு திணித்திருக்கும் சமத்துவமின்மையை,**
**பாரபட்சத்தை 7.5 சதவீத ஒதுக்கீடு ரத்து செய்துவிடவில்லை.**

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழகத்திலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு 7.5 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருப்பதைத் தனது தனிப்பட்ட சாதனையாகக் காட்டிக்கொள்ள முயலுகிறார், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி. 'அவர் தனியொருவனாகச் சிந்தித்து இந்தச் சாதனையைப் படைப்பதற்கு' அனிதா தொடங்கி ஜோதிஸ்ரீ துர்கா வரையில் 18 மாணவ-மாணவிகள் தமது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியிருந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஆங்கில வழி மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் பெருக்கத்திற்குப் பிறகு அரசுப் பள்ளி மாணவர்கள், குறிப்பாகத் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைப்பது அரிதாகிப் போனது. தமிழகத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டபோதும், நுழைவுத் தேர்வு ரத்து செய்த பிறகும் இந்த நிலை மாறவில்லை. மோடி அரசு-உச்சநீதி மன்றக் கூட்டணியால் திணிக்கப்பட்ட நீட் தேர்வு இந்த நிலையை மேலும் மோசமாக்கியிருப்பதோடு, ஏமாற்றமடைந்த மாணவர்களைத் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்கும் தள்ளிவிட்டிருக்கிறது.

தாமதமாகக் கொண்டுவரப்பட்டாலும் இந்த இட ஒதுக்கீடு வரவேற்கத்தக்கது என்றபோதும், அரசுப் பள்ளிகளில் படித்துவரும் ஏழை மற்றும் கீழ் நடுத்தர வரக்க மாணவர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது இந்த ஒதுக்கீடு சொற்பமானதுதான். அதேசமயத்தில், இந்தச் சொற்பமான ஒதுக்கீடும் எளிதாகக் கிடைத்துவிடவில்லை.

7.5 சதவீத ஒதுக்கீட்டைப் பயன்படுத்தித் தன்னை
ஏழை மாணவர்களின் காவலனாகக் காட்டிக் கொள்ள முயலுகிறார் எடப்பாடி.



நீதிபதி கலையரசன் தலைமையில் அமைக்கப்பட்ட குழு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப் பரிந்துரைத்ததை அ.தி.மு.க. அரசு 7.5 சதவீதமாக வெட்டியது. இந்த வெட்டப்பட்ட ஒதுக்கீட்டிற்கும் ஆளுநர் ஒப்புதல் தராமல் இழுத்தடித்தார். அ.தி.மு.க. அரசோ ஆளுநருக்கு அரசியல் அழுத்தம் தர மறுத்து ஒதுங்கிக் கொண்டது. உயர்நீதி மன்றத்தில் வழக்கு, எதிர்க்கட்சிகளின் போராட்ட அறிவிப்பு, ஆளுநரின் அடாவடித்தனத்திற்கும் அ.தி.மு.க. அரசின் மெத்தனத்திற்கும் எதிராகத் தமிழக மக்கள் மத்தியில் எழுந்த வெறுப்பு-கோபம் ஆகியவற்றுக்குப் பிறகுதான் அ.தி.மு.க. அரசு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. இந்த இட ஒதுக்கீட்டை மறுப்பதோ இழுத்தடிப்பதோ பா.ஜ.க.வைப் பதம் பார்த்துவிடும் என உறைத்த பிறகுதான் ஆளுநர் தமிழக அரசின் இட ஒதுக்கீடு சட்டத்திற்கு ஒப்புதல் தந்தார். இந்த அழுத்தங்கள் எல்லாம் இல்லாமல் போயிருந்தால், இந்த இட ஒதுக்கீடும் எழுவர் விடுதலையைப் போலவே ஆளுநர் மாளிகையிலேயே அமுக்கப்பட்டிருக்கும்.

தனியார் மெட்ரிகுலேஷன் மற்றும் சி.பி.எஸ்.இ பள்ளிகளிலும் கார்ப்பரேட் பயிற்சி மையங்களிலும் இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழித்துப் படிக்கும் நடுத்தர மற்றும் மேல்தட்டு மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரி இடங்களை அப்படியே வாரிச் சுருட்டிக் கொள்வதை அனுமதிப்பது அநீதியானது என்ற நிலையிலிருந்து இந்த இட ஒதுக்கீட்டை ஆதரிக்கலாமேயொழிய, நீட் தேர்வுக்கு மறைமுகமாக முட்டுக் கொடுப்பதற்கும் அல்லது நீட் தேர்விற்கான எதிர்ப்பை மழுங்கடிப்பதற்குமான கருவியாக இந்த இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்தும் முயற்சிகளையும் நாம் அனுமதிக்க முடியாது. ஏனென்றால், நீட் தேர்வின் மூலம் திணிக்கப்பட்டிருக்கும் சமத்துவமின்மையை, பாரபட்சத்தை இந்த இட ஒதுக்கீடு இம்மியளவுகூட ரத்து

செய்துவிடவில்லை.

இந்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 227 மாணவர்களுக்கும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 86 மாணவர்களுக்கும் அரசு பல் மருத்துவக் கல்லூரிகளில் 12 மாணவர்களுக்கும் தனியார் பல் மருத்துவக் கல்லூரிகளில் 80 மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருந்தாலும், நீட் தேர்வில் கிடைக்கும் மதிப்பெண்ணின் அடிப்படையில்தான் மாணவர் தேர்வு நடைபெறும். இந்த நீட் தேர்வு சி.பி.எஸ்.இ., பாடத் திட்டப்படி நடைபெறுவதால், மாநிலப் பாடத் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் நீட் தேர்வுக்காக அரசு பயிற்சி மையத்திலோ அல்லது தனியார் பயிற்சி மையத்திலோ சேர்ந்து இத்தேர்வுக்குத் தயாராவது தவிர்க்கவியலாத கட்டாயமாகிவிடுகிறது. குறிப்பாக, அரசுப் பள்ளி மாணவர்கள் இரண்டாம் முறையாக நீட் தேர்வு எழுத வேண்டுமென்றால், அவர்கள் தனியார் பயிற்சி மையத்தில் மட்டும்தான் சேர முடியும்.



தனியார் பயிற்சி மையத்தில் தனது மகள் பகவதியைச் சேர்க்கத் தனது அற்ப சொத்துக்களை விற்றதோடு, கடனாளியாகவும் ஆகிவிட்ட சமுத்திரக்கனி.

இந்த ஆண்டு நீட் தேர்வில் 664 மதிப்பெண்களை எடுத்து, இந்திய அளவில் அரசுப் பள்ளி மாணவர்களில் முதலிடம் பெற்றிருக்கும் தேனி மாவட்டம் ஜீவித்குமார் கடந்த ஆண்டு நீட் தேர்வில் எடுத்த மதிப்பெண் 193 தான். அம்மாணவன் இரண்டாம் முறையாக நீட் தேர்வு எழுதுவதற்கு நாமக்கல்லில் உள்ள ஒரு தனியார் பயற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி எடுப்பதற்குப் பலரும் உதவியிருக்கிறார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தெங்கலம்புதூர் கிராமத்தைச் சேர்ந்த பகவதி, கடந்த ஆண்டு நீட் தேர்வில் 111 மதிப்பெண்கள் மட்டுமே எடுத்ததால், மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு அவர் தனியார் பயிற்சி மையத்தில் சேருவதற்காக, விவசாயக் கூலித் தொழிலாளியான அவரது தாய் சமுத்திரக்கனி, தன்னிடமிருந்த மூன்று கறவை மாடுகளையும் விற்றதோடு, கந்துவட்டிக்கும் கடன் வாங்கியிருக்கிறார்.

இட ஒதுக்கீட்டின் கீழ் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்திருக்கும் பகவதியின் கதையிது. இது போன்று அற்பமான சொத்தையும் விற்ற, கடனும் பட்ட துயரக் கதைகள் இன்னும் எத்துணை எத்துணையோ!

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சேர்ந்த 6,692 மாணவ-மாணவிகள் இந்த ஆண்டு நீட் தேர்விற்கு அரசு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றதில் 1,615 பேர் தேர்வில் தேர்ச்சி அடைந்துள்ளனர். தேர்ச்சி அடைந்தவர்களுள் 405 பேருக்குத்தான் இட ஒதுக்கீட்டின் கீழ் மருத்துவக் கல்லூரிகளிலோ பல் மருத்துவக் கல்லூரிகளிலோ இடம் கிடைக்கும். இடம் கிடைக்காதவர்களும், நீட் தேர்வில் தேர்ச்சி அடையாதவர்களும் எதிர்வரும் ஆண்டில் நீட் தேர்விற்குத் தயாராக வேண்டுமெனில் அவர்கள் அனைவரும் தனியார் பயிற்சி மையத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும். இந்நிலையில் அவர்களுள் எத்துணை பேருக்கு ஜீவித்குமாருக்குக் கிடைத்த உதவி போல கிடைக்கும்? எத்துணை பேரால் கையில் இருக்கும் அரைக்காசு சொத்தை விற்றோ, அல்லது கந்து வட்டிக்குக் கடன் வாங்கியோ தனியார் பயிற்சி மையத்தின் கட்டணங்களைக் கட்ட முடியும்?

இந்த 7.5 சதவீத ஒதுக்கீடு 405 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைப்பதை உத்தரவாதப்படுத்தியிருக்கிறது என்பது எந்தளவிற்கு உண்மையோ அந்தளவிற்கு மருத்துவராக வேண்டும் எனக் கனவு காணும் அரசுப் பள்ளி மாணவர்களின் குடும்பங்களின் மீது பொருளாதாரச் சுமையை ஏற்றி வைக்கும் என்பதும் உண்மையாகும். குறிப்பாக, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்படும் மாணவர்களுக்கு அரசு உதவிகள் கிடைத்தாலும், அவர்களது குடும்பங்கள் பெரும் கடன் சுமையில் சிக்குவது தவிர்க்க முடியாதது. எனவே, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இன்னும் வலுவாக எழுப்ப வேண்டும் என்பதைத் தான் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டிற்குப் பிறகான நிலைமைகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

நீட் தேர்வை ரத்து செய்யக் கோருவதோடு, கல்வி தனியார்மயமாகியிருக்கும் சூழலில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் உரிய இட ஒதுக்கீட்டை நிர்ணயித்துத் தொடர வேண்டும் என்றும் கோர வேண்டும்.

இந்த உடனடிக் கோரிக்கைகளுக்காக மாணவர்களையும் பெற்றோர்களையும் அணி திரட்டுவதை முதன்மைப்படுத்துவதற்குப் பதிலாக, அரசுப் பள்ளி மாணவர்கள் இந்த இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு ஏற்ற விதத்தில் அவர்களுக்கு உதவுவதை முன்னிலைப்படுத்துவதையும்; நீட் தேர்வைத் தடுத்து நிறுத்துவதில் படுதோல்வியடைந்து நிற்கும் அ.தி.மு.க., தனது தோல்வியை மறைத்துக் கொள்ள இந்த 7.5 சதவீத இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதையும் அனுமதிக்கக் கூடாது.

● ரஹீம்

# "எனது பாவ்லோஸ் தனியொருவனாக அவர்களைத் தோற்கடித்துவிட்டான்!"

பொன் விடியல் என்ற நவீன நாஜிக் கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராக கிரீஸ் நாட்டு மக்கள் நடத்திய போராட்டங்களின் விளைவாக, அப்பாசிசக் கட்சியின் தலைவர்கள் கிரீஸ் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

"எனது பாவ்லோஸ் தனியொருவனாக அவர்களைத் தோற்கடித்துவிட்டான்!" - இதுவொரு அசாதாரணமான வெற்றி முழக்கம். இவ்வெற்றி முழக்கத்தைக் கண்ணீர் மல்க ஏதென்ஸ் நகர நீதிமன்றத்தில் முழங்கியவர் முற்போக்கு ராப் பாடகர் பாவ்லோஸ் ஃபைஸாஸின் தாய் மேக்டா. அதேசமயத்தில் அந்நீதிமன்றத்திற்கு வெளியே கூடியிருந்த 50,000-க்கும் அதிகமான தொழிலாளர்களும், ஆசிரியர்களும், பல்வேறு இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவாளர்களும், பொதுமக்களும், "நாஜிக்களைச் சிறையில் அடை!", "பயந்தால் வெற்றிபெற முடியாது!" என முழக்கமிட்டனர்.

கிரீஸ் நாட்டில் செயல்பட்டு வந்த பொன் விடியல் (Golden Dawn) என்ற நவீன நாஜிக் கட்சி ஒரு கிரிமினல் குற்றக் கும்பல் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, அக்கட்சியின் ஒட்டுமொத்த உயர்மட்டத் தலைமையும் ஏதென்ஸ் நகர குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட அக்டோபர் 7, 2020 அன்று அந்நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் அரங்கேறிய அற்புதமான காட்சி இது.

இத்தீர்ப்பு நவீன நாஜிக் கட்சியான பொன் விடியலைக் கலகலக்க வைத்துவிட்டாலும், "பாசிச அபாயம் இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை" என்ற பிரச்சாரத்தை அந்நாட்டின் இடதுசாரி கட்சிகளும், முற்போக்கு அறிவுத் துறையினரும் தொழிலாளர்களும் பொதுமக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல ஆயுத்தமாகி வருகின்றனர்.

பாசிச எதிர்ப்புப் போராளியும் ராப் பாடகருமான பாவ்லோஸ் ஃபைஸாஸ்.



அதே வேளையில், அந்நாஜிக் கும்பலை மறைமுகமாக ஆதரித்து வந்த கிரீஸின் ஆளுங்கும்பலோ இத்தீர்ப்பை வெளிப்படையாக எதிர்க்க முடியாமல் ஆதரிப்பது போல பாவனை செய்து வருகிறது. மேலும், இத்தீர்ப்பை கம்யூனிஸ்டுகளுக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதிப் பீதியடைந்துள்ள ஆளும் வர்க்கத்தின் எடுபிடிகள், "தீவிர வலதுசாரிக் கட்சியின் தலைவர்கள் தண்டிக்கப்பட்டதைப் போலவே, தீவிர இடதுசாரிக் கட்சித் தலைவர்களும் தண்டிக்கப்பட வேண்டும்" என்ற விஷமத்தனமான பிரச்சாரத்தை நடத்தத் தொடங்கியுள்ளனர்.

கிரீஸ் நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் முன்னும் இப்பொழுது இந்தக் கேள்விதான் எழுப்பப்படுகிறது. நீங்கள் எந்தப் பக்கம், தேனீக்கள் பக்கமா அல்லது ஓநாய்கள் பக்கமா?

❍

கிரீஸில் நவீன நாஜிக் கட்சி, அதனின் பாசிச கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டதைக் கேள்விப்படும்போது, நமது நாட்டில் இந்து மதவெறி அமைப்புகளின் தலைவர்களும் அவர்களது அடியாட்படையும் கடந்த முப்பது ஆண்டுகளாக நடத்தியிருக்கும் பாசிச கிரிமினல் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படாமல், சட்டப்படியே விடுதலை செய்யப்பட்டிருப்பதையும்; இந்து மதவெறியர்கள் குற்றக் கும்பலாக மக்கள் மத்தியில் அம்பலமாகாமல், அப்பழுக்கற்ற தேசியத் தலைவர்களாகப் பூனைப் படை பாதுகாப்போடு உலா வருவதையும் ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. இதற்கான பின்னணியையும் காரணத்தையும் ஆராயும் முன், பொன் விடியலின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் சுருக்கமாகப் பார்த்துவிடுவோம்.

நாஜிசத்தின் துதிபாடியும், நாஜிக்கள் நடத்திய யூத இனப் படுகொலையை



*"எனது பாவ்லோஸ் தனியொருவனாக அவர்களைத் தோற்கடித்துவிட்டான்!"*

**— இதுவொரு அசாதாரணமான வெற்றி முழக்கம். இவ்வெற்றி முழக்கத்தைக் கண்ணீர் மல்க ஏதென்ஸ் நகர நீதிமன்றத்தில் முழங்கியவர் முற்போக்கு ராப் பாடகர் பாவ்லோஸ் ஃபைஸாஸின் தாய் மேக்டா.**

மறுக்கும் கும்பலைச் சேர்ந்தவருமான நிகோலாவோஸ் மிக்கேலோலியாகோஸ் என்ற பாசிஸ்டால் பொன் விடியல் கட்சி 1980-களில் தொடங்கப்பட்டாலும், அக்கட்சி 2008-க்குப் பின் கிரீஸில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டுதான் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. அச்சமயத்தில் கிரீஸை அதுவரை ஆண்டு வந்த ஆளும் வர்க்கக் கட்சிகள் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்திருந்தன என்பதோடு, நகர்ப்புற உதிரிப் பாட்டாளி வர்க்கம் மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்குப் பிரிவு மத்தியில் பொன் விடியல் செல்வாக்குப் பெறுவதற்கான சூழலையும் ஏற்படுத்தியிருந்தன.

இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் திசை திருப்ப அண்டை நாடுகளான துருக்கி, மாசிடோனியா ஆகியவற்றுக்கு எதிராகத் தேசிய வெறியைத் தூண்டிவிட்டு வந்த ஆளும் வர்க்கக் கட்சிகள், வேலைவாய்ப்பு தேடி எகிப்திலிருந்து வெளியேறி கிரீஸில் தஞ்சமடைந்திருந்த எகிப்திய மீனவர்களை, கிரீஸ் மக்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கவந்த எதிரியாகச் சித்தரித்து வந்தன. இந்த தேசிய வெறியையும், செயற்கையாக உருவாக்கப்பட்ட எதிரிகளையும் பயன்படுத்திக் கொண்டுதான் பொன் விடியல் கட்சி செல்வாக்குப் பெறத் தொடங்கியது.

இந்து மதவெறியோடு, பாகிஸ்தானுக்கு எதிரான இந்து தேசிய வெறியைக் கிளறிவிடுவது; வங்கதேச முஸ்லிம் அகதிகளைச் சட்டவிரோத ஊடுருவல் பேர்வழிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்தரிப்பது என்ற ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.வின் அரசியலோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பொன் விடியல் கட்சியின் சித்தாந்தத்தையும் அரசியல் நடவடிக்கைகளையும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஆர்.எஸ்.எஸ். தனது அரசியல் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள ஒருபுறம் தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. என்றொரு அரசியல் கட்சியையும், மற்றொருபுறம் முஸ்லிம்களையும் முற்போக்கு அறிவுத்துறையினரையும் தாக்க குண்டர் படைகளையும் உருவாக்கி இறக்கிவிட்டிருப்பதைப் போலவே, பொன் விடியலும் இயங்கி வந்தது. அந்நவீன நாஜிக் கட்சி ஒருபுறம் தன்னைத் தேசியவாதக் கட்சியாகக் காட்டிக்கொள்ள தேர்தல்களில் போட்டியிட்ட அதேசமயம், மற்றொருபுறம் எகிப்திய மீனவர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் தாக்க குண்டர் படையினைக் கட்டியிருந்தது.

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மே 2012 நாடாளுமன்றத் தேர்தல் அக்கட்சிக்குப் பெரும் திருப்பு முனையாக அமைந்தது. அத்தேர்தலில் பதிவான வாக்குகளில் 7.0 சதவீத வாக்குகளைப் பெற்ற அக்கட்சிக்கு 21 நாடாளுமன்ற இடங்கள் கிடைத்தன. அதன் பின் நடந்த மூன்று தேர்தல்களிலும் (ஜூன் 2012, ஜனவரி 2015, செப்.2015) இரட்டை இலக்க இடங்களை வென்றது அக்கட்சி.

இந்த அரசியல் செல்வாக்கை பொன் விடியல் கட்சி இரண்டு வழிகளில் பயன்படுத்திக் கொண்டது. போலிஸ், இராணுவம், சிவில் அதிகார வர்க்கம் மற்றும் திருச்சபைகளில் தனக்கான ஆதரவை நிறுவிக்கொண்ட அதேசமயம், இந்த ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டு தெருக்களில் எகிப்திய மீனவர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் கம்யூனிஸ்டுகளையும் குறிவைத்துத் தாக்குவதைத் தீவிரப்படுத்தியது.

இத்தாக்குதல்களின் மூலம் கிரீஸ் சமூகத்தில் பாசிச பயங்கரவாத பீதியை உருவாக்க முயன்ற அதேசமயம், தேசிய வெறியைத் தூண்டிவிடுவதன் மூலம் செல்வாக்கு இழந்துவிட்ட வலதுசாரி ஓட்டுக்கட்சிகளின் இடத்தைப் பிடித்துவிடுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வந்தது பொன் விடியல். கிரீஸின் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்திற்கு பொன் விடியலின் அரசியல் எழுச்சியும்




> "இடதுசாரி தொழிற்சங்கங்கள் மற்றும் முற்போக்கு அறிவுத்துறையினர் இவ்வழக்கையொட்டி கிரீஸெங்கும் நடத்திய ஆர்ப்பாட்டங்களும், கருத்தரங்குகளும் வழக்கை முறையாக நடத்தவில்லை என்றால், அது பொதுமக்களின் கிளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுத்துவிடும் என்ற நிர்பந்தத்தை அரசாங்கத்திற்கு உருவாக்கின. குறிப்பாக, வழக்கு விசாரணையின்போது நாஜிக் கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராகக் கிடைத்த ஒவ்வொரு சாட்சியத்தையும் பொதுமக்களின் மத்தியில் பிரச்சாரமாகக் கொண்டு சென்றதன் மூலம், அந்நாஜிக் கும்பலை ஆதரித்துவந்த பிரிவினர்கூட அவர்களைக் கைவிடும் நிலையை உருவாக்கின."

சமூகத்தில் அதன் ஆதரவு தளம் விரிவடைவதும் தேவையாக இருந்ததால், அரசு இயந்திரம் அதன் வெறுப்பு அரசியல் நடவடிக்கைகளையும் கிரிமினல் குற்றங்களையும் கண்டும் காணாமல் நடந்துகொண்டது. நாடாளுமன்ற கம்யூனிஸ்டு கட்சிகள் பொன் விடியலின் நடவடிக்கைகளை ஆளும் வர்க்கத்திற்குள் நிலவும் முரண்பாடாகத்தான் கருதினார்களேயொழிய, பாசிச அதிகாரம் நிறுவப்படுவதை நோக்கி நாடு தள்ளப்படுவதாக அக்கட்சிகள் உணரவில்லை. தேர்தல்களுக்கு அப்பாலும் செயல்படும் புரட்சிகர கம்யூனிஸ்டுகளும் முற்போக்கு அறிவுத்துறையினரும்தான் இப்பாசிச அபாயத்தை உணர்ந்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில்தான், 2013-ஆம் ஆண்டில் ராப் பாடகர் பாவ்லோஸ் ஃபைஸாஸின் படுகொலை நடந்தது. பாவ்லோஸ் தனது இசை நிகழ்ச்சிகளில் பொன் விடியலின் குறுகிய தேசிய வெறியையும் வெறுப்புப் பேச்சுக்களையும் அம்பலப்படுத்திப் பாடி வந்தார். இந்து மதவெறிக் கும்பல் தபோல்கர், கல்புர்கி, பன்சாரே, கௌரி லங்கேஷ் ஆகியோரைப் படுகொலை செய்ததன் மூலம் தம்மை எதிர்க்கும் அறிவுத்துறையினர் மத்தியில் பீதியை உருவாக்க முயன்றதைப் போலவே பாவ்லோஸின் படுகொலையும் நடந்தது. அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றால், பாவ்லோஸ் தெருவில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

எனினும், நவீன நாஜிக் கும்பல் எதிர்பார்த்ததைப் போல பாவ்லோஸின் படுகொலை கிரீஸ் மக்களிடையே பீதியை உருவாக்கவில்லை. மாறாக, பொன் விடியலுக்கு எதிராகத் தொழிலாளர்கள், அறிவுத்துறையினர் மத்தியில் கனன்று கொண்டிருந்த வெறுப்பையும் கோபத்தையும் கிளறிவிட்டது. நவீன நாஜிக் கும்பல் மட்டுமின்றி, அப்பொழுது கிரீஸை ஆண்டுகொண்டிருந்த வலதுசாரி அரசாங்கமும் பாவ்லோஸின் படுகொலையை அரசியலற்ற தனிப்பட்ட படுகொலையாகக் காட்டிவிடவே முயன்றது. எனினும், இப்படுகொலைக்கு எதிராக மக்கள் மத்தியில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக அம்முயற்சியெல்லாம் தோற்றுப்போய், பாவ்லோஸின் படுகொலைக்குப் பொன் விடியலின் தலைமை மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

இவ்வழக்கு மக்களின் போராட்டத்துக்குக் கிடைத்த முதல் வெற்றி என்றால், அந்நாஜிக் கும்பல் பாவ்லோஸைப் படுகொலை செய்வதற்கு முன்பாக பாகிஸ்தானிலிருந்து கிரீஸுக்குக் குடிபெயர்ந்த ஷாஸத் லுக்மானைப் படுகொலை செய்தது மற்றும் கே.கே.ஈ. என்ற இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள் மீதும், எகிப்திய மீனவர்கள் மீதும் கொலைவெறித் தாக்குதல் நடத்தியது உள்ளிட்ட குற்ற வழக்குகளும் பாவ்லோஸ் படுகொலை வழக்கோடு இணைக்கப்பட்டது மக்களுக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றியாகும். இம்மூன்று வழக்குகளிலும் பொன் விடியல் கட்சியின் நிறுவனத் தலைவர் நிகோலாவோஸ் மிக்கேலோலியாகோஸ் மற்றும் அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டு 68 பேர் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்டன.

ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடந்துவந்த இந்த வழக்கில் முதல் இரண்டு ஆண்டுகள் முழுவதும் நாஜிக் கும்பலின் கையே ஓங்கியிருந்தது. குறிப்பாக, அதிகார வர்க்கத்திலும், அரசிலும் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டும், நீதிமன்ற வளாகத்திற்குள்ளும் வெளியேயும் பாசிச குண்டர்களைத் திரட்டி வந்து பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக வாதாடி வந்த வழக்குரைஞர்களையும் சாட்சிகளையும்

அச்சமூட்டுவதன் வழியாகவும் வழக்கை நீர்த்துப் போகச் செய்ய முயன்றது.

எனினும், இடதுசாரி தொழிற்சங்கங்கள் மற்றும் முற்போக்கு அறிவுத்துறையினர் இவ்வழக்கையொட்டி கிரீஸெங்கும் நடத்திய ஆர்ப்பாட்டங்களும், கருத்தரங்குகளும் வழக்கை முறையாக நடத்தவில்லையென்றால், அது பொதுமக்களின் கிளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுத்துவிடும் என்ற நிர்பந்தத்தை அரசாங்கத்திற்கு உருவாக்கின. குறிப்பாக, வழக்கு விசாரணையின்போது நாஜிக் கும்பலின் கிரிமினல் குற்றங்களுக்கு எதிராகக் கிடைத்த ஒவ்வொரு சாட்சியத்தையும் பொதுமக்களின் மத்தியில் பிரச்சாரமாகக் கொண்டு சென்றதன் மூலம், அந்நாஜிக் கும்பலை ஆதரித்துவந்த பிரிவினர்கூட அவர்களைக் கைவிடும் நிலையை உருவாக்கின. இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்நாஜிக் கட்சி ஒரு இடத்தைக்கூட வெல்லமுடியாமல் தோல்வியைத் தழுவியது. மேலும், பல்வேறு நகரங்களில் அது தனது அலுவலகங்களைக் கைவிடக்கூடிய நிலையும் ஏற்பட்டது.

இவ்வழக்கு விசாரணை நடந்துவந்த சமயத்தில் கிரீஸின் அரசியல் களத்தில் இரண்டு மாற்றங்கள் நடந்தன. 2015-ஆம் ஆண்டு ஜனவரியிலும், செப்டெம்பரிலும் நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் இடதுசாரிக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. 2019-ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலோ வலதுசாரிக் கட்சியான புதிய ஜனநாயகம் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமர்ந்தது. இதன் பின் இக்குற்ற வழக்குகளில் இருந்து நாஜித் தலைவர்களைக் காப்பாற்றும் முயற்சியாக, ‘‘இக்கிரிமினல் குற்ற வழக்குகளுக்கும் பொன் விடியல் கட்சித் தலைமைக்கும் தொடர்பில்லை’’ என அரசு வழக்குரைஞரை வாதாட வைத்தது, வலதுசாரி அரசு. எனினும், அந்நாஜிக் கட்சியின் சித்தாந்தத்திற்கும் இப்படுகொலைகளுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ள தொடர்பை பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக வாதாடிய வழக்குரைஞர்கள் பல்வேறு சாட்சியங்களின் வழியாக நிரூபித்ததை நீதிமன்றத்தால் மறுக்க இயலவில்லை. மேலும், நாஜிக் குற்றக் கும்பலுக்கு எதிரான இவ்வழக்கை ஐரோப்பாவின் மற்ற நாடுகளைச் சேர்ந்த முற்போக்கு-ஜனநாயக சக்திகளும் ஆதரித்து இயக்கங்களை எடுத்து வந்ததால், சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு நாஜிக் குற்றவாளிகளுக்கு ஆதரவாகத் தீர்ப்பளிக்க முடியாத நிலை கிரீஸில் உருவாகியிருந்தது.

இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த நவீன நாஜி கிரிமினல்கள் அனைவரும் கொலை உள்ளிட்ட கிரிமினல் குற்றங்களுக்காக மட்டும் தண்டிக்கப்படவில்லை. பொன் விடியல் கட்சி என்ற பெயரில் ஒரு நாஜி குற்றக் கும்பலை நடத்தி வந்தனர் என்ற அடிப்படையிலும் தண்டிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, இக்கட்சியின் நிறுவனத் தலைவர் மற்றும் ஆறு செயற்குழு உறுப்பினர்களுக்கு, நாஜி சித்தாந்த அடிப்படையில் குற்றக் கும்பலை இயக்கி வந்தனர் என்ற குற்றத்திற்காக 15 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முற்போக்கு ராப் பாடகர் பாவ்லோஸைக் கொன்ற நாஜி குற்றவாளிக்கு ஆயுட்கால சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. கிரீஸில் தஞ்சமடைந்திருக்கும் எகிப்திய மீனவர்களைத் தாக்கிய குற்றவாளிகளுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த குற்றக் கும்பலில் உறுப்பினராக இருந்தனர் என்ற அடிப்படையில் மற்ற குற்றவாளிகளுக்கு ஐந்து முதல் பத்தாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

**‘‘கிரீஸ் நீதிமன்றம், பொன் விடியல் கட்சியை நாஜி குற்றக் கும்பல் என முத்திரை குத்தி அதன் தலைவர்களைத் தண்டிக்கிறது. இந்திய நீதிமன்றங்களோ இந்து மதவெறி பாசிஸ்டுகளின் கொள்கைகளையும் சித்தாந்தங்களையுமே தீர்ப்புகளாக பாபர் மசூதி நில உரிமை வழக்கிலும், பாபர் மசூதி இடிப்பு வழக்கிலும் வழங்கின.’’**

அரசின் துணை இராணுவப் படைக்குள் ஊடுருவியிருக்கும் பொன் விடியலின் ஆதரவாளர்கள்.



இட்லரின் நாஜிசம் மற்றும் முசோலினியின் பாசிச சித்தாந்தங்களால் இனப்படுகொலையையும் கொடூர அடக்குமுறைகளையும் சந்தித்த ஐரோப்பிய நாடுகளில் பாசிசத்திற்கு எதிரான சட்டங்கள் இருந்தாலும், நவீன நாஜிசத்திற்கு எதிராக கிரீஸ் மக்களின் உணர்வுபூர்வமான போராட்டமும், அதனை ஆதரித்ததோடு தலைமையேற்றும் நடத்திய முற்போக்கு அறிவுத்துறையினர், தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் பங்களிப்பும் இல்லையென்றால் பாசிசத்திற்கு எதிரான இந்தச் சிறிய வெற்றிகூட சாத்தியப்பட்டிருக்காது.



பொன் விடியல் கட்சியின் நிறுவனத் தலைவர் நிகோலாவோஸ் மிக்கேலோலியாகோஸ்.

○

**கி**ரீஸோடு இந்தியாவை ஒப்பிட்டால் இங்குள்ள நிலைமைகள் அனைத்துமே தலைகீழாக இருக்கின்றன. அத்வானியின் ரத யாத்திரையின் போது நடத்தப்பட்ட முஸ்லிம் எதிர்ப்புக் கலவரங்கள், பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து நடந்த மும்பய் இந்து மதவெறிக் கலவரம், 1990-களின் இறுதியில் நடந்த கோவை கலவரம், 2002-இல் குஜராத்தில் நடந்த முஸ்லிம் இனப் படுகொலை, பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் முஸ்லிம்கள் தாக்கப்படுவது, பன்சாரே, கௌரி லங்கேஷ், தபோல்கர் மற்றும் கல்புர்கி படுகொலைகள், மாலேகான், சம்ஜௌதா குண்டு வெடிப்புகள் எனக் கடந்த முப்பது ஆண்டுகளில் சங்கப் பரிவாரக் கும்பலால் நடத்தப்பட்ட ஒவ்வொரு படுகொலையிலும், பயங்கரவாத கிரிமினல் குற்றங்களிலும் தொடர்புடைய ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. தலைவர்களுள் ஒருவர்கூட நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை.

கிரீஸ் நீதிமன்றம், பொன் விடியல் கட்சியை நாஜி குற்றக் கும்பல் என முத்திரை குத்தி அதன் தலைவர்களைத் தண்டிக்கிறது. இந்திய நீதிமன்றங்களோ இந்து மதவெறி பாசிஸ்டுகளின் கொள்கைகளையும் சித்தாந்தங்களையுமே தீர்ப்புகளாக பாபர் மசூதி நில உரிமை வழக்கிலும், பாபர் மசூதி இடிப்பு வழக்கிலும் வழங்கின.

கிரீஸில் பொன் விடியல் கட்சிக்கு எதிரான வழக்குகள் ஒன்றாக இணைக்கப்பட்டு நடந்ததென்றால், இந்தியாவிலோ குஜராத் முஸ்லிம் இனப் படுகொலை வழக்குகள் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்குச் சாதகமாகத் தனித்தனி வழக்குகளாக விசாரிக்கப்பட்டு இழுத்தடிக்கப்படுகின்றன. இந்த இனப்படுகொலையில் மோடியின் பாத்திரம் குறித்து, உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு மோடிக்கு யோக்கியன் பட்டத்தைக் கொடுத்தது. உச்ச நீதிமன்றமும் அதனை அங்கீகரித்தது.

பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் இந்து மதவெறிக் கும்பலால் அப்பாவி முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல்கள் ஒவ்வொன்றிலும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களே குற்றவாளிகளாக வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

அதிகார வர்க்கம், போலிஸ், நீதித்துறை உள்ளிட்ட அரசு இயந்திரம் இந்து மதவெறி பாசிசக் கும்பலுக்குச் சாதகமாக மட்டுமின்றிக் கைத்தடியாக நடந்து வருவது பல்வேறு வழக்குளில் வழியே அம்பலமாகியிருப்பது எந்தளவிற்கு உண்மையோ, அதே அளவிற்கு இவ்வழக்குகளில் நீதி மறுக்கப்பட்டு பாசிச குற்றவாளிகள் விடுதலை செய்யப்படும்போது சட்டப்பூர்வ எதிர்க்கட்சிகளும் இந்திய மக்களும் அமைதி காத்து அல்லது வெறும் அறிக்கை போரை நடத்திவிட்டு ஒதுங்கிக் கொண்டுவிடுவதையும் நாம் காணவே செய்கிறோம்.

இந்து மதவெறி பாசிச கும்பலுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரிப் பெரும் மக்கள் திரள் போராட்டங்கள் இந்தியாவில் நடந்திருக்கிறதா? பாபர் மசூதி நில உரிமை வழக்கிலும் பாபர் மசூதி இடிப்பு வழக்கிலும் தீர்ப்பு என்ற பெயரில் மாபெரும் அநீதி இழைக்கப்பட்டபோது, அதனை எதிர்த்தும் கண்டித்தும் போராடிய அமைப்புகளை விரல்விட்டு எண்ணிவிடலாம் இல்லையா!

இந்து மதவெறி பாசிஸ்டுகளை அரசியல் களத்தில் வீழ்த்துவது கிடக்கட்டும், தனிமைப்படுத்தித் தண்டிக்க வேண்டுமென்றாலும், இந்திய மக்கள் இந்து மதவெறி பாசிச எதிர்ப்பு அரசியலின் கீழ் அமைப்புரீதியாக அணிதிரட்டப்பட வேண்டும். இதனைச் சாதிக்கும் சித்தாந்தத் திறன் கொண்ட புரட்சிகர-ஜனநாயக சக்திகளோ பலவீனமாக உள்ளன. இடதுசாரிக் கட்சிகளால் வழிநடத்தப்படும் தொழிற்சங்கங்களோ தமது பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களுக்கு அப்பால் செல்ல மறுக்கின்றன. நாடாளுமன்ற இடதுசாரிக் கட்சிகளும் அறிவுத்துறையினரும் முதலாளித்துவக் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தேர்தல்களில் பா.ஜ.க.வை வீழ்த்துவதை மட்டுமே தமது அரசியல் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றனர். இந்திய அரசியல் அரங்கில் காணப்படும் இந்தப் பலவீனங்கள்தான் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பலின் பலமாகும்.

● செல்வம்

# பாபர் மசூதி இடிப்பு வழக்குத் தீர்ப்பு:

# நரியைப் பரியாக்கிய காவித் திருவிளையாடல்!

**பாபர் மசூதியை இடித்த கரசேவகர்களை இராம பக்தர்களாகவும், அத்வானி உள்ளிட்ட குற்றவாளிகளை மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க முனைந்த புனிதர்களாகவும் காட்டியிருக்கிறது, சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம்.**

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அத்வானி உள்ளிட்ட சதிக் குற்றவாளிகளை விடுவித்து வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு, வேறுவிதமாக, அதாவது குற்றவாளிகளைத் தண்டித்து வழங்கப்பட்டிருக்க வாய்ப்புண்டா? அவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தால், அத்தீர்ப்பை உ.பி. மாநிலத்தை ஆளும் ஆதித்யநாத் அரசோ அல்லது மத்திய மோடி அரசோ பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்தியிருக்குமா?

இவ்வழக்கில் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பை ஏமாற்றமளிக்கிறது என்றும், துரோகத்தனமானது என்றும் விமர்சித்துவரும் அனைத்துத் தரப்பினரும் இந்தக் கேள்விகளையும் சேர்த்தே இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். ஏனென்றால், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் அரசு அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறது என்பதையும் தாண்டி, ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்துத்துவா கருத்துக்கள் இந்திய சமூகத்திலும் அரசுக் கட்டமைப்பிலும் ஆதிக்கம் செலுத்திவரும் புதிய சனாதன இந்தியாவில் நாம் வாழ்ந்து வருகிறோம். பாபர் மசூதி இடிப்பு வழக்கில் அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பு இப்புதிய இந்தியாவின் இன்னுமொரு உதாரணம்.

''சதிக் குற்றச்சாட்டை நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் தரப்படவில்லை'' என்று மட்டும் கூறி அத்வானி உள்ளிட்ட குற்றவாளிகளை இத்தீர்ப்பு விடுதலை செய்யவில்லை. பாபர் மசூதியை இடிக்க கடப்பாரை உள்ளிட்ட ஆயுதங்களோடு வந்த கரசேவகர்களை

பாபர் மசூதி இடிப்புக்கு முன்பாக, அம்மசூதியை இடித்துத் தள்ளுவதற்காக ஆர்.எஸ்.எஸ்.-ஆல் நடத்தப்பட்ட இரகசிய ஒத்திகை.
புகைப்படம்: பிரவீன் ஜெயின்.



இராம பக்தர்களாகவும், சதிக் குற்றச்சாட்டு சாட்டப்பட்ட அத்வானி, அசோக் சிங்கால் உள்ளிட்ட குற்றவாளிகளை மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க முனைந்த புனிதர்களாகவும் காட்டியிருக்கிறது, இத்தீர்ப்பு. வாங்கிய காசுக்கு மேல் இத்தீர்ப்பு கூவியிருப்பதற்குக் காரணம், பாபர் மசூதி, ராமர் கோவில், இராமஜென்ம பூமி இயக்கம் ஆகியவற்றை இத்தீர்ப்பு இந்துத்துவா கண்ணோட்டத்தின்படி அணுகியிருப்பதுதான்.

### வெளிப்படையாகவே அரங்கேறிய சதிகள்

பாபர் மசூதி இடித்துத் தள்ளப்படுவதற்கு முதல் நாள் அத்வானி உள்ளிட்டோர் வினய் கத்தியார் வீட்டிலிருந்த ஓர் அறையில் கூடி மசூதியை இடிக்கச் சதித் திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டைப் போதிய ஆதாரங்கள் இல்லை எனக் கூறித் தள்ளுபடி செய்திருக்கிறது, சி.பி.ஐ. நீதிமன்றம். பாபர் மசூதியை இடித்துத் தள்ள வேண்டும் என்ற அந்தச் சதி அந்த ஒருநாளில்தான் தீட்டப்பட்டு அரங்கேற்றப்பட்டதா என்பதுதான் இப்பிரச்சினையில் பரிசீலிக்கப்பட வேண்டிய கேள்வி.

1949-இல் இந்து மதவெறிக் கும்பலால் உள்ளூர் அளவில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தச் சதி 1980-90 ஆம் ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ்.-ஆல் நாடு தழுவியதாக மாற்றப்பட்டது. பாபர் மசூதியை இந்துக்களின் அவமானச் சின்னமாகச் சித்தரித்து, அதனால் அதனை இடித்து ராமர் கோவிலை அங்குதான் கட்ட வேண்டும் - ''மந்திர் வஹி(ம்) பனாயேங்கே'' என்ற இந்து மதவெறி முழக்கத்தை வெளிப்படையாக முன்வைத்து ரத யாத்திரைகள்,

“அயோத்தியில் திரண்டிருந்த கரசேவகர்கள் மத்தியில் அத்வானி இந்து மதவெறியைத் தூண்டிவிடும்படி உரையாற்றினார். மசூதி இடிக்கப்பட்டபோது அத்வானியோ அல்லது மேடையிலிருந்த மற்ற தலைவர்களோ அதனைத் தடுக்க முயலவில்லை. மாறாக, மசூதி இடிக்கப்பட்டவுடன், அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் இனிப்புகளைப் பரிமாறிக்கொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்.”

– அத்வானியின் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட அஞ்சு குப்தா ஐ.பி.எஸ்.

பொதுக்கூட்டங்கள், தேர்தல் பிரச்சாரங்களை அப்பத்தாண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் நடத்தி வந்ததை யாராலும் மறுக்க முடியுமா?

1980-களின் இறுதியில் அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தில் ராமர் கோவிலைக் கட்டுவதைக் கட்சித் தீர்மானமாக இயற்றியது, பா.ஜ.க. அதனைத் தொடர்ந்து அத்வானி தலைமையில் குஜராத்-சோமநாதர் ஆலயத்தில் தொடங்கி உ.பி.யின் அயோத்தியில் முடிவடையும் ரத யாத்திரை நடத்தப்பட்டது. அந்த யாத்திரையின்போது, ‘‘நான் அமைதிக்காக யாத்திரை நடத்தவில்லை’’ எனக் கூறி, முசுலிம் எதிர்ப்பு இந்து மதவெறியைத் தூண்டிவிட்டார், அவர். அத்வானியின் ரத யாத்திரை நூற்றுக்கணக்கான முஸ்லிம் பிணங்களின் மீது ஏறித்தான் முன்னேறிச் சென்றது.

ராமர் கோவிலைக் கட்டுவதற்காக நாடெங்கிலுமிருந்து செங்கலைப் பெற்றுக் கொண்டு வருவது என்ற போர்வையில் பாபர் மசூதிக்கு எதிரான வரலாற்றுத் திரிபுகளும், முசுலிம் எதிர்ப்பும் இந்தியாவெங்கும் பிரச்சாரமாக எடுத்துச் செல்லப்பட்டது. 1990-ஆம் ஆண்டு அயோத்தியில் கரசேவை என்ற பெயரில் நடத்தப்பட்ட பாபர் மசூதி இடிப்பு ஒத்திகை முஸ்லிம் எதிர்ப்பு இந்து மதவெறிக் கலவரத்தில் முடிந்தது. அக்கலவரம் நடந்துமுடிந்த இரண்டாம் ஆண்டே - 1992, டிசம்பர் 6 அன்று ராமஜென்ம பூமியில் அடையாள கரசேவை நடத்தப் போகிறோம் என உச்ச நீதிமன்றத்திலும் தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலிலும் வாக்குறுதி கொடுத்துவிட்டு, மறுபுறம் நானூறு ஆண்டுகள் பழமையான அம்மசூதியைச் சதித்தனமாக இடித்துத் தள்ளியதோடு, அவ்வளாகத்தினுள் சட்டவிரோதமாகத் தற்காலிக ராமர் கோவிலையும் கட்டி முடித்தது, ஆர்.எஸ்.எஸ்.

பாபர் மசூதியின் முதல் மாடம் மதியம் 2.55-க்கும், இரண்டாவது மாடம் அடுத்த இருபதாவது நிமிடத்தில் - 3.15-க்கும், மூன்றாவது மாடம் 4.50-க்கும் இடித்துத் தள்ளப்பட்டு, அந்த இடிபாடுகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து மண்ணாலான ஒரு மேடை உருவாக்கப்பட்டு, அதில் தற்காலிக ராமர் கோவிலும் அமைக்கப்பட்டது. ஒரே நாளில், ஒரு குறுகிய நேரத்திற்குள் நடந்து முடிந்த இவையெல்லாம் திட்டமிடப்படாமல், தன்னெழுச்சியாக நடைபெற்றிருக்க முடியுமா? பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுதங்களோடு இறக்கிவிடப்பட்ட கரசேவகர்கள் அல்லாமல், திடீரென உணர்ச்சிவசப்பட்டுப் போன அராஜக கும்பலாலா இதனைச் செய்து முடித்திருக்க முடியும்?

அடையாள கரசேவையை நடத்துவதற்கும் கரசேவையின்போது பஜனைகளையும் கீர்த்தனைகளையும் பாடுவதற்கும் ஆயிரக்கணக்கான இந்து மதவெறியர்களைக் கரசேவகர்கள் என்ற பெயரில் திரட்டி வரவேண்டிய அவசியம் ஏன் வந்தது? அவ்வாறு திரட்டப்பட்ட கரசேவகர்கள் சூடம், சாம்பிராணி, சப்பளாகட்டையோடு வரவில்லை; ஒரு கட்டிடத்தை இடித்துத் தள்ளுவதற்குத் தேவையான கடப்பாரை, மண்வெட்டி, வடக்கயிறு உள்ளிட்ட ஆயுதங்களை எடுத்து வந்தனர். மசூதியை இடித்துத் தள்ளவேண்டும் என்ற வெறியோடும் திட்டத்தோடும் திரட்டிக் கொண்டுவரப்பட்ட அக்கும்பலை மேலும் உசுப்பேற்றி உரையாற்றினார், அத்வானி.

மசூதி இடிக்கப்படுவதற்கு முன்பாக பஜ்ரங் தள் தலைவர் வினய் கத்தியாரைச் சந்தித்து கரசேவைக்கான ஏற்பாடுகள் குறித்துக் கேட்ட ஃபிரண்ட்லைன் ஆங்கில இதழைச் சேர்ந்த பத்திரிகையாளர் வெங்கடேஷ் ராமகிருஷ்ணன், அச்சந்திப்பு குறித்து லக்னோ சி.பி.ஐ. நீதிமன்றத்திலும், லிபரான் கமிசனிலும் சாட்சியம் அளித்திருக்கிறார். அச்சாட்சியத்தில், ‘‘பாபர் மசூதியின் கட்டிட அமைப்பை ஆய்வு செய்துவிட்டதாகவும், அம்மசூதியை ஓரிரு மணி நேரத்திற்குள் இடித்துத்

**நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட முதன்மைக் குற்றவாளிகள் அத்வானி, உமா பாரதி மற்றும் மறைந்த அசோக் சிங்கால்** (இடமிருந்து வலமாக).



தள்ளுவதற்குரிய சிறப்புக் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, அக்குழுக்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருப்பதாகவும், அக்குழுக்கள் தற்கொலைப் படையாகச் செயல்படவும் தயங்காது'' என்றும் வினய் கத்தியார் தன்னிடம் தெரிவித்ததாக வாக்குமூலம் அளித்திருக்கிறார், வெங்கடேஷ் ராதாகிருஷ்ணன். மசூதி திட்டமிட்ட வகையில் இடிக்கப்பட்டதை, ''டிசம்பர் 6, 1992'' எனும் தலைப்பில் கட்டுரையாகவும் எழுதியிருக்கிறார், அவர். (ஃபிரண்ட்லைன், டிசம்பர் 6, 2019)

மசூதி திட்டமிட்ட வகையில் தொழில்நுட்ப நேர்த்தியோடு இடித்துத் தள்ளப்படுவதைப் பத்திரிகையாளர்கள் எவ்விதத்திலும் பதிவு செய்துவிடக் கூடாது என்ற நோக்கில், மசூதி இடிக்கப்படுவது தொடங்கியவுடனேயே பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் தொடுத்து, அவர்களைப் பத்திரிகையாளர் மாடத்திலிருந்து கரசேவகர்கள் துரத்தியடித்ததையும், குறிப்பாக, மசூதி இடிக்கப்படுவது தொடர்பாகப் புகைப்பட சாட்சியங்கள் இருந்துவிடக் கூடாது என்ற திட்டத்தோடு, பத்திரிகையாளர்களின் புகைப்படக் கருவிகள் அடித்து நொறுக்கப்பட்டதையும் அக்கட்டுரையில் விவரித்திருக்கிறார், வெங்கடேஷ் ராதாகிருஷ்ணன்.

அத்வானி அயோத்திக்குள் நுழைந்த டிசம்பர் 5 அன்றும், மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் 6 அன்றும், அவரின் சிறப்புப் பாதுகாப்பு அதிகாரியாக (கல்யாண் சிங் அரசால்) நியமிக்கப்பட்டிருந்தவர் அஞ்சு குப்தா. பெண் ஐ.பி.எஸ். அதிகாரியான அவர் மட்டும்தான், இப்படுபாதகச் செயல் குறித்து சாட்சியம் அளித்த ஒரே அதிகாரி. அவர் லிபரான் கமிசனில் அளித்த சாட்சியத்தில், ''அயோத்தியில் திரண்டிருந்த கரசேவகர்கள் மத்தியில் அத்வானி இந்து மதவெறியைத் தூண்டிவிடும்படி உரையாற்றினார். மசூதி இடிக்கப்பட்டபோது அத்வானியோ அல்லது மேடையிலிருந்த மற்ற தலைவர்களோ அதனைத் தடுக்க முயலவில்லை. மாறாக, மசூதி இடிக்கப்பட்டவுடன், அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் இனிப்புகளைப் பரிமாறிக்கொண்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டனர்'' என வாக்குமூலம் அளித்திருக்கிறார்.


தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலிடம் வாக்குறுதி அளித்த கையோடு பத்திரிகையாளர்களைச் சந்தித்த கல்யாண் சிங், ''கோவிலைக் கட்டுவதற்குத்தான் தடை இருக்கிறதேயொழிய, மசூதியை இடிப்பதற்கு அல்ல'' என எகத்தாளமாக பேட்டி அளித்தார். முதலமைச்சர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, கரசேவகர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கூடாதென எழுத்துப்பூர்வ உத்தரவை அளித்து, ஆர்.எஸ்.எஸ். கும்பல் எவ்விதமான தடையும் இன்றி, உ.பி.மாநில போலிசு பாதுகாப்போடு மசூதியை இடிப்பதை உத்தரவாதப்படுத்தினார் அவர்.

**''தலைவர்கள் கரசேவகர்களை மசூதியை இடிக்கும்படித் தூண்டிவிட்டு உரையாற்றினார்கள் எனக் கூறப்பட்டாலும், பல்லாயிரக்கணக்கான கரசேவகர்கள் திரண்டிருந்த நிலையில், தூசு மண்டலம் எழும்பியிருந்த சூழ்நிலையில் யார், எதைப் பேசினார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. குரல் பரிசோதனையும் ஒத்துப் போகவில்லை''**

– எனச் சதிக் குற்றவாளிகளின் வக்கீலாக வாதாடியிருக்கிறார், சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.யாதவ்.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக சங்கப் பரிவார அமைப்புகளைச் சேர்ந்த உமா பாரதி, வினய் கத்தியார், ஆச்சார்யா தர்மேந்திரா உள்ளிட்ட 23 பேரிடம் இரகசிய நேர்காணல் (sting operation) நடத்திய கோப்ரா போஸ்ட் என்ற இணைய இதழ், ''கரசேவகர்களுள் 38 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குக் கட்டிடத்தின் மீது ஏறுதல், கோடரி, கடப்பாரை போன்ற ஆயுதங்களைக் கொண்டு கட்டிடங்களை இடித்தல் உள்ளிட்ட பல பயிற்சிகள் குஜராத் மாநிலத்தில் உள்ள சர்கேஜ் எனுமிடத்தில் அளிக்கப்பட்டதையும், முன்னாள் இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் இப்பயிற்சி நடத்தப்பட்டதையும், பாரம்பரிய ஆயுதங்களைப் பயன்படுத்தி மசூதியை இடிக்க முடியாவிட்டால், டைனமேட்டைப் பயன்படுத்தி மசூதியைத் தரைமட்டமாக்கும் தனித் திட்டம்

**பாபர் மசூதியை இடிக்கும் முன் அதன் மீதேறி நின்று எக்காளமிடும் சங்கப் பரிவாரக் கும்பல்.** (கோப்புப் படம்)



> “பாபர் மசூதியைக் கைப்பற்றும் தனது சதித் திட்டத்தை 1949 தொடங்கிய இந்து மதவெறிக் கும்பல் 1992 அம்மசூதியைச் சட்டவிரோதமாக இடித்துத் தள்ளியது. அன்று தொடங்கி இன்று வரையில் உச்ச நீதிமன்றம், அலகாபாத் உயர் நீதிமன்றம், ஃபைசாபாத் மாவட்ட நீதிமன்றம் ஆகியவை இப்பிரச்சினையில் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குச் சாதகமாவே அமைந்துள்ளன. அதாவது, ராமர் கோவில் என்ற ஆர்.எஸ்.எஸ். அரசியல் திட்டத்தைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிக் கொடுக்கும் கைக்கூலிகளாக இந்நீதிமன்றங்கள் செயல்பட்டிருப்பதை அத்தீர்ப்புகள் அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.”

வகுக்கப்பட்டிருந்ததையும்’’ உள்ளிட்டு, இச்சதி தொடர்பான பல உண்மைகளை அந்த 23 பேரும் தமது நிருபர்களிடம் பகிர்ந்துகொண்டதை வீடியோவாக வெளியிட்டிருக்கிறது.

இந்த சாட்சியங்கள் அனைத்தையும் எந்தவொரு விசாரணை அமைப்பும் தோண்டித் துருவிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமே இன்றி, இவை அனைத்தும் பத்திரிகை செய்திகள், புகைப்பட மற்றும் வீடியோ பதிவுகள் மற்றும் நேரடிச் சாட்சியங்கள் வழியாகப் பொதுவெளியில் காணக் கிடைக்கின்றன.

பாபர் மசூதி இடிப்பு தொடர்பாக விசாரணை நடத்த அமைக்கப்பட்ட லிபரான் கமிசன், இந்தச் சாட்சியங்கள் அனைத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தியதோடு, ராமஜென்ம பூமி இயக்கத்தை முன்வைத்து ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் திரட்டிய நிதி ஆதாரங்களை ஆராய்ந்தும் சதிக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியதோடு, அத்வானி மட்டுமின்றி, ‘‘மிதவாதி’’ வாஜ்பாயியிக்கும் இச்சதியில் தொடர்புண்டு என அறிக்கை அளித்தது.

‘‘மசூதியை இடிப்பது தொடர்பான சதியைத் தீட்டியவர்கள் ஒரு சிறு கும்பலாக இருக்கலாம். ஆனால், அச்சதித் திட்டம் அத்வானி உள்ளிட்ட தலைவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது’’ எனக் குறிப்பிட்டது, லிபரான் கமிசன்.

அத்வானி உள்ளிட்ட தலைவர்கள் வினய் கத்தியார் வீட்டில் சந்தித்ததையும் தாண்டி இத்துணை சாட்சியங்கள் இருந்தும் சதிக் குற்றச்சாட்டு நிராகரிக்கப்படுகிறது எனில், இந்திய நீதித்துறை மற்றும் விசாரணை அமைப்புகளின் நேர்மை, நடுநிலைத்தன்மை பற்றிக் கூறப்படுவதெல்லாம் அண்டப்புளுகு தவிர வேறல்ல. இந்த அண்டப்புளுகிற்கு இந்தத் தீர்ப்பு முதல் உதாரணமும் அல்ல, இறுதி உதாரணமாக அமையப் போவதுமில்லை.

**தீர்ப்பா, ஆர்.எஸ்.எஸ். அறிக்கையா?**

இரு பத்தாண்டுகளுக்கு முன்பு புனையப்பட்ட பாபர் மசூதி இடிப்பு வழக்கை விசாரணை தொடங்கிய நிலையிலேயே ஒப்புக்குச் சப்பாணியாக மாற்றும் சதிகள் நீதிமன்றம், சி.பி.ஐ. ஆகியவற்றின் மூலமே அரங்கேற்றப்பட்டன. குறிப்பாக, விசாரணையின் ஒரு கட்டத்தில், வாஜ்பாயி இந்தியப் பிரதமராகவும் அத்வானி உள்துறை அமைச்சராகவும் இருந்த சமயத்தில், அத்வானி உள்ளிட்டோர் மீதான சதிக் குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. அத்வானி அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். ரேபரேலி நீதிமன்றம், லக்னோ நீதிமன்றம், அலகாபாத் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் எனப் பந்தாடப்பட்டுக் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்ட இந்த வழக்கில் மூன்றாண்டுகளுக்கு முன்புதான் சதிக் குற்றச்சாட்டிற்கு முகாந்திரம் இருப்பதை உறுதிப்படுத்திய உச்ச நீதிமன்றம், வழக்கைத் தினந்தோறும் விசாரிக்க வேண்டும், நீதிபதியை மாற்றக் கூடாது, இரண்டு ஆண்டுகளுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளையும் விதித்தது.

உச்ச நீதிமன்றத்தின் இத்தலையீடு காரணமாகத் தாமதமானாலும் நீதி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தவர்களின் நெஞ்சில் கடப்பாரையை இறக்கியிருக்கிறது, சி.பி.ஐ. நீதிமன்றத்தின் தீர்ப்பு. குறிப்பாக, ‘‘ராமர் கோவிலைக் கட்டுவதற்காக பாபர் மசூதி வளாகமே குழந்தை ராமரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு, மசூதி இடிப்பு வழக்கு பொருளற்றதாகிவிட்டது’’ எனக் கூறி வந்த இந்து மதவெறிக் கும்பலின் கருத்தை ஆமோதிக்கும் வண்ணம், குற்றவாளிகளுக்கு எதிரான ஒவ்வொரு சாட்சியத்தையும் நொண்டிச் சாக்குகளைக் கூறி நிராகரித்திருக்கிறது, சி.பி.ஐ. நீதிமன்றம்.

கரசேவை என்ற போர்வையில் கடப்பாரை, சுத்தியல், மண்வெட்டியோடு திரட்டப்பட்ட காவி குண்டர்கள்.



''மசூதி இடிப்பு குறித்த பத்திரிகை செய்திகளின் நகலைத் தாக்கல் செய்த சி.பி.ஐ., அவற்றின் அசல் பதிப்புகளைத் தாக்கல் செய்யவில்லை.''

''மசூதி இடிப்பு தொடர்பான புகைப்படங்களையும், வீடியோ ஒளிப்படங்களையும் தாக்கல் செய்த சி.பி.ஐ., அவற்றின் நெகட்டிவ்களைத் தாக்கல் செய்யவில்லை.''

''வீடியோ ஒலிப்படப் பேழைகளில் பதிவாகியிருக்கும் காட்சிகள் தெளிவாக இல்லை.''

''தலைவர்கள் கரசேவகர்களை மசூதியை இடிக்கும்படித் தூண்டிவிட்டு உரையாற்றினார்கள் எனக் கூறப்பட்டாலும், பல்லாயிரக்கணக்கான கரசேவகர்கள் திரண்டிருந்த நிலையில், தூசு மண்டலம் எழும்பியிருந்த சூழ்நிலையில் யார், எதைப் பேசினார்கள் என்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. குரல் பரிசோதனையும் ஒத்துப் போகவில்லை.''

''பத்திரிகை செய்திகள், வீடியோ ஒலிப்படப் பேழைகள் எனப் பல ஆதாரங்கள் தரப்பட்டாலும், எந்தவொரு ஆதாரமும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஒரு தனி அறையில் கூடி சதித் திட்டம் தீட்டினார்கள் என்பதை நிரூபிக்கவில்லை.''

''பத்திரிகையாளர்களுக்குத் தனி மேடை அமைத்து, அவர்களை அழைத்துச் சென்று அமரவைத்தது ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள்தான். குற்றஞ்சாட்டப்பட்ட தலைவர்கள் மசூதியை இடிக்கச் சதித் திட்டத்தைத் தீட்டி வைத்திருந்தால், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் இப்படி நடந்துகொண்டிருப்பார்களா?'' - எனச் சதிக் குற்றவாளிகளின் வக்கீலாக வாதாடியிருக்கிறார், சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.யாதவ்.

தீர்ப்பை விமர்சிக்கலாம், எனினும், தீர்ப்பிற்கு, அதனை வழங்கிய நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்பார்கள். ஆனால், நீதிபதி எஸ்.கே.யாதவ் அளித்திருக்கும் இந்தத் தீர்ப்பு குற்றவாளிகளை விடுவித்துவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு மட்டுமின்றி, பாபர் மசூதி இடிக்கப்பட்டதைக் காவிக் கண் கொண்டுதான் அணுகியிருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு அத்தீர்ப்பிலேயே ஆதாரங்கள் உள்ளன.

பாபர் மசூதி இடிக்கப்பட்டது தற்செயலான நிகழ்வு என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் கருத்து. இந்தக் கருத்தையே பிரதிபலித்திருக்கும் இத்தீர்ப்பு, ''கரசேவகர்களிடையே இருந்த ஒரு அராஜகக் கும்பல் திடீரெனக் கிளர்ச்சியில் இறங்கி மசூதியை இடித்துவிட்டதாக''க் குறிப்பிடுவதோடு, ''இந்த அராஜக கரசேவகர்கள் இராம பக்தர்கள் அல்ல; அவர்கள் இராம பக்தர்களாக இருந்திருந்தால் அசோக் சிங்காலின் பேச்சுக்குக் கட்டுப்பட்டிருப்பார்கள்'' எனக் கூறி, சதிக் குற்றஞ்சாட்டப்பட்ட தலைவர்களைப் புனிதர்களாக்குகிறது.

**''பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரணை நடத்திய லிபரான் கமிசன் அறிக்கை இதுவரையில் வெளியிடப்படவுமில்லை; சதி குறித்த அக்கமிசனின் முடிவுகள் செயல்படுத்தப்படவுமில்லை. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு சிவசேனா கும்பலால் திட்டமிட்டு நடத்தப்பட்ட மும்பய்க் கலவரம் தொடர்பான சிறீகிருஷ்ணா கமிசனின் முடிவுகளும் செயல்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில், மசூதி இடிப்பு வழக்கின் மேல்முறையீட்டில் நியாயம் கிடைத்துவிடும் என நம்புவதற்கு இடமுண்டா?''**

''பாபர் மசூதி வழிபாட்டுத் தலமல்ல; அதுவொரு சர்ச்சைக்குரிய கட்டிடம்'' என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் கருத்து. இதனை வழிமொழியும்விதமாக இத்தீர்ப்பு, ''தொழுகை நடத்துவது கைவிடப்பட்டதால், மத வழிபாட்டுத் தலத்தை இடித்த குற்றம் நிகழவில்லை'' எனக் குறிப்பிடுகிறது. மூளையும் மனதும் காவிமயமானவர்களால் மட்டும்தான் இப்படிக் குறிப்பிட்டுத் தீர்ப்பு எழுத முடியும்.

### ஆர்.எஸ்.எஸ்.இன் கைத்தடிகளாக நீதிமன்றங்கள்

''சுதந்திர'' இந்தியாவில் பாபர் மசூதியைக் கைப்பற்றிக்கொள்ளும் தமது சதித் திட்டத்தை, அம்மசூதியினுள் கள்ளத்தனமாக குழந்தை ராமர் சிலையை வைத்ததன் மூலம் தொடங்கி வைத்தது,

பாபர் மசூதியைக் காப்பாற்றுவது எப்படியென்றா
அத்வானி தலைமையிலான இக்கும்பல் ஆலோசனை நடத்தியிருக்கும்!



‘‘பாபர் மசூதி நில உரிமை வழக்கில் பாபர் மசூதியின் மைய மாடத்தின் கீழ்தான் ராமன் பிறந்தான் என்ற ஆர்.எஸ்.எஸ். பொய்ப் பிரச்சாரத்தையே இந்துக்களின் நம்பிக்கையாகத் திரித்து, அதன் அடிப்படையில் அவ்வளாக நிலம் முழுவதையும் குழந்தை ராமருக்கு பட்டா போட்டுக் கொடுத்து, அங்கு கோவிலையும் கட்டச் சொல்லித் தீர்ப்பளித்தது, உச்ச நீதிமன்றம்.’’

இந்து மதவெறிக் கும்பல். அச்சதித் திட்டத்திற்குத் துணையாகச் செயல்பட்டவர் அன்றைய ஃபைசாபாத் மாவட்ட நீதிபதி கே.கே.கே.நாயர். கள்ளத்தனமாக வைக்கப்பட்ட ராமர் சிலையை மசூதியிலிருந்து அகற்றுவதற்கு முட்டுக்கட்டையாகச் செயல்பட்ட அவர், நிர்வாக ஆணையொன்றை வெளியிட்டு பாபர் மசூதி வளாகத்தை ஜப்தி செய்து, அதன் மூலம் மசூதியைக் கோவிலாக்கினார்.

இதனைத் தொடர்ந்து 1950-இல் இந்து மகா சபையின் ஃபைசாபாத் செயலராக இருந்து கோபால் சிங் விஷாரத், ‘‘மசூதியினுள் வைக்கப்பட்ட ராமர் சிலையை வழிபடத் தன்னை அனுமதிக்க வேண்டுமென்றும், பிரதிவாதிகள் (அரசும், முசுலிம்களும்) ராமர் சிலையை அகற்ற முடியாதவாறு நிலையான தடையாணை பிறப்பிக்க வேண்டுமென்றும்’’ கோரி ஃபைசாபாத் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கில் விஷாரத்துக்குச் சாதகமாக இடைக்கால உத்தரவு பிறப்பித்தது, அந்நீதிமன்றம்.

1986-இல் ஃபைசாபாத் மாவட்ட நீதிமன்றம் பாபர் மசூதி வளாகம் தொடர்பான உரிமையியல் வழக்கில் அளித்த உத்தரவொன்றைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான், அன்றைய ராஜீவ் காந்தி அரசு அதுவரை எந்தவொரு தரப்பும் வழிபாடு நடத்த அனுமதியின்றிப் பூட்டப்பட்டிருந்த பாபர் மசூதி வளாகத்தை இந்துக்கள் வழிபாடு நடத்துவதற்காகத் திறந்துவிட்டது.

ஜனநாயக, முற்போக்கு இயக்கங்கள் ஊர்வலங்கள் நடத்த முனைந்தால், அதனைக் காயடிக்கும் விதத்தில் பாரதூரமான நிபந்தனைகளை விதிக்கத் தயங்காத நீதிமன்றங்கள், கோவிலை அங்கேயே கட்டுவோம் என்ற முழக்கத்தை முன்வைத்து இந்து மதவெறிக் கும்பல் நடத்திய ரத யாத்திரைகளையும், செங்கல் யாத்திரைகளையும், கரசேவைகளையும் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி அனுமதித்து வந்தன.

டிசம்பர் 6 அன்று கரசேவைக்கு அப்பால் வேறு விபரீதங்களும் நடக்கலாம் என்ற உளவுத் தகவலை இராணுவ உளவுத் துறை உள்ளிட்டுப் பல்வேறு உளவு அமைப்புகளும் அரசுக்குத் தெரிவித்த பிறகும், அக்கரசேவையை நடத்த அனுமதி அளித்த உச்ச நீதிமன்றம், தனது உத்தரவை ரத்துசெய்ய முன்வரவில்லை. நரசிம்ம ராவ் தலைமையில் இருந்த காங்கிரசு அரசும் கரசேவைக்குத் தடைவிதிக்க முன்வரவில்லை.

பாபர் மசூதியை இடிக்கும் சதித் திட்டத்தோடு நடத்தப்பட்ட கரசேவையைத் தடுக்கவில்லை என்பதோடு, பாபர் மசூதியை இடித்த பிறகு, அங்கு சட்டவிரோதமான முறையில் கட்டப்பட்ட தற்காலிக ராமர் கோவிலுக்குச் சட்டபூர்வ அங்கீகாரத்தை அளித்து, அக்கோவிலில் வழிபாடு நடத்தவும் அனுமதி அளித்தது உச்ச நீதிமன்றம்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு, ‘‘இந்தியா சுதந்திரமடைந்த சமயத்தில் எந்தெந்த வழிபாட்டுத் தலங்கள் எந்தெந்த மதத்தினருக்குச் சொந்தமாக இருந்ததோ அதனை மாற்றும் உரிமை யாருக்கும் கிடையாது’’ என்ற வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. எனினும், ஆர்.எஸ்.எஸ். கும்பல் சட்டவிரோதமாக உரிமை பாராட்டி வந்த பாபர் மசூதி வளாகத்திற்கு அச்சட்டத்திலிருந்து விலக்கு அளித்து சலுகை காட்டப்பட்டது. அச்சட்டத்திற்கு மட்டுமின்றி, இந்தச் சலுகைக்கும் சேர்த்தே உச்ச நீதிமன்றம் ஒப்புதலை அளித்தது.

பாபர் மசூதி வளாக நிலத்தை மைய அரசு கையகப்படுத்தியதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், அந்நடவடிக்கை சரியா, தவறா எனத் தீர்ப்புக் கூறுவதற்கு அப்பாலும் சென்று, ‘‘இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவதற்கும்

அத்வானியின் சிறப்புப் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட அஞ்சு குப்தா., ஐ.பி.எஸ். (இடது), குற்றவாளிகளின் வக்கீலாக வாதாடிய சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.கே.யாதவ்.





தொழுகை நடத்துவதற்கும் மசூதி என்பது அவசியமான ஒன்றல்ல. முஸ்லிம்கள் திறந்தவெளியில்கூட தொழுகை நடத்தலாம்'' என அத்தீர்ப்பில் குறிப்பிட்டது உச்ச நீதிமன்றம். பாபர் மசூதி வழிபாட்டுத் தலமல்ல என்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் பிரச்சாரத்திற்கு இந்தத் தீர்ப்பு ஜாக்கியாகப் பயன்பட்டு முட்டுக் கொடுத்தது.

இந்து மத உணர்வைத் தேர்தல் பிரச்சாரத்தில் பயன்படுத்துவது குறித்த நடந்த வழக்கொன்றில், ஆர்.எஸ்.எஸ்.இன் கருத்தை நேரடியாகவேப் பிரதிபலிக்கும் வகையில், ''இந்துத்துவா அல்லது இந்துயிசம் என்பது மதம் என்ற குறுகிய பொருள் கொண்டதல்ல, அது இந்திய வாழ்க்கை முறை'' எனத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது, உச்ச நீதிமன்றம்.

இவை அனைத்திற்கும் உச்சமாக பாபர் மசூதி நில உரிமை வழக்கில் பாபர் மசூதியின் மைய மாடத்தின் கீழ்தான் ராமன் பிறந்தான் என்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் பொய்ப் பிரச்சாரத்தையே இந்துக்களின் நம்பிக்கையாகத் திரித்து, அதன் அடிப்படையில் அவ்வளாக நிலம் முழுவதையும் குழந்தை ராமருக்கு பட்டா போட்டுக் கொடுத்து, அங்கு கோவிலையும் கட்டச் சொல்லித் தீர்ப்பளித்தது, உச்ச நீதிமன்றம்.

அழும் பிள்ளைக்கு மிட்டாய் கொடுத்து ஏமாற்றும் கதையாக அத்தீர்ப்பில், ''வழிபாட்டுத் தலமான பாபர் மசூதியை இடித்தது சட்டவிரோதமான செயல்'' என்றொரு கருத்தைக் கூறியிருந்தது உச்ச நீதிமன்றம். மசூதியின் மீதான உரிமை முஸ்லிம்களுக்கு மறுக்கப்பட்டாலும், மசூதியை இடித்த வழக்கிலாவது அவர்களுக்கு நீதி கிடைக்கும் என்றொரு நம்பிக்கை அக்கருத்தை முன்வைத்து உருவாக்கப்பட்டது.

மசூதி இடிக்கப்பட்ட வழக்கை விசாரித்து வந்த நீதிபதி எஸ்.கே.யாதவ் இந்த நம்பிக்கைக்குத் துரோகமிழைத்திருப்பதோடு, சதிக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மசூதியை இடிக்கப்படுவதைத் தடுக்க முனைந்தார்கள் என்றும்; பாபர் மசூதியில் தொழுகை நடத்தப்படவில்லை என்பதால் வழிபாட்டுத் தலத்தை இடித்த குற்றம் நிகழவில்லை என்றும் தீர்ப்பில் கூறி, ஆர்.எஸ்.எஸ்.-இன் ராமஜென்ம பூமி இயக்கத்தை நியாயப்படுத்திவிட்டது.

❍

**பா**பர் மசூதி கட்டப்பட்ட இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்பது இந்துக்களிடம் வழிவழியாக வந்த நம்பிக்கையுமல்ல; மசூதியை இடித்துவிட்டு அந்த வளாகத்தில்தான் கோவிலைக் கட்ட வேண்டும் என்பது பாமர இந்துக்களின் கோரிக்கையுமல்ல. அது ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியல் திட்டங்களுள் ஒன்று.

பாபர் மசூதியைக் கைப்பற்றும் தனது சதித் திட்டத்தை 1949-இல் தொடங்கிய இந்து மதவெறிக் கும்பல் 1992-இல் அம்மசூதியைச் சட்டவிரோதமாக இடித்துத் தள்ளியது. அன்று தொடங்கி இன்று வரையில் உச்ச நீதிமன்றம், அலகாபாத் உயர் நீதிமன்றம், ஃபைசாபாத் மாவட்ட நீதிமன்றம் ஆகியவை இப்பிரச்சினையில் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குச் சாதகமாவே அமைந்துள்ளன. அதாவது, ராமர் கோவில் என்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் அரசியல் திட்டத்தைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிக் கொடுக்கும் கைக்கூலிகளாக இந்நீதிமன்றங்கள் செயல்பட்டிருப்பதை அத்தீர்ப்புகள் அனைத்தும் எடுத்துக்காட்டுகின்றன.

இதுவொருபுறமிருக்க, பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரணை நடத்திய லிபரான் கமிசன் அறிக்கை இதுவரையில் வெளியிடப்படவுமில்லை; சதி குறித்த அக்கமிசனின் முடிவுகள் செயல்படுத்தப்படவுமில்லை. பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு சிவசேனா-பா.ஜ.க. கும்பலால் திட்டமிட்டு நடத்தப்பட்ட மும்பய்க் கலவரம் தொடர்பான சிறீகிருஷ்ணா கமிசனின் முடிவுகளும் செயல்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில், மசூதி இடிப்பு வழக்கின் மேல்முறையீட்டில் நியாயம் கிடைத்துவிடும் என நம்புவதற்கு இடமுண்டா?

பொருளாதார மந்தத்தாலும், இம்மந்தத்தை கரோனா நோய்த் தொற்று தீவிரப்படுத்தியதாலும் வாழ்க்கையை இழந்து நிற்கும் உழைக்கும் மக்கள் மோடி அரசு மீது கடுமையான அதிருப்தியையும் வெறுப்பையும் உமிழ்ந்துவரும் வேளையில்; வேளாண் விளைபொருள் சட்டத் திருத்தங்களை எதிர்த்து விவசாயிகளும், தொழிலாளர் நலச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தங்களை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கமும் போராடி வரும் வேளையில்; இப்போராட்டங்களை ஒன்றிணைக்க வேண்டிய தருணத்தில், இத்தீர்ப்பு வெளிவந்திருப்பது ஆர்.எஸ்.எஸ்.-க்கு இரண்டு வழிகளில் அரசியல் இலாபம் தரத்தக்கதாக அமைந்துவிட்டது.

பாபர் மசூதியை இடிக்கும் நோக்கில் தமது தலைவர்கள் சதியில் ஈடுபடவில்லை எனத் தங்களைப் புனிதர்களாகக் காட்டிக்கொள்ள இத்தீர்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுவதையும் தாண்டி, இத்தீர்ப்பு தந்திருக்கும் தெம்பில், தைரியத்தில் தமது அடுத்த திட்டமான கிருஷ்ண ஜென்ம பூமியை மீட்கும் நடவடிக்கைகளிலும் இறங்கிவிட்டது ஆர்.எஸ்.எஸ். அரசியல் சாசனப் பிரிவு 370 ரத்து, சிவில் விவகாரமான முத்தலாக் மணமுறிவை கிரிமினல் குற்றமாக்கியிருப்பது, குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை அமல்படுத்துவது ஆகிய நடவடிக்கைகளின் மூலம் ஏற்கெனவே மதரீதியான மோதல்களைத் தூண்டிவரும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு இத்தீர்ப்பு கிருஷ்ண ஜென்ம பூமி பிரச்சினையைத் தங்கத் தாம்பளத்தில் தூக்கிக் கொடுத்திருக்கிறது.

தமது வாழ்வாதாரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள ஒன்றுபட்ட, சமரசமற்ற போராட்டங்களில் இறங்க வேண்டிய கட்டாயத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்திய மக்களை, மதரீதியாகப் பிளவுபடுத்துவதற்கான பொன்னான வாய்ப்பை ஆர்.எஸ்.எஸ்.-க்கு வழங்கியிருப்பதுதான் இத்தீர்ப்பின் மிகப்பெரும் அபாயமாகும்.

● அறிவு

வினவு தளத்தில் வெளியான இக்கட்டுரை
பு.ஜ. வாசகர்களுக்காக மீள்பதிவு செய்யப்படுகிறது.

# இந்திய நீதிமன்றங்கள் ஜனநாயகத்தின் காவலர்களா?

**ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர் அர்னாப் கோஸ்வாமிக்கு அதிரடியாகப் பிணை வழங்கிய உச்ச நீதிமன்றம், மற்றைய அரசியல் விசாரணைக் கைதிகள் விடயத்தில் ஓரவஞ்சனையாக நடந்துவருகிறது.**

''தனிமனித சுதந்திரம் இவ்வாறு நசுக்கப்பட்டால், உச்ச நீதிமன்றம் அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் நிற்கும்!''

- இப்படியொரு தார்மீக ஆவேசத்தை உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரசூட், ரிபப்ளிக் தொலைக்காட்சியின் உரிமையாளரும் அதன் தலைமை ஆசிரியருமான அர்னாப் கோஸ்வாமிக்கு இடைக்காலப் பிணை வழங்கிய உத்தரவில் வெளிப்படுத்தினார்.

அர்னாப் கோஸ்வாமியைப் பற்றித் தெரியாத அரசியல் நோக்கர்கள் யாரும் இருக்க முடியாது. அர்னாபை அறிந்திராதவர்களுக்கு அவரைப் பற்றி ஒரே வரியில் கூற வேண்டுமானால், அர்னாப் ஊடகத் துறையில் இயங்கிவரும் ஆர்.எஸ்.எஸ். பேர்வழி, மோடி விசுவாசி. தமிழகத்திற்கு பாண்டே போல, அவர் ''தேசிய'' பாண்டே. பத்திரிகையாளர்களைச் சந்திப்பதையே எட்டிக்காயாகக் கருதிவரும் பிரதமர் மோடியைக்கூட நேர்காணல் செய்யும் அருளாசி கிடைக்கப் பெற்றவர். அவர் நடத்திவரும் ரிபப்ளிக் டி.வி.யை பாரதிய ஜனதா கட்சியின் அறிவிக்கப்படாத அதிகாரப்பூர்வ தொலைக்காட்சி என்றே சொல்லலாம்.

மகாராஷ்டிராவை ஆளும் சிவசேனா - காங்கிரசு கூட்டணி அரசு அர்னாபைக் கடந்த நவம்பர் 4 அன்று கைது செய்தது. பிணை மனுக்களை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதுதான் பொதுவான நடைமுறை. ஆனால், அர்னாப் தரப்பு விசாரணை நீதிமன்றத்தை தவிர்த்துவிட்டுப் பிணை மனுவை மும்பய் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தது. அம்மனுவைக் காலதாமதம் எதுவுமின்றி நவம்பர் 9 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மும்பய் உயர்நீதி மன்ற அமர்வு, ''விசாரணை நீதிமன்றத்திலேயே பிணை மனு தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு மாற்று வழி இருக்கிறது. எனவே, அர்னாப் பிணை மனுவை விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அம்மனு தாக்கல் செய்யப்பட்ட நான்கு நாட்களுக்குள் அதனை விசாரிக்க வேண்டும்'' என உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்ற ஆதரவில் இடைக்காலப் பிணை பெற்ற பின், தலோஜா மத்திய சிறைக்கு வெளியே பேட்டி கொடுக்கும் அர்னாப்.




இதனையடுத்து அர்னாப் தாக்கல் செய்த பிணை மனுவை அலிபாக் விசாரணை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டியலிட்ட நிலையில், மற்றொரு பிணை மனுவை உச்ச நீதிமன்றத்திலும் தாக்கல் செய்தார் அர்னாப். கீழமை நீதிமன்றத்தில் பிணை மனு விசாரிக்கப்பட்டு வரும் நிலையில் உச்ச நீதிமன்றம் பிணை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது மரபு கிடையாது. மேலும், விசாரணை நீதிமன்றம், உயர்நீதி மன்றங்களில் பிணை மறுக்கப்பட்ட நிலையில்தான் உச்ச நீதிமன்றம் பிணை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்.

ஆனால், உச்ச நீதிமன்றமோ இந்தப் பொது மரபை புறந்தள்ளவிட்டு, அர்னாப் தாக்கல் செய்த பிணை மனுவை அவசர வழக்குப் போல பாவித்து நவம்பர் 11 அன்றே விசாரணைக்கு எடுத்துக்கொண்டதோடு, அன்றே அவருக்கு இடைக்காலப் பிணையும் வழங்கி உத்தரவிட்டது. ''நாங்கள் இந்த வழக்கில் இன்று தலையிடாவிட்டால், அழிவுப் பாதையின் மேல் நடந்திருப்போம்'' என இந்த அவசரத்திற்கு விளக்கமும் அளித்தார் உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரசூட். மேலும், தனது உத்தரவில் ''அர்னாப் கோஸ்வாமியை போலிசு விசாரணைக்கு அனுப்புவது அவசியமா?'' என்றும் கேள்வி எழுப்பினார், அவர்.

"பீமாகோரேகான் வழக்கில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரதமர் மோடியைக் கொலை செய்ய சதி செய்தார்கள், மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள், நகர்ப்புற நக்சல்கள் என்பன அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள்.

இந்த 16 பேரில் ஒருவரைத் தவிர, மற்றவர் யாரும் இந்த வழக்கோடு தொடர்புடைய எல்கர் பரிசத் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை."

உச்ச நீதிமன்றம் அவசரஅவசரமாகத் தலையிட வேண்டிய அளவிற்கு அர்னாப் கோஸ்வாமியின் கைது, அவ்வளவு முக்கியத்துவமிக்க வழக்கு கிடையாது. அர்னாப், தனது தொழில் நிமித்தமாக, அதாவது தனது பேச்சு மற்றும் எழுத்திற்காகக் கைது செய்யப்படவில்லை. மாறாக, அன்வாய் நாயக் என்பவரைத் தற்கொலைக்குத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில்தான் அர்னாப் கைது செய்யப்பட்டார்.

பண நெருக்கடி காரணமாக 2018-இல் தற்கொலை செய்து கொண்ட அன்வாய் நாயக், தனது தற்கொலைக் குறிப்பில் அர்னாப் பெயரையும் குறிப்பிட்டிருந்தார். அர்னாப் கோஸ்வாமி நடத்திவரும் ரிபப்ளிக் டி.வி. நிறுவனம், தனக்குக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய 83 இலட்சம் ரூபாயைத் தர மறுப்பதையும் அன்வாய் நாயக் தனது தற்கொலை குறிப்பில் குறிப்பிட்டிருந்தார். ஏற்கெனவே விசாரணை நடத்தப்பட்டு முடித்து வைக்கப்பட்ட இவ்வழக்கை, அன்வாய் நாயக்கின் மனைவி மறுவிசாரணை செய்ய வேண்டுமெனக் கோரியிருந்தார். அதன் அடிப்படையில் அர்னாப் கோஸ்வாமியைக் கைது செய்ததாக மகாராஷ்டிரா போலிசு விளக்கமளித்தது. இதற்காக அர்னாபைக் கைது செய்திருக்க வேண்டியதில்லை என விமர்சித்துள்ள ஊடகங்கள்கூட, அர்னாப் கைது செய்யப்பட்டதைக் கருத்துச் சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகக் குறிப்பிடவில்லை.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பா.ஜ.க., சிவசேனாவிற்கு இடையே சமீபகாலமாக நடந்துவரும் மோதலுக்கும் அர்னாபின் கைதுக்கும் தொடர்புண்டு. அதனால்தான் அர்னாப் கைது செய்யப்பட்டவுடனேயே மோடி அரசின் அமைச்சர்கள் இந்தக் கைது அவசர நிலை காலத்தை நினைவுபடுத்துவதாகக் கொதித்துப் போனார்கள். அர்னாப் கைது செய்யப்பட்டது சிவசேனா அரசின் பழிவாங்கும் நடவடிக்கை என்றபோதும், அதற்காக உச்ச நீதிமன்றம் இவ்வளவு பதட்டமடைந்திருக்க தேவையில்லை. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்களே, அப்படி இவ்விவகாரத்தில் நடந்துகொண்டிருக்கும் உச்ச நீதிமன்றம், இதே அவசரத்தை, ஆவேசத்தை எத்துணையோ மனித உரிமைப் போராளிகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் மோடி அரசால் பழிதீர்த்துக் கொள்ளும் நோக்கத்தோடு தேசியப் பாதுகாப்புச் சட்டம், உபா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டபோது காட்டியதில்லை.

### அர்னாபுக்கு நீதி மற்றவர்களுக்கு அநீதி

இழி புகழ்பெற்ற பீமாகோரேகான் வழக்கில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரதமர் மோடியைக் கொலை செய்ய சதி செய்தார்கள், மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள், நகர்ப்புற நக்சல்கள் என்பன அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள். "இந்த 16 பேரில் ஒருவரைத் தவிர, மற்றவர் யாரும் இந்த வழக்கோடு தொடர்புடைய எல்கர் பரிஷத் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இவர்கள் பிரதமர் மோடியைக் கொலை செய்ய சதி செய்தார்கள், இவர்களுக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் தொடர்புண்டு என்ற குற்றச்சாட்டுக்களுக்கு, இவ்வழக்கை நடத்திவரும் தேசியப் புலனாய்வு முகமை இதுவரை எந்தவொரு வலுவான ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. மேலும், குற்றப்பத்திரிகையிலும்கூட கொலைச் சதி பற்றிய குறிப்புகள் இல்லை" எனச் சுட்டிக் காட்டுகிறார்கள் குற்றஞ்சுமத்தப்பட்டோரின் வழக்குரைஞர்கள்.

எல்கர் பரிஷத் மாநாட்டைத் தலைமையேற்று நடத்திய இரண்டு முன்னாள் நீதிபதிகளுள்

அர்னாப்புக்கு பிணை வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சந்திரசூட் (இடது) மற்றும் இந்திரா பானர்ஜி.



ஒருவரான பி.பி.சாவந்த், ‘‘இம்மாநாடு மோடி அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒன்று. இம்மாநாட்டிற்கு அணிதிரட்டி நடத்திய நீதிபதிகளான எங்களைக் கைது செய்வதற்குப் பதிலாக, இம்மாநாட்டோடு தொடர்பற்றவர்களைக் கைது செய்திருப்பது மோடி அரசின் நோக்கம் வேறு என்பதைக் காட்டுகிறது’’ என இந்தக் கைது நடவடிக்கையை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இக்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கடந்த ஆகஸ்டு 2018-இல் கைது நடவடிக்கையைத் தொடங்கியது மோடி அரசு. அந்நடவடிக்கை இன்று வரை முற்றுப் பெறவில்லை. இவ்வழக்கில் 16-ஆவது குற்றவாளியாக 84 வயதான பாதிரியார் ஸ்டேன் சுவாமியை கடந்த அக்டோபரில் கைது செய்தது, தேசியப் புலனாய்வு முகமை. கடந்த ஏப்ரலில், கரோனா தொற்று தீவிரமாகப் பரவிவந்த நிலையைக்கூடப் பொருட்படுத்தாது, பேராசிரியரும் மனித உரிமைப் போராளியுமான ஆனந்த் தெல்தும்டே கைது செய்யப்பட்டார். அம்பேத்கரின் பேரனாக அறியப்படும் ஆனந்தை அம்பேத்கர் பிறந்த நாளன்று (ஏப்ரல் 14 அன்று) கைது செய்திருப்பதன் மூலம், தாழ்த்தப்பட்டோரின் உணர்வுகளை அவமதித்திருக்கிறது, மோடி அரசு.

புத்தக வெளியீட்டாளர் சுதிர் தவாலே, வழக்குரைஞர்கள் சுரேந்திர காட்லிங், சமூகச் செயற்பாட்டாளர்கள் ரோனா வில்சன் மற்றும் மகேஷ் ரௌத், கல்வியாளர் ஷோமா சென் ஆகியோர் பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. வழக்குரைஞர்கள் அருண் ஃபெரேரியா, சுதா பரத்வாஜ், எழுத்தாளர் வெர்னான் கன்சல்வ்ஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. புரட்சிகர கவிஞர் வரவர ராவ், பத்திரிகையாளர் கௌதம் நவ்லகா ஆகியோர் கைது செய்யப்பட்டும் ஒரு வருடம் முடிந்துவிட்டது.

இவர்களுள் பலர் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டிக்கிறது. அவர்களுக்கு எளிதில் பிணை

‘‘உ.பி. மாநிலம், ஹாத்ரஸில் நடந்த பாலியல் வன்கொடுமை தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர் சித்திக் கப்பனை முஸ்லிம் தீவிரவாதியைப் போல முத்திரை குத்தி வருகிறது ஆதித்யநாத் அரசு.’’



கிடைத்துவிடக் கூடாது என்ற மோடி அரசின் தீய உள்நோக்கம் காரணமாகவே இக்கருப்புச் சட்டம் அவர்கள் மீது ஏவப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிராவில் சிவசேனை - காங்கிரசு கூட்டணி அரசு பதவிக்கு வந்த பிறகு, இவ்வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு அக்கூட்டணி அரசு முன்வந்தவுடனேயே, இந்த வழக்கை மகாராஷ்டிரா போலிசிடமிருந்து தேசியப் புலனாய்வு முகமைக்குத் தன்னிச்சையாக மாற்றியது, மோடி அரசு. இவர்களைச் சுதந்திர மனிதர்களாக வெளியே விட்டுவிடக் கூடாது, விசாரணை என்ற போர்வையில் இவர்களைச் சிறையிலேயே அடைத்து வைத்திருக்க வேண்டும் என்பதைத் தவிர, வழக்கை மாற்றியதற்கு வேறு எந்த நோக்கமும் கிடையாது.

எல்கர் பரிஷத் மாநாட்டை ஏற்பாடு செய்த முன்னாள் நீதிபதிகள் பி.பி சாவந்த் (இடது) மற்றும் கோல்சே பாட்டீல்.



அர்னாப் கோஸ்வாமி பத்திரிகையாளர் என்ற போர்வையில் உலாவரும் இந்து மதவெறி பாசிஸ்டு. மோடி அரசை நத்திப் பிழைப்பவன். அதேசமயம் பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டு ஒரு வருடம், இரண்டு வருடம் என இன்னமும் நீதிமன்றங்களால் பிணை வழங்கப்படாமல் சிறையில் வாடும் இவர்களோ தொழிலாளர்களின், தாழ்த்தப்பட்டோரின், பழங்குடியினரின் சமூக உரிமைகளுக்காகவும், உழைக்கும் மக்களின் வாழ்வாதார, ஜனநாயக உரிமைகளுக்காகவும் நீண்ட காலமாகப் போராடி வருபவர்கள். இவர்களுள் பலர் சர்வதேச அளவில் மதிக்கப்படும் அறிவுத் துறையினர்.

இவர்களுள் ஐம்பத்தொன்பது வயதான சுதா பரத்வாஜ் இருதய மற்றும் சர்க்கரை

> “மோடி அரசின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் மீதும், அவரது அரசின் சட்டங்களை எதிர்ப்பவர்கள் மீதும் உபா, தேசியப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட கொடிய சட்டங்கள் பாய்கின்றன. இதற்கு ஒத்தூதும் நீதிமன்றங்களை விமர்சிப்பவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் ஏவிவிடப்படுகிறது. எனில், இந்தியாவை ஜனநாயக நாடு எனக் கூறிக் கொள்வதற்கு ஏதேனும் பொருள் இருக்க முடியுமா?”

நோயாளி; எண்பது வயதைத் தாண்டிய வரவர ராவ் இருதய நோயாளி மட்டுமின்றி, சமீபத்தில் கரோனா நோய்த் தொற்றாலும் பாதிக்கப்பட்டவர். அவருக்குச் சீறுநீரகக் கோளாறு இருப்பதோடு, ஞாபக மறதி நோயாலும் பாதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கை கூறுகிறது. எண்பத்து நான்கு வயதான ஸ்டேன் சுவாமி பர்கின்ஸன் எனப்படும் நரம்புத் தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டவர்.

இவர்களின் கல்வித் தகுதி, சமூகத் தகுதி, சமூகத்திற்கு இவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு, இந்தக் கைதின் பின்னணி ஆகியவையெல்லாம் உச்ச நீதிமன்றமும் மும்பய் உயர்நீதி மன்றமும் அறியாதவையல்ல. ஆனாலும், இவர்களுள் ஒருவருக்குக்கூட மும்பய் உயர்நீதி மன்றமோ, உச்ச நீதிமன்றமோ இதுநாள் வரையிலும் பிணை வழங்க முன்வரவில்லை.

மருத்துவக் காரணங்களுக்காகத் தனக்கு இடைக்காலப் பிணை வழங்குமாறு சுதா பரத்வாஜ் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வு, ‘‘நீங்கள் இடைக்காலப் பிணை அல்லாமல், வழக்கமான பிணையே கேட்கலாம். அதற்குத் தகுதி வாய்ந்த காரணங்கள் உள்ளன’’ எனத் தேனொழுகக் கூறிவிட்டு, அவர் கேட்ட இடைக்காலப் பிணையைக்கூட வழங்காமல், ‘‘இந்த மனுவைத் திரும்பப் பெறுங்கள், இல்லையென்றால் தள்ளுபடி செய்துவிடுவோம்’’ எனக் கூறி, அவரைக் கைகழுவியது.

இதே மருத்துவக் காரணங்களை முன்வைத்து அவர் மும்பய் உயர்நீதி மன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்த வழக்கில், சிறை மருத்துவர்களே அவரை நன்கு கவனித்துக் கொள்வதாகத் தேசியப் புலனாய்வு முகமை கூறிய காரணத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு அவருக்குப் பிணை வழங்க மறுத்தது அந்நீதிமன்றம்.

இருதய நோய், சீரநீரகக் கோளாறு, ஞாபக மறதி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுத் தொடர் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும் என்ற நிலையில் இருக்கும் வரவர ராவிற்கும் இதுவரை பிணை வழங்கப்படவில்லை. அவரை ஒரு பதினைந்து நாட்களுக்குத் தனியார் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிப்பதற்குக்கூட மும்பய் உயர் நீதிமன்றத்தில் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது.

தங்களுக்கு ஒரு போர்வை வேண்டுமென்றால்கூட, நீதிமன்றக் கதவுகளைத் தட்ட வேண்டியிருக்கிறது எனக் குற்றஞ்சுமத்துகிறார்கள், இப்போராளிகள். குறிப்பாக, பர்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ஸ்டேன் சுவாமியால் ஒரு குவளை நீரைக்கூடக் கையால் எடுத்துப் பருக முடியாது. அதனால் தனக்கு உறிஞ்சு குழல் (ஸ்ட்ரா) வழங்க வேண்டும் எனக் கேட்டதற்கு, அவரது கோரிக்கையைப் பரிசீலிக்கக் கால அவகாசம் கேட்டிருக்கிறது விசாரணை நீதிமன்றம்.

இப்போராளிகளுக்குப் பிணை வழங்க மறுப்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவைப்படும் உரிய மருத்துவ சிகிச்சையை, உரிய காலத்தில் வழங்க மறுத்து இழுத்தடிப்பதெல்லாம் அவர்களின் தனிமனித உரிமையை மறுப்பது மட்டுமல்ல, அவர்களின் உயிர்வாழும் உரிமையையும் மறுப்பதாகும். மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர் என்ற குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்கப்பட்டு மகாராஷ்டிரா சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் சாய்பாபாவை அரசும் நீதிமன்றமும் கைகோர்த்துக்கொண்டு சிறுகச்சிறுகச் சாகடிப்பது நம் கண்முன்தான் அரங்கேறி வருகிறது. அப்படிப்பட்டதொரு அபாயம் இப்போராளிகள் மீது விசாரணை நிலையிலேயே திணிக்கப்படுகிறது.

வழக்குரைஞர் சுதா பரத்வாஜ் (இடது) மற்றும் பேராசிரியர் ஆனந்த் தெல்தும்டே.



பத்திரிகையாளர் அர்னாபிற்குப் பிணை வழங்க சட்டம், மரபுகளை மீறிய உச்ச நீதிமன்றம், கேரளாவைச் சேர்ந்த ஆழிமுகம் என்ற இணையதளப் பத்திரிக்கையைச் சேர்ந்த செய்தியாளர் சித்திக் கப்பனின் பிணை மனு வழக்கில் சட்டவாதக் கண்ணாடியை மாட்டிக் கொண்டது. உ.பி. மாநிலம், ஹாத்ரஸில் நடந்த பாலியல் வன்கொடுமை தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற சித்திக் கப்பனை முஸ்லிம் தீவிரவாதியைப் போல முத்திரை குத்தி வருகிறது ஆதித்யநாத் அரசு. அதன் காரணமாகவே, அவருக்கும் பாப்புலர் பிரண்ட் ஆஃப் இந்தியா அமைப்பிற்கும் தொடர்பிருக்கிறது என்றும், உ.பி. மாநிலத்தில் சாதி, மத மோதல்களைத் தூண்டிவிடும் நோக்கில் அவர் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்றிருக்கிறார் என்றும் குற்றஞ்சுமத்தி, அவரைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறது.

அர்னாபின் பிணை மனு மீதான வழக்கில் மகாராஷ்டிரா அரசின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல், அவருக்குத் தன்னிச்சையாகவும் தடாலடியாகவும் பிணை வழங்கிய உச்ச நீதிமன்றம், சித்திக் கப்பன் பிணை கோரித் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது, உ.பி. மாநில அரசும் உ.பி. மாநில போலிசும் பதில் மனு தாக்கல் செய்யக் கூறி, அவ்வழக்கை ஒத்தி வைத்துவிட்டது.

**மோடியின் பழிதீர்க்கும் ஆயுதம் – உபா சட்டம்**

இவையனைத்தும் ஊடக வெளிச்சம் பட்ட வழக்குகள். இவையன்றி, நீதியும் கிடைக்காமல், பிணையும் கிடைக்காமல், தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் சிறையில் இருப்போரின் எண்ணிக்கை பல ஆயிரத்தையும் தாண்டும். எடுத்துக்காட்டாக, *2014* தொடங்கி *2016* முடியவுள்ள மூன்று ஆண்டுகளில் மட்டும் *2,700* வழக்குகள் உபா சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ளன. *2016* முதல் *2018* முடியவுள்ள இரண்டு ஆண்டுகளில் மட்டும் உபா சட்டத்தின் கீழ் *3,005* வழக்குகள் பதியப்பட்டு, *3,974* பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. *2018*-க்குப் பின் உபா சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகளில் *93* சதவீத வழக்குகள் இன்னமும் நீதிமன்ற விசாரணையில், நிலுவையில் இருப்பதாகக் குறிப்பிடுகிறது, தேசியக் குற்ற ஆவணத் துறை.

மோடி அரசு *2019*-ஆம் ஆண்டு உபா சட்டத்தில் கொண்டுவந்த திருத்தங்களின்படி, அமைப்புகளை மட்டுமின்றித் தனிநபர்களைக்கூடத் தீவிரவாதியாக முத்திரை குத்தி உபா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க முடியும். சில விதிவிலக்குகள் இருந்தாலும், இந்தச் சட்டத்தில் கைது செய்யப்படுவோருக்குப் பிணை கிடைப்பதும் எளிதான ஒன்றல்ல. குறிப்பாக, சில தீவிரவாதக் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்குப் பிணை வழங்கக் கூடாதவாறு இச்சட்டத்தில் விதிகள் திருத்தப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் குற்றமற்றவர்களாக இருந்தாலும், பிணை வழங்காமலேயே நீண்ட நாட்களுக்கு அவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருக்க முடியும். விசாரணையையே தண்டனையாக்கும் சதித்தனம் இச்சட்டத்தில் உள்ளார்ந்து உள்ளது. இந்த அடிப்படையில்தான் பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கும் முற்போக்கு அறிவுத்துறையினரை மட்டுமல்ல, குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிராகப் போராடிய மாணவர்கள், இளைஞர்களையும் இந்து மதவெறி அரசுகள் இச்சட்டத்தைப் பயன்படுத்தித் தண்டித்து வருகின்றன.

இந்த அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்தவர்களை, குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து சட்டபூர்வமாக அமைதிவழியில் போராடியவர்களை, ஜம்மு காஷ்மீரின் சிறப்புரிமையை ரத்து செய்ததைக் கண்டித்தவர்களை மட்டுமல்ல, ஒரு பாலியல் வன்கொடுமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளரைக்கூட விட்டுவைக்காமல், இந்து மதவெறி ஆட்சியாளர்கள் உபா சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள் எனில், இந்த அடக்குமுறைக்கு நீதிமன்றங்களும் ஒத்தூதி வருகின்றன எனில், இந்திய மக்கள் அவசரநிலைக் காலத்தை விஞ்சக்கூடிய அபாய நிலையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் கருத முடியும்.

இந்திய நீதிமன்றங்கள் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.வின் அரசியல் திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கும் கைக்கூலியாகச் செயல்பட்டு வருவதைப் பல்வேறு வழக்குகளில் அளிக்கப்பட்ட தீர்ப்புகளே அம்பலப்படுத்தியுள்ளன. பத்திரிக்கையாளர் என்ற போர்வையில் உலாவரும் இந்து மதவெறி பாசிஸ்டு அர்னாபுக்கு உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தடாலடி பிணை அக்கைக்கூலித்தனத்தின் இன்னுமொரு உதாரணம்.

அர்னாபிற்குப் பிணை வழங்கிய நீதிபதி சந்திரசூட், ‘‘இது போன்ற அடக்குமுறைகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இந்திய ஜனநாயகம் அசாதாரண வலுவோடு இருப்பதாக’’க் குறிப்பிட்டார். ஆனால், மோடி அரசோ இது வெற்று வாய்ஜாலம் என்பதை அத்தீர்ப்பின் மை காய்வதற்குள்ளாகவே அம்பலப்படுத்திவிட்டது. அர்னாபிற்கு அவசர கதியில் பிணை வழங்கியதை நையாண்டி செய்த குணால் கம்ரா என்ற மேடை நகைச்சுவையாளர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர வேண்டும் எனப் பரிந்துரை செய்திருக்கிறது, மைய அரசு.

மோடி அரசின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள் மீதும், அவரது அரசின் சட்டங்களை எதிர்ப்பவர்கள் மீதும் உபா, தேசியப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட கொடிய சட்டங்கள் பாய்கின்றன. இதற்கு ஒத்தூதும் நீதிமன்றங்களை விமர்சிப்பவர்கள் மீது நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் ஏவிவிடப்படுகிறது. எனில், இந்தியாவை ஜனநாயக நாடு எனக் கூறிக் கொள்வதற்கு ஏதேனும் பொருள் இருக்க முடியுமா?

● குப்பன்

# குவாட் கூட்டணி:

# சீனாவிற்கு எதிரான இராணுவ முஸ்தீபு!

**அமெரிக்காவின் குவாட் கூட்டணியில் இந்தியாவை இணைத்து, அதனை சீனாவிற்கு எதிரான தனது ராஜதந்திர வெற்றியாகக் காட்டிக்கொள்ள முயலுகிறது, மோடி அரசு.**

அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நான்கு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை இராணுவமயமாக்கும் நோக்கில் அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் நான்குமுனை பாதுகாப்புப் பேச்சுவார்த்தை (Quadrilateral Security Dialogue). இது சுருக்கமாக, "குவாட்" (Quad) என்றழைக்கப்படுகிறது. இது, சீனாவுக்கு எதிராகச் செயல்படும் ஒரு இராணுவக் கூட்டணியாக 2017-ஆம் ஆண்டின் இறுதியில் மாற்றம் அடைந்தது. சீனா-அமெரிக்காவிற்கு இடையேயும் சீனா-இந்தியாவிற்கு இடையேயும் முறுகல் நிலை தீவிரமடைந்திருக்கும் நிலையில், இக்கூட்டணி நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் கடந்த அக்டோபர் 6 அன்று ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடந்தது.

இக்கூட்டம் நடந்து முடிந்த ஓரிரு வாரங்களுக்குள்ளாக, அதுவும் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறுவதற்குச் சற்று முன்னதாக, "அடிப்படையான பரிமாற்றமும் ஒத்துழைப்பும்" (Basic Exchange and Cooperation Agreement for Geo-spatial Cooperation - BECA) எனும் ஒப்பந்தம் கடந்த அக்டோபர் 27-ஆம் தேதியன்று இந்தியா-அமெரிக்காவிற்கு இடையே கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தை சீனாவின் எல்லை அத்துமீறல்களுக்கு எதிரான இந்தியாவின் பாதுகாப்புக் கவசமாக வருணித்த அமெரிக்கத் தரப்பு, இந்த ஒப்பந்தம் குறித்து விடுத்த பத்திரிகை செய்திகள் அனைத்திலும் சீன எதிர்ப்பையே மையப்படுத்தியிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஒரு நாட்டின் போர் விமானங்களும் போர்க்கப்பல்களும் மற்ற நாட்டின் விமானத் தளங்களிலும் துறைமுகங்களிலும் தங்கி, எரிபொருளை மீண்டும் நிரப்பிக் கொள்வதோடு, பராமரிப்பு மற்றும் பழுது நீக்க வேலைகளையும், உணவு, நீர், உடை, மருத்துவம் மற்றும் இதர தொழில் நுட்ப சேவைகளைச் செய்து கொள்ள முடியும்.

குவாட் கூட்டணி தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவிற்கு வந்த அமெரிக்க அரசுச் செயலர் மைக் பாம்பியோவுடன் (இடமிருந்து மூன்றாவது) இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்.



இந்திய ஆளும் வர்க்கமும் ஆளும் வர்க்கக் கட்சிகளும் பாகிஸ்தானையும், சீனாவையுமே "தேசிய எதிரிகளாக"க் கட்டமைத்துள்ளன. இந்த இரு நாடுகளுக்கு அப்பால் இந்தியாவின் எதிரிகளாகச் சித்தரிக்க எந்தவொரு நாடும் இல்லாததால், இந்த ஒப்பந்தத்தால் பெரிதும் பயனடையப் போவது அமெரிக்கா மட்டும்தான். குறிப்பாக, சீனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனது இராணுவத் தளங்களை இந்தியாவில் அமைத்துக் கொள்ளும் அமெரிக்காவின் திரைமறைவான ஏற்பாடுதான் இந்த ஒப்பந்தம்.

1998-2004 வாஜ்பாயி ஆட்சியில், அமெரிக்காவின் ஏவுகணை தாக்குதல் பாதுகாப்புத் திட்டத்தில் இந்தியாவை இணைக்கும் முயற்சிகள் தொடங்கின. அதன்பின், 2004-14 வரையில் நடந்த காங்கிரசின் முற்போக்கு ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது. மோடி பிரதமரான பின் 2016-இல் இந்தியா-அமெரிக்காவிற்கு இடையே கையெழுத்தான "இராணுவத் தளவாடப் பரிமாற்றத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Logistics Exchange Memorandum of Agreement - LEMOA)" 2018-ஆம் ஆண்டில் முழுமையாக நடைமுறைக்கு வந்தது. இதனையடுத்து, 2018, செப்டெம்பரில் நிறைவேற்றப்பட்ட "கோம்காசா" (Communications Compatibility and Security Agreement - COMCASA) எனும் ஒப்பந்தம், அமெரிக்கா மற்றும் அதன் இராணுவக் கூட்டாளி நாடுகளின் கப்பற்படையுடன் இந்தியக் கடற்படை இணைந்து செயல்படுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. இந்த கோம்காசா ஒப்பந்தப்படிதான் தற்போது குவாட் கூட்டணியின் சார்பில் "மலபார் பயிற்சி" எனப்படும் கடற்படை போர்ப் பயிற்சி அரபிக் கடலிலும் வங்காள விரிகுடாவிலும் நடைபெறுகிறது.

இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, குவாட் கூட்டணி ஓர் இராணுவக்



குவாட் கூட்டணித் தலைவர்கள்: இடமிருந்து ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரீசன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்.

கூட்டணியாக உருவாகியிருக்கிறது. இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு ஐரோப்பா கண்டத்தில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கு, மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளை இணைத்துக்கொண்டு அமெரிக்கா உருவாக்கிய நேட்டோ இராணுவக் கூட்டணியைப் போன்றே, குவாட் கூட்டணியை சீனாவிற்கு எதிராக உருவாக்க அமெரிக்கா திட்டமிட்டிருப்பதாகக் கூறும் முதலாளித்துவ நிபுணர்கள், குவாட் கூட்டணியை ஆசியாவின் நேட்டோ என்றே குறிப்பிடுகின்றனர்.

இந்தியா-அமெரிக்கா இடையே அரசியல் - பொருளாதார - இராணுவ ஒத்துழைப்பு வலுப்படுவதை இந்திய ஆளும் வர்க்கமும், அதன் அறிவுத் துறையினரும் விரும்பினாலும், இன்றைய உலகமயச் சூழலில், சீனாவிற்கு எதிராக அமெரிக்காவால் உருவாக்கப்பட்டிருக்கும் நேட்டோ போன்றதொரு குவாட் கூட்டணியில் இந்தியா பங்குபெறுவது பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்திவிடுமோ என்றும் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் ஐயங்கொண்டுள்ளனர். குறிப்பாக, முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே.நாராயணன் உள்ளிட்டோரும், இந்து நாளிதழ் உள்ளிட்ட தேசிய ஊடகங்களின் ஒரு பிரிவும், ‘‘குவாட் கூட்டணியில் இணைந்தாலும், இந்தியா தெற்காசிய பிராந்திய விவகாரங்களில் சுயேச்சையான முடிவுகள் எடுத்துச் செயல்படுத்த வேண்டும். சீனாவிற்கு எதிராக இராணுவரீதியான தாக்குதலை மட்டுமே தீர்வாகக் கருதாமல், சீனாவை உலக அரங்கில் தனிமைப்படுத்த அரசு தந்திர வழிகளில் முயற்சிக்க வேண்டும்’’ என எச்சரிக்கை கலந்த ஆலோசனைகளை முன்வைத்து வருகிறார்கள்.

அமெரிக்க அதிபர் டிரம்புடனான மோடியின் தனிப்பட்ட நட்பையும்; குவாட் கூட்டணியில் இந்தியா இணைந்திருப்பது மற்றும் மலபார் பயிற்சி உள்ளிட்டு அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து இந்திய இராணுவம் மேற்கொண்டுவரும் போர்ப் பயிற்சிகள் ஆகியவற்றையும் சீனாவிற்கு எதிரான தனது ராஜதந்திர வெற்றியாகக் காட்டிக்கொண்டு வரும் மோடி அரசும், ஆர்.எஸ்.எஸ். கும்பலும் இந்த எச்சரிக்கைமிக்க ஆலோசனைகளை ஒரு பொருட்டாகக் கருத மறுக்கின்றன. குறிப்பாக, இந்தியா-சீனா இடையேயான எல்லைப் பிரச்சினை கடந்த சில மாதங்களாகத் தீவிரமடைந்திருக்கும் நிலையில், இப்பிரச்சினையில் மோடி அரசின் நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளாலேயே கேள்விக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில் குவாட் கூட்டணி, மலபார் போர் பயிற்சி ஆகியவற்றை எதிர்த்தரப்பின் வாயை அடைக்கும் அரசியல் பிரச்சாரமாக முன்னெடுத்து வருகிறது ஆர்.எஸ்.எஸ்.

> ‘‘இன்றைய உலகமயச் சூழலில் பொருளாதார ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் சீனாவுடன் இந்தியா இணைந்திருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு உடனடியான மாற்று ஏற்பாடு ஏதும் இல்லாத நிலையில், சீனாவுடனான வர்த்தக உறவுகளைத் துண்டித்துக் கொண்டால், இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தி பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.’’

இன்னொருபுறமோ குவாட் கூட்டணி ஒப்பந்த விதிகள் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் நலனுக்கு ஏற்றவாறு மட்டுமே இந்தியா செயல்பட முடியும்; இந்தியா தன்னிச்சையாக முடிவெடுத்து செயல்பட முடியாது என்றவாறே அமெரிக்க அதிகார வர்க்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இவை காரணமாக எம்.கே.நாராயணன் உள்ளிட்டோர் கூறிவரும் எச்சரிக்கை கலந்த ஆலோசனைகள் நடைமுறையில் காகித எச்சரிக்கைகளாகவே முடிந்துபோகக் கூடும்.

இன்றைய உலகளாவிய உற்பத்தி மற்றும் விநியோகச்



ஆர்.எஸ்.எஸ்.-இன் திட்டத்தை நிறைவேற்றுவது மற்றும் சீனாவைச் சீண்டுவது என்ற அடிப்படையில்தான் காஷ்மீருக்கான சிறப்புத் தகுதியை நீக்கி, அம்மாநிலத்தை யூனியன் பிரதேசங்களாகக் கூறு போட்டு, சீனாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள லடாக் பகுதியை மத்திய மோடி அரசு தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு சென்றிருக்கிறது.

சங்கிலியில் மிகமிக வலுவான இடத்தை சீனா பெற்றிருக்கிறது. சீனாவின் இந்த வலு காரணமாகவே அமெரிக்கா உள்ளிட்ட எந்தவொரு நாடும் சீனாவைப் பொருளாதாரரீதியாகத் தனிமைப்படுத்த இயலாமல் திணறி வருகின்றன. இவ்வாறான நிலையில் சீனாவை இராணுவரீதியாக அச்சுறுத்திப் பணிய வைப்பதைத்தான் அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம் முன்னெடுக்கிறது. இதற்கு இந்தியா-சீனா இடையேயும் சீனா-ஜப்பான் இடையேயும், சீனா-தென்கொரியா இடையேயும் நிலவிவரும் எல்லைப் பிரச்சினைகளைப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறது. எனினும், அமெரிக்காவின் இம்முயற்சியை ஐரோப்பிய நாடுகளே முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுத்துவரும் வேளையில், இந்தியாவை ஆளும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் அமெரிக்காவிற்கு அடியாள் வேலை பார்க்க முனைப்பாக இறங்கியிருக்கிறது.

உலகின் மிகப்பெரிய தொழிற்கூடமான சீனா, மேற்காசிய நாடுகளிலிருந்து பெருமளவு எண்ணெயை இறக்குமதி செய்துவரும் நிலையில், எண்ணெய்க் கப்பல்கள் சீனாவுக்குச் செல்ல முடியாதபடி இந்தியப் பெருங்கடல், தென்சீனக் கடல் ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் சீனாவைப் பொருளாதாரரீதியாகக் கழுத்தை நெரிக்கத் திட்டமிடும் அமெரிக்க வல்லரசு, அதற்காகத் தொடர்ந்து பல தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இதற்கெதிராக சீனா, ஈரானிய எண்ணெயைத் தனது நட்பு நாடான பாகிஸ்தானிலுள்ள குவாதர் துறைமுகத்துக்குக் கொண்டுவந்து, பின்னர் அங்கிருந்து மேற்கு சீனா வரை எண்ணெய்க் குழாய், இரயில் மற்றும் சாலை இணைப்புகள் மூலம் கொண்டு செல்ல சீனா - பாகிஸ்தான் பொருளாதாரத் தாழ்வாரம் (CPEC) எனும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சீனா - பாகிஸ்தான் பொருளாதாரத் திட்டத்தின் வழித்தடமானது, இந்திய சீன எல்லை மோதல் நடந்த இடத்திற்கு அருகே சீனாவின் அக்சாய் சின், சியாச்சின் வழியாகவும் செல்கிறது.

இந்தப் பின்னணியிலிருந்துதான் இந்தியா-சீனா இடையே டோக்லாம் பகுதியிலும், லடாக் மற்றும் கல்வான் பகுதியிலும் எல்லைப் பிரச்சினை வெடித்திருப்பதையும், அங்கு இரு நாடுகளுமே தமது படைகளைக் குவித்து வருவதையும், கல்வான் பள்ளத்தாக்கில் மோதல் நடந்திருப்பதையும் காண வேண்டும். ஆர்.எஸ்.எஸ்.-இன் திட்டத்தை நிறைவேற்றுவது மற்றும் சீனாவைச் சீண்டுவது என்ற அடிப்படையில்தான் காஷ்மீருக்கான சிறப்புத் தகுதி நீக்கமும், அம்மாநிலம் யூனியன் பிரதேசங்களாகக் கூறு போடப்பட்டு, சீனாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள லடாக் பகுதியை மத்திய மோடி அரசு தனது நேரடிக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு சென்றிருக்கிறது. மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் காஷ்மீர் விவகாரத்தில் மோடி அரசைக் கண்டிப்பது போலப் பாசாங்கு செய்துவருவதையும் இந்தப் பின்னணியிலிருந்துதான் காண வேண்டும்.

இன்றைய உலகமயச் சூழலில் பொருளாதார ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் சீனாவுடன் இந்தியா இணைந்திருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு உடனடியான மாற்று ஏற்பாடு ஏதும் இல்லாத நிலையில், சீனாவுடனான வர்த்தக உறவுகளைத் துண்டித்துக் கொண்டால் இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தி பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். இதன் காரணமாகவும் பொருளாதாரத் தேக்கம் உள்ளிட்ட பிற காரணங்களாலும், இலங்கை, பாகிஸ்தான், மியான்மர் உள்ளிட்ட இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனாவின் அரசியல்-பொருளாதார செல்வாக்கு அதிகரித்திருப்பதன் காரணமாகவும் சீனாவுடனான எல்லைப் பிரச்சினையைப் போர் மூலம் தீர்த்துக் கொள்ள இயலாத நிலைமையில்தான் மோடி அரசு உள்ளது.

சீனாவுடன் இந்தியா போருக்குச் செல்வதென்பது சுய அழிவுப் பாதையாகவே அமையும் என்றாலும், அரசியல் நோக்கங்களுக்காக சீனாவை எதிர்த்து மோடி அரசு சவடால் அடிக்க வேண்டியிருக்கிறது. நீண்டகாலமாக சீன எதிர்ப்பு, பாக். எதிர்ப்பு பிரச்சாரம் நடத்தப்பட்டுள்ளதாலும், நீண்டகாலமாக பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மேற்கத்திய ஏகாதிபத்திய விசுவாசத்தாலும் இந்தப் பாதையிலிருந்து இந்தியா விலகிச் செல்ல விரும்பவில்லை. இந்த திரிசங்கு நிலை காரணமாகவே, ஒருபுறம் ரசியா மூலம் சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, இன்னொருபுறத்தில் அமெரிக்காவின் குவாட் கூட்டணியில் இணைந்து போர்ப்பயிற்சிகளை மேற்கொள்வது என்ற இரட்டைக் குதிரைகளில் இந்தியா சவாரி செய்துவருகிறது.

● மனோகரன்

# எது அபாயகரமானது?

# கரோனாவா, ஆர்.எஸ்.எஸ்.-இன் அவதூறா?

**இந்தியாவில் கரோனா பரவலுக்கு டெல்லியில் நடந்த தப்லீக் ஜமாஅத் மாநாடுதான் காரணமென்று ஆர்.எஸ்.எஸ்.-ம் மோடி அரசும் இணைந்து பரப்பிய அவதூறுகளும், அதன் அடிப்படையில் போடப்பட்ட வழக்குகளும் நீதிமன்ற விசாரணையில் பல்லிளித்துவிட்டன.**

முழு ஊரடங்கு, தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு எனக் கடந்த ஏழெட்டு மாதங்களில் விதவிதமான ஊரடங்குகளை இந்திய மக்கள் அனுபவிக்க நேர்ந்த பிறகும் கரோனா நோய்த் தொற்றை மத்திய, மாநில அரசுகளால் முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. நவம்பர் மாத மத்தியில் இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 88 இலட்சத்தைத் தாண்டியும் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந்நோய்த் தொற்று சமூகப் பரவல் நிலையை எட்டிவிட்டதா என்ற கேள்விக்கு இதுவரை இந்திய அரசு எந்தவொரு பதிலும் அளிக்கவில்லை. அதேசமயத்தில் இந்நோய்த் தொற்று மிகத் தீவிரமாகப் பரவிவந்த மாதங்களில்கூட, இந்தியாவில் இந்நோய்த் தொற்று சமூகப் பரவல் நிலையை எட்டவில்லை என்றுதான் மட்டையடியாகக் கூறி வந்தன மத்திய, மாநில அரசுகள்.

அதேசமயத்தில், இந்நோய்த் தொற்றின் பரவும் வேகம் அதிகரிக்கத் தொடங்கிய ஏப்ரல், மே மாதங்களில், அப்பரவலுக்குக் காரணம், ''கரோனா ஜிகாத்'' என்றொரு கண்டுபிடிப்பை அவிழ்த்துவிட்டன சங்கப் பரிவார அமைப்புகள். சங்கிகள் முஸ்லிம் வெறுப்பு திரியைப் பற்ற வைத்தவுடன், அதற்குக் கை, கால், மூக்கு வைத்து எழுதத் தொடங்கின ஆர்.எஸ்.எஸ். சார்பு ஊடகங்கள். குறிப்பாக, தமிழகத்தில் தினமணியும், தினமலரும் சங்கிகளே தோற்றுப்போகும் வண்ணம் கரோனா பரவலை முஸ்லிம்களோடு தொடர்புபடுத்தி எழுதின. ''இதை (கரோனா பரவலை) மதப் பிரச்சினை ஆக்கக்கூடாதெனக் கூறி அடக்கி வாசிக்க முயலுவது ஜாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் இழைக்கும் துரோகம்'' என ''மன்னிக்க முடியாத குற்றம்!'' எனத் தலைப்பிட்டுத் தலையங்கமே தீட்டியது, தினமணி. (தினமணி, 04.04.2020)

இந்திய முஸ்லிம்கள் மீது இப்படியொரு அபாண்டமான பழியைச் சுமத்துவதற்கு சங்கிகளுக்கும் தினமலம்களுக்கும் கையில் கிடைத்த சாக்கு, தலைநகர் டெல்லி-நிஜாமுதின் பகுதியில் மார்ச் 13 முதல் 15-ஆம் தேதி வரை நடந்த தப்லீக் ஜமாஅத் அமைப்பினரின் மாநாடு.

முஸ்லிம் மதம் சார்ந்த இம்மாநாடு அரசுக்குத் தெரியாமல் சட்டவிரோதமாக நடந்த மாநாடு அல்ல. இம்மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் மட்டுமின்றி, பல்வேறு முஸ்லிம் நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்துகொள்வார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். அப்படி வந்தவர்களுக்கு விசா அளித்து, விமான நிலையத்திலேயே கரோனா பரிசோதனை நடத்தி முடித்து அம்மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதி அளித்ததும் மைய அரசுதான். மேலும், மாநாடு முடிந்த பிறகு, மாநாட்டுப் பிரதிநிதிகள் முஸ்லிம்கள் மத்தியில் மதப் பிரச்சாரம் செய்வதற்காக இந்தியாவெங்கும் பயணிப்பார்கள் என்பதும் மைய அரசிற்குத் தெரியும்.

இம்மாநாட்டின் ஆரம்பக் கட்ட பணிகள் தொடங்குவதற்கு முன்பே, அதாவது ஜனவரி மாதத்தின் இறுதியிலேயே கரோனா உலக அளவில் பரவக்கூடிய எச்சரிக்கையை உலக சுகாதார நிறுவனம் அறிவித்துவிட்டது. அதற்கடுத்த பிப்ரவரி மாதத்திலேயே எதிர்க்கட்சிகள், குறிப்பாக காங்கிரசு கட்சியின் ராகுல் காந்தி கரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்திலேயே கேள்வி எழுப்பினார். இம்மாநாட்டை அனுமதிப்பது குறித்து முடிவெடுப்பதற்கு மோடி அரசிற்குப் போதிய கால அவகாசம் இருந்தும், மாநாடு குறித்து மட்டுமின்றி, இந்தியாவில் கரோனா

தப்லீக் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் டெல்லி அரசால் வெளியேற்றப்படும் காட்சி.



“ஜம்முவில் உள்ள புகழ்பெற்ற வைஷ்ணவதேவி கோவிலுக்கு வழிபடுவதற்காக வந்த இந்துக்கள் திடீர் ஊரடங்கின் காரணமாகத் தமது ஊர்களுக்குத் திரும்ப முடியாமல் அக்கோவிலிலேயே தங்கிவிட்டதைக் கண்ணியமாகக் குறிப்பிட்ட ஊடகங்கள், தப்லீக் மாநாட்டிற்கு வந்த வெளிநாட்டு முஸ்லிம்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்ப முடியாமல் பல்வேறு மசூதிகளில் தங்கியிருந்ததை, மசூதிகளில் வெளிநாட்டு முஸ்லிம்கள் பதுங்கியிருப்பதாகவும் ஒளிந்திருப்பதாகவும் குறிப்பிட்டு அவதூறு செய்தன.”

பரவலைத் தடுப்பதற்கு எந்தவொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் அவரது அரசு எடுக்கவில்லை. குறிப்பாக, கரோனா நோய்க் கிருமியை இறக்குமதி செய்யும் அபாயம் கொண்ட சர்வதேச விமானப் போக்குவரத்துகூட மார்ச் 23 அன்றுதான் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டது.

மோடி அரசு இப்படி அலட்சியமாக இருந்ததற்கு வேறு காரணங்கள் உண்டு. குறிப்பாக, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் மத்தியப் பிரதேச காங்கிரசு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும், தனது தனிப்பட்ட புகழுக்காக அமெரிக்க அதிபர் டிரம்பை அழைத்து வந்து குஜராத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு விழா நடத்துவதற்கும்தான் முன்னுரிமை கொடுத்து வந்தது மோடி அரசு.

இம்மாநாடு தொடங்கிய நாளன்றுதான் இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளும் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. மாநாட்டின் நிறைவு நாளன்றுதான் இத்தடையுத்தரவு ஐம்பதுக்கும் மேற்பட்டோர் விழாக்களில் கலந்துகொள்ளக்கூடாது எனத் திருத்தப்பட்டது. அதற்கடுத்த பத்து நாட்களில் மக்கள் ஊரடங்கு, நாடு தழுவிய ஊரடங்கு, பொதுப் போக்குவரத்துக்குத் தடை என மக்களின் நடமாட்டம் முற்றிலுமாக முடக்கப்பட்டது. இந்தப் பத்து நாட்களில் மாநாட்டில் கலந்துகொண்ட பலர் தமது சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றனர். மாநாடு நடந்த பள்ளிவாசலிலேயே தங்கியருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஊரடங்கின் காரணமாகத் தமது சொந்த ஊருக்கும், நாட்டுக்கும் திரும்பிச் செல்ல முடியாத இக்கட்டில் சிக்கிக் கொண்டனர்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டு சொந்த ஊருக்குத் திரும்பிய முஸ்லிம்களுள் பலருக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும்; மசூதியிலேயே தங்க நேரிட்ட பலருக்கும் கரோனா நோய்த் தொற்று ஏற்பட்டதற்கு இந்தப் பின்னணிதான் காரணம். இதில் தனக்கு எந்தவொரு பொறுப்பும் இல்லை எனக் கையைக் கழுவிவிட்டு, முழுப் பழியையும் முஸ்லிம்கள் மீது போட்டது மைய அரசு. தனது தவறுக்கு யாரையாவது பலிகிடா ஆக்க வேண்டும் என்ற தந்திரத்தையும் தாண்டி, மோடி அரசின் முஸ்லிம் வெறுப்பு அரசியல்தான், கரோனா ஜிகாத் என்ற இந்த அவதூறுக்கு அடிப்படையாகும்.

முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்ட பிறகுதான் உ.பி. முதல்வர் ஆதித்யநாத், தனது படை பரிவாரங்கள் சூழ அயோத்திக்கு வந்து ராமர் சிலையை இடமாற்றும் வைபவத்தில் கலந்துகொண்டார். இந்தியாவில் கரோனா அறிகுறி கொண்ட நோயாளிகள் கண்டறியப்பட்ட சமயத்தில்தான், பிப்ரவரி 21 அன்று ஆர்.எஸ்.எஸ்.க்கு நெருக்கமான கார்ப்பரேட் சாமியார் ஜக்கி வாசுதேவ் பல்லாயிரக்கணக்கான இந்துக்களையும் வெளிநாட்டவர்களையும் திரட்டிவந்து மகா சிவராத்திரி களியாட்டத்தை நடத்தினார். மாதா அமிர்தானந்தமயி மடத்தினர் மார்ச் 13 அன்று அமிர்தபுரியில் நூற்றுக்கணக்கானரைத் திரட்டி சன்னியாசம் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினர். ம.பி. காங்கிரசு அரசைக் கவிழ்த்த வெற்றியை நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மத்தியில் கொண்டாடினார் பா.ஜ.க. தலைவர் சிவராஜ் சிங் சௌஹான். இந்த நிகழ்வுகளையெல்லாம் கண்டுகொள்ளாத ஆர்.எஸ்.எஸ்.-ம், தேசிய ஊடகங்களும் தப்லீக் ஜமாஅத் மாநாட்டின் மீது மட்டும் பழியைப் போடுவதற்குக் காரணம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கரோனா பரவலுக்கும் தப்லீக் ஜமாஅத் மாநாட்டிற்கும் முடிச்சுப் போட்டு, இந்திய முஸ்லிம்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்ய வேண்டும் என்ற

கரோனா பரவத் தொடங்கிய சமயத்தில் (பிப்.21) உள்நாட்டு மற்றும் சர்வதேச ‘இந்துக்கள்’ பல்லாயிரக்கணக்கில் பங்கேற்ற ஜக்கியின் மகா சிவராத்திரி கூத்து.



தீவிரத்தோடு ஆர்.எஸ்.எஸ். அவதூறுப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டதென்றால், அம்மாநாட்டில் கலந்துகொண்ட முஸ்லிம்கள் மருத்துவர்களுக்கு ஒத்துழைக்க மறுக்கிறார்கள், மருத்துவ ஊழியர்களைத் தாக்குகிறார்கள் எனத் தம் பங்குக்கு பா.ஜ.க. அரசுகள் முஸ்லிம்கள் மீது பழிபோட்டன. தனிப்பட்டவர்கள் செய்திருக்கக்கூடிய தவறுகள் இந்திய முஸ்லிம்கள் மீதான களங்கமாக மாற்றப்பட்டன.

மேலும், அம்மாநாட்டில் கலந்துகொண்ட உள்நாட்டு முஸ்லிம்கள் மற்றும் வெளிநாட்டு முஸ்லிம்கள் மீது தொற்றுநோய் தடுப்புச் சட்டம், வெளிநாட்டவர் சட்டம் மற்றும் பேரழிவு மேலாண்மைச் சட்டம் உள்ளிட்டுப் பல்வேறு கிரிமினல் சட்டங்களின் கீழ் பல மாநிலங்களில் 209 வழக்குகள் தொடுக்கப்பட்டன. தப்லீக் மாநாட்டில் கலந்துகொண்ட பிறகு கரோனா நோய்த் தொற்று ஏற்பட்டு தனிமைச் சிகிச்சையில் இருந்துவந்த ஆறு முஸ்லிம்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது, உ.பி. அரசு. தப்லீக் ஜமாஅத் தலைவர் மௌலானா முகம்மது ஸாத் மீது கொலைக் குற்றமாகாத மரண வழக்கு (culpable homicide)ப் பதிவு செய்யப்பட்டது. தப்லீக் அலுவலகங்கள் வருமான வரித்துறையினரால் சோதனையிடப்பட்டன. இவற்றின் மூலம் ஆர்.எஸ்.எஸ்.-இன் அவதூறுகளுக்குச் சட்டபூர்வத் தகுதியை மத்திய, மாநில அரசுகள் ஏற்படுத்திக் கொடுத்தன.

இந்த அவதூறுகளும், பழி தூற்றலும், வழக்குகளும் இந்திய முஸ்லிம்களுக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. குறிப்பாக, உ.பி. மீரட் நகரிலுள்ள வாலண்டிஸ் புற்றுநோய் மருத்துவமனை முஸ்லிம் நோயாளிகளுக்கு மட்டும் கரோனா பரிசோதனையைக் கட்டாயமாக்கி, விளம்பரம் வெளியிட்டது. காரணம், முஸ்லிம்களை கரோனா குண்டுகள் என ஊடகங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதூறு பிரச்சாரம். இதேபோன்று இராஜஸ்தானைச் சேர்ந்த ஒரு தனியார் மருத்துவமனை முஸ்லிம் நோயாளிகளுக்கு வாட்ஸ் அப் வழியாக மருத்துவ ஆலோசனை கொடுக்க மறுத்தது. இம்மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இமாச்சலப் பிரதேசத்திலுள்ள தனது கிராமத்திற்குத் திரும்பிய ஒரு முஸ்லிம் தன்னார்வலர் இந்த அவதூறுகளின் காரணமாகத் தற்கொலை செய்துகொண்டார். இவை, பானைச் சோற்றுக்குப் பதம் போன்றவை.

மேலும், தப்லீக் ஜமாஅத் பயங்கரவாத அமைப்பென்றும், அதில் கலந்துகொண்டவர்கள் முஸ்லிம் தீவிரவாதிகள் என்றும், உலகின் பல்வேறு இடங்களில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் தப்லீக் ஜமாஅத்திற்கும் தொடர்பிருக்கிறது என்றும், இந்துக்களை மதம் மாற்றும் நோக்கத்தோடுதான் இம்மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது என்றும் இந்த அவதூறு பிரச்சாரம் அருவெறுக்கத்தக்க அளவில் உச்சத்தைத் தொட்டது.

தினசரிகள், தொலைக்காட்சிகள் உள்ளிட்ட பொது ஊடகங்களிலும்; முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலும் பரப்பப்பட்ட இந்த அவதூறுகளின், பல்வேறு மாநிலங்களிலும் தொடுக்கப்பட்ட வழக்குகளின் இன்றைய நிலை என்ன?

தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் கலந்துகொண்ட 29 வெளிநாட்டவர்கள் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆறு முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்து வந்த மும்பய் உயர்நீதி மன்றத்தின் அவுரங்காபாத் கிளை, அவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்துவிட்டதோடு, ‘‘அரசியல்ரீதியில் இயங்கும் அரசாங்கம் பெருந்தொற்றோ, பேரழிவோ ஏற்படும் காலங்களில் பலிகிடாக்களைத் தேடுகிறது. இந்த வெளிநாட்டவர்கள் அத்தகைய பலிகிடா ஆக்கப்பட்டதற்கான வாய்ப்பிருப்பதைச் சூழ்நிலைகள் மூலம் அறிய முடிகிறது’’ எனத் தனது உத்தரவில் குறிப்பிட்டது.

இந்த வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவரான நீதிபதி டி.வி. நளவாடே, ‘‘இந்த வெளிநாட்டு முஸ்லிம்கள்தான் இந்தியாவில் கரோனா பரவியதற்குக் காரணம் என்றொரு பிரச்சாரத்தை அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் நடத்த முயன்றிருப்பது, அவர்களை மதரீதியாகத் துன்புறுத்தும் கொடுமையாகும்’’ எனக் குறிப்பிட்டதோடு, ‘‘தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் கலந்துகொண்ட அனைவர் மீதும் வழக்குப் போடும் இந்த முடிவானது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக விடப்பட்டிருக்கும் மறைமுகமான எச்சரிக்கையாகும்’’ என இவ்வழக்கின்

தப்லீக் மாநாடு நடைபெற்ற நிஜாமுதீன் பகுதியிலிருந்து வரும் முஸ்லீம்கள் மீது கிருமி நாசினி தெளித்து விலங்குகளைப் போல நடத்திய மாநகராட்சி ஊழியர்கள்.





''தப்லீக் ஜமாஅத் மாநாட்டில் கலந்துகொண்ட அனைவர் மீதும் வழக்குப் போடும் இந்த முடிவானது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக விடப்பட்டிருக்கும் மறைமுகமான எச்சரிக்கையாகும்''

– என்கிறார் நீதிபதி டி.வி.நளவாடே.

இந்தத் தீர்ப்பு, ''அரசியல் சாசனச் சட்டத்தின் பிரிவுகள் 25, 20, மற்றும் 21-இன்படி, சட்டப்படியான விசா பெற்று இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டவர்களுக்குத் தமது மதக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யும் உரிமை உண்டு'' எனக் குறிப்பிட்டுள்ளது.

மும்பய் உயர்நீதி மன்றம் மட்டுமல்ல, இது போன்றதொரு வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், ''தப்லீக் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த வெளிநாட்டு முஸ்லிம்களைச் சிறைப்படுத்தியது அநீதியானது'' எனக் குறிப்பிட்டதோடு, ''இந்தியாவில் கரோனா பரவலுக்கு அவர்கள் காரணமல்ல'' எனத் தீர்ப்பு அளித்திருக்கிறது.

பின்னுள்ள மோடி அரசின் நோக்கத்தையும் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

''இந்த வழக்குகள் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய இந்திய முஸ்லிம்களின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும், இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக எதற்காகவும் எந்தவொரு வடிவிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என மறைமுகமாக எச்சரிக்கை விடுக்கும் விதத்திலேயே இந்த வழக்குகள் புனையப்பட்டுள்ளன'' என்றும் தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார், நீதிபதி டி.வி.நளவாடே.

இவ்வழக்கை விசாரித்த அமர்வைச் சேர்ந்த மற்றொரு நீதிபதி சேவ்லிகர் நீதிபதி டி.வி.நளவாடேயின் இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், தீர்ப்பின் செயல்பாட்டுப் பகுதியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

''தப்லீக் ஜமாஅத் அமைப்பு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த தனிப்பிரிவு அல்ல. அம்மதத்தைச் சீர்படுத்தும் நோக்கில் இயங்கிவரும் இயக்கம்'' எனக் குறிப்பிட்டுள்ள அந்த உத்தரவு, ''வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் பார்த்தாலும்கூட, அம்மாநாட்டில் கலந்துகொண்ட எந்தவொரு தன்னார்வலரும் மாற்று மதத்தினரை முஸ்லிம் மதத்திற்கு மாற்றும் நோக்கில் பிரச்சாரத்தில் ஈடுபடவில்லை'' எனத் தெரிவித்து, தப்லீக் ஜமாஅத் மீது புனையப்பட்ட மத மாற்றம் குற்றச்சாட்டை ரத்து செய்துவிட்டது.

ஜம்முவில் உள்ள புகழ்பெற்ற வைஷ்ணவதேவி கோவிலுக்கு வழிபடுவதற்காக வந்த இந்துக்கள் திடீர் ஊரடங்கின் காரணமாகத் தமது ஊர்களுக்குத் திரும்ப முடியாமல் அக்கோவிலிலேயே தங்கிவிட்டதைக் கண்ணியமாகக் குறிப்பிட்ட ஊடகங்கள், தப்லீக் மாநாட்டிற்கு வந்த வெளிநாட்டு முஸ்லிம்கள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்ப முடியாமல் பல்வேறு மசூதிகளில் தங்கியிருந்ததை, மசூதிகளில் வெளிநாட்டு முஸ்லிம்கள் பதுங்கியிருப்பதாகவும் ஒளிந்திருப்பதாகவும் குறிப்பிட்டு அவதூறு செய்தன. அதனை மறுத்திருக்கும்

கர்நாடகா உயர்நீதி மன்றம் ஒன்பது வெளிநாட்டு முஸ்லிம்கள் மீது போடப்பட்ட வழக்குகளைத் தள்ளுபடி செய்திருக்கிறது. தம் மீதான கிரிமினல் குற்றச்சாட்டுக்களை எதிர்த்து டெல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்த 44 வெளிநாட்டு முஸ்லிம்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் பூர்வாங்க ஆதாரமில்லை எனக் கூறித் தள்ளுபடி செய்துவிட்டது அந்நீதிமன்றம்.

மும்பய், சென்னை, டெல்லி, கர்நாடகா உயர்நீதி மன்றங்கள் அளித்திருக்கும் இத்தீர்ப்புகள் கரோனா பரவலை முகாந்திரமாகக் கொண்டு ஆர்.எஸ்.எஸ்., அதன் கைத்தடி ஊடகங்கள் மற்றும் மோடி அரசு ஆகியவை இணைந்து முஸ்லிம்கள் மீது ஓர் அவதூறுப் பிரச்சாரத்தை நடத்தியுள்ளன என்பதை நிரூபித்திருக்கும் அதேசமயம், மதரீதியான அவதூறையும், அடக்குமுறைகளையும் (persecution) ஏவிவிட்ட அக்கும்பல் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க எந்தவொரு நீதிமன்றமும் பரிந்துரைக்கவில்லை. முஸ்லிம்களுக்கு நீதி கிடைத்திருக்கலாம், ஆனால், குற்றவாளிகளுக்குச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது என்பதும்தான் உண்மை.

**பின்குறிப்பு :**

கரோனா பரவல் மற்றும் காற்று மாசுபாடு ஆகியவை காரணமாக இந்த ஆண்டு தீபாவளி நாளன்று டெல்லி உள்ளிட்ட ஒரு சில மாநிலங்களில் பட்டாசுகள் வெடிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் காலையில் ஒரு மணி நேரம், இரவில் ஒரு மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க, அதுவும் பசுமைப் பட்டாசுகளை மட்டுமே வெடிக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த உத்தரவுகளெல்லாம் தீபாவளி நாளன்று கழிப்பறை காகிதமாகின. இந்துக்களின் இந்த அலட்சியம், பொறுப்பற்றதனம் குறித்து தினமணியோ, தினமலரோ மன்னிக்க முடியாத குற்றம் எனத் தலையங்கம் தீட்ட முன்வருமா? அப்படி யாராவது எழுதினால், அவர்களை ஆர்.எஸ்.எஸ். கும்பல் சும்மாவிட்டுவிடுமா?

● அறிவுமதி

# குற்றவியல் சட்டத் திருத்தம்:

# மறுகாலனியாதிக்கத்துக்கு ஏற்ப மறுவார்ப்பு!

**இத்திருத்தம் இந்திய மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதாக அமையாது. பொதுமக்களின் சட்டபூர்வ அமைதிவழிப் போராட்டங்களைக்கூட கிரிமினல் குற்றமாக்கும்.**

கரோனா ஊரடங்கு முற்றிலுமாக விலக்கப்படாத நிலையிலேயே வேளாண் விளைபொருள் சட்டத் திருத்தம், அத்தியாவசியப் பொருட்கள் சட்டத் திருத்தம், தொழிலாளர் நலச் சட்டத் திருத்தம் மற்றும் புதிய கல்விக் கொள்கை ஆகியவற்றை நிறைவேற்றிய மோடி அரசு, அதனைத் தொடர்ந்து இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரிமினல் சட்டத் தொகுப்பையும் திருத்த முனைந்திருக்கிறது.

கிரிமினல் சட்டங்களைத் திருத்தும் பொறுப்பு இந்திய சட்ட ஆணையத்திடம் ஒப்படைக்கப்படுவதுதான் வழமையான நடைமுறை. இதற்கு முன் செய்யப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் இந்திய சட்ட ஆணையம் அளித்த பரிந்துரைகளை பரிசீலித்த பிறகுதான் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், இம்முறையோ இந்திய சட்ட ஆணையம் புறக்கணிக்கப்பட்டு, டெல்லி தேசிய சட்டப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ரன்பீர் சிங் தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவை நியமித்திருக்கும் மோடி அரசு, ஆறு மாதங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அக்குழுவிற்குக் கெடுவும் விதித்திருக்கிறது.

இக்குழு 300-க்கும் மேற்பட்ட கேள்விகள் அடங்கிய கேள்விப் பட்டியலை ஆங்கிலத்தில் வெளியிட்டு, ஒவ்வொரு கேள்விக்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று தமது இணையதளத்தில் அறிவித்திருக்கிறது.

‘ஜனநாயகத்தை மேம்படுத்துவது’ என்ற பெயரில் குற்றவியல் சட்டத் திருத்தத்தை நியாயப்படுத்தும் உள்துறை அமைச்சர் அமித் ஷா (இடது) மற்றும் குற்றவியல் சட்டத் திருத்தக் குழுவின் தலைவரும் டெல்லி தேசிய சட்டப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான ரன்பீர் சிங்.



மைய அரசின் இந்நடவடிக்கைக்கு கருத்துக்களைவிடப் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள்தான் எழுந்துள்ளன. ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் 16 பேர், 100 வழக்குரைஞர்கள் மற்றும் முன்னாள் ஆட்சிப் பணியாளர்கள், கல்வியாளர்கள், அறிவுத்துறையினர் உள்ளிட்ட 150 பேர் இக்குழுவின் செயல்பாடுகளை நிறுத்த வேண்டுமென்றும், பல்வேறு தட்டுக்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய வகையில் இக்குழு புனரமைக்கப்பட வேண்டுமென்றும் மத்திய உள்துறை அமைச்சகத்திற்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

“முதல் ஐந்து சட்ட ஆணையங்கள் மூன்றில் ஒரு பங்கு குற்றவியல் சட்டங்களைத் திருத்துவதற்கே பத்தாண்டுகள் எடுத்துக்கொண்ட நிலையில், இக்குழு 6 மாதத்திற்குள் எப்படித் திருத்தங்களைச் செய்து முடிக்க முடியும்?” என இந்திய மற்றும் வெளிநாட்டு வாழ் சட்ட நிபுணர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இத்துணை எதிர்ப்புகளையும் சந்தேகங்களையும் மாற்று ஆலோசனைகளையும் புறந்தள்ளிவிட்டு, இக்குழுவைத் தடையின்றிச் செயல்பட அனுமதித்திருக்கிறது, மைய அரசு.

❍

தற்போதுள்ள குற்றவியல் சட்ட அமைப்பு இன்றைய ஜனநாயக நடைமுறைக்குப் பொருந்தாமல் இருக்கிறதாம். அதனால், ஜனநாயகத்தை மேம்படுத்தவும், விரைவாக நீதி கிடைப்பதை உத்தரவாதப்படுத்தும் முகமாகவே குற்றவியல் சட்டத்தைத் திருத்த வேண்டியிருப்பதாகக் கூறுகிறது,

மோடி அரசு. இத்திருத்த நடவடிக்கைக்கு மோடி கற்பிக்கும் இந்நியாயம் குரூரமான நகைச்சுவை தவிர வேறில்லை.

ஆர்.எஸ்.எஸ். சங்கப் பரிவாரத்தைப் பொருத்தவரை, இந்தியச் சட்டங்கள் ஒவ்வொன்றையும் மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனத்தையே திருத்த வேண்டும் என்பதுதான் அதன் நோக்கம். வாஜ்பாயி ஆட்சியின்போதே இதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. அரசியல் சாசனச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பாகவும், நாடாளுமன்ற ஆட்சி முறையில் மாற்றங்கள் கொண்டுவருவது தொடர்பாகவும் பரிசீலிக்க ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி வெங்கடாசலய்யா தலைமையில் ஒரு கமிட்டியும் அமைக்கப்பட்டது. இக்கமிட்டி அமைக்கப்பட்டதற்கு எதிராகப் பலத்த எதிர்ப்பு எழுந்ததன் காரணமாகவும், அப்போது கூட்டணிக் கட்சிகளை நம்பியே பா.ஜ.க., ஆட்சியை ஓட்டிக் கொண்டிருந்ததாலும், அதனின் ஆசை நிராசையாகிப் போனது. மேலும், அந்த அனுபவத்திலிருந்து அரசியல் சாசனத்தை அதிரடியாக அல்லது பலவந்தமாகத் திருத்துவதற்குப் பதிலாக, அதனை உள்ளிருந்தே தனது நோக்கங்களுக்கும் அரசியல் திட்டங்களுக்கும் ஏற்ப சிறுகச்சிறுகத் திருத்துவது எனத் தனது தந்திரோபாயத்தை மாற்றியும் கொண்டது.

2014, 2019 நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க. மக்களவையில் தனிப் பெரும்பான்மையோடு ஆட்சியமைத்தவுடன் காஷ்மீருக்குச் சிறப்புரிமை அளிக்கும் அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டது. பொது சிவில் சட்டம் என்ற தனது நயவஞ்சகமான திட்டத்தை அமலாக்கும் முதல் அடியாக, முத்தலாக் மண முறிவை கிரிமினல் குற்றமாக்கிச் சட்டமியற்றிவிட்டது.

குற்றவியல் சட்டத் தொகுப்பைத் திருத்துவதற்கு மோடி அரசால் அமைக்கப்பட்டிருக்கும் குழுவையும், அக்குழு திருத்தம் தொடர்பாக முன்வைத்திருக்கும் கேள்விகளையும் இந்த அடிப்படையில்தான் பார்க்க வேண்டும்.

○

குற்றவியல் சட்டத் தொகுப்பைத் திருத்துவதற்கு மோடி அரசிற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று, நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, நாட்டின் வளங்கள் அனைத்தையும் மென்மேலும் தனியார்மயப்படுத்துவதுதான் தீர்வு என மோடி அரசு கருதுகிறது. மேலும், ‘‘ஏக் பாரத் ஷ்ரேஷ்ட பாரத்’’ என்ற போர்வையில் இந்தியாவின் பன்முகத்தன்மையை அழித்து இந்து இந்தியாவை உருவாக்கிவிடவும் விழைகிறது. இவற்றுக்கெல்லாம் எழக்கூடிய எதிர்ப்புகளை எதிர்கொள்ளுவதற்குப் பழைய சட்டங்கள் பயன்படாது என்று அது கருதுகிறது.

இந்த அடிப்படையில்தான் வேளாண்மை தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

> ‘‘அரசியல் சாசனத்தை அதிரடியாக அல்லது பலவந்தமாகத் திருத்துவதற்குப் பதிலாக, உள்ளிருந்தே தனது நோக்கங்களுக்கும் அரசியல் திட்டங்களுக்கும் ஏற்ப சிறுகச்சிறுகத் திருத்துவது எனத் தனது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டது சங்கப் பரிவாரக் கும்பல்.’’

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் நீர்த்துப் போக வைக்கப்பட்டிருக்கிறது.

கேந்திரமான பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை நான்காகக் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கார்ப்பரேட் முதலாளிகள் மீண்டும் வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு ஏற்ப சட்டத் திருத்தம் கொண்டுவரும் முயற்சிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

ஒரே நாடு ஒரே வரி, ஒரே நாடு ஒரே கல்விக் கொள்கை, ஒரே நாடு ஒரே ரேசன் கார்டு மற்றும் தேசியப் புலனாய்வு முகமை ஆகியவற்றின் மூலம் மாநில அரசுகளின் உரிமைகள் ஒவ்வொன்றாக உருவப்பட்டு, மாநில அரசுகள் முனிசிபாலிட்டிகளாக மாற்றப்படுகின்றன.

குடியுரிமைச் சட்டத் திருத்தம், தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றின் மூலம் சிறுபான்மை மதத்தினரை, குறிப்பாக முஸ்லிம்களைச் சட்டபூர்வமாகவே இரண்டாம்தர குடிமக்களாக மாற்ற முயற்சிக்கிறது.

இவை தொடர்பாக எழக்கூடிய அமைதி வழியிலான எதிர்ப்புகளையும்கூடக் கிரிமினல்மயமாக்குவது என்ற நோக்கில்தான் குற்றவியல் சட்டத் தொகுப்பையும் திருத்த முயலுகிறது, மோடி அரசு. டெல்லி ஷாஹீன்பாக் போராட்டத்தை மோடி அரசு எதிர்கொண்ட விதத்தை இங்கு நினைவுபடுத்திக் கொண்டால், இத்திருத்தத்தின் நோக்கத்தை நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

வாஜ்பாய் ஆட்சியின் போதே, விசுவ இந்து பரிஷத்தைச் சேர்ந்த பிரவீன் தொகாடியா முன்னெடுத்த

‘‘சிந்தனை உச்சி மாநாடுகள்’’ பல நடத்தப்பட்டன. ஆர்.எஸ்.எஸ். இன் அனுதாபிகள் பங்கெடுத்த இம்மாநாடுகளில் குற்றவியல் சட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் மற்றும் காலத்திற்கேற்ற வகையில் மனு ஸ்மிருதியை அமலாக்குவது குறித்துத்தான் விவாதிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவே இக்குழுவையும், இக்குழு இணைய வழியில் நடத்தும் கருத்துக் கேட்பு நாடகத்தையும் காண முடியும்.

○

காவல்துறையின் அத்துமீறல்களுக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள், கண்காணிப்புப் பொறியமைவுகளை உருவாக்க வேண்டுமென ஒடுக்கப்பட்ட மக்களிடையே பணிபுரியும் அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும் தொடர்ந்து கோரி வருகின்றன. ஆனால், குற்றவியல் சட்டத் திருத்தத்திற்கான குழு தயாரித்துள்ள கேள்விப்பட்டியலில் இது குறித்து எந்தக் கேள்வியும் இடம்பெறவில்லை. மேலும், இப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவரும் எந்தவொரு அமைப்பிற்கும் பிரதிநிதித்துவமும் கொடுக்கப்படவில்லை.

பெண் பிரதிநிதி ஒருவர்கூட இடம்பெறாத இக்குழு, பெண்கள் தொடர்பான பிரச்சினைகளில் நடைமுறையில் இருந்துவரும் சட்டங்களையும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் கேள்விகளை முன்வைத்திருக்கிறது. குறிப்பாக, பாலியல் வன்புணர்வு அல்லாத பாலியல் சீண்டல்கள் உள்ளிட்ட பாலியல் குற்றங்களை வகைப்படுத்தும் 354 A, B, C, D ஆகிய சட்டப்பிரிவுகளை மறுபரிசீலனைக்கும் உட்படுத்தும் கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், மண உறவில் நடக்கும் வன்புணர்வுக்கு (*Marital rape*) அளிக்கப்பட்டிருக்கும் விதிவிலக்கை நீக்குவது, ‘‘கௌவரவக் கொலை’’ எனப்படும் சாதி ஆணவப் படுகொலை உள்ளிட்ட வன்கொடுமைகளுக்குத் தொகுப்பான சட்டம் உருவாக்குவது ஆகிய கோரிக்கைகள் இருந்துவரும் நிலையில், இவற்றுக்கெல்லாம் தனிச்சட்டம் தேவையா எனக் குதர்க்கம் நிறைந்த கேள்வியை முன்வைத்திருக்கிறது

2014 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ‘‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு புதிய சட்டத்தை இயற்றும் போதும், அதற்கு ஈடாக 10 பழைய சட்டங்களை நீக்குவோம்’’ என்றும், காலப்பொருத்தமற்ற காலனிய காலச் சட்டங்கள் ஏராளமாக இருப்பதாகவும், ஒரு நாளுக்கு ஒரு சட்டம் என்ற வீதத்தில் அவற்றை எல்லாம் நீக்கப் போவதாகவும் மோடி கூறினார்.


‘‘இந்த அடிப்படையில் மோடி ஆட்சியின் முதல் ஐந்தாண்டுகளில் சுமார் 3,500 காலாவதியான சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளதாகவும், முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் இது நடந்துள்ளதாகவும்’’ இந்தியா டுடே ஆங்கில ஏட்டின் இணையதளம் கூறுகிறது. ‘‘சுதந்திரத்திற்கு முந்தைய பழைய மற்றும் பொருத்தமற்ற சட்டங்கள் பலவும் காலனித்துவ மரபின் துரதிர்ஷ்டவசமான பகுதியாக இருந்தன என்றும் அவற்றை ரத்து செய்வது அரசாங்கத்தின் முன்நோக்கு அணுகுமுறையைப் பிரதிபலிக்கும் ஒரு முற்போக்கான நடவடிக்கை என்றும்’’ சட்ட அமைச்சகம் மார்தட்டிக்கொண்டதையும் அவ்விணைய தளம் சுட்டிக் காட்டியிருக்கிறது.



மனுநீதியைச் சட்டமாக்கும் நோக்கத்துடன் சிந்தனை உச்சி மாநாடுகளைத் தொடர்ந்து நடத்திய வி.எச்.பி.-யின் முன்னாள் தலைவர் பிரவீன் தொகாடியா.

காலப் பொருத்தமற்ற சட்டங்களைப் பற்றி அங்கலாய்த்துக் கொள்ளும் மோடி அரசு, ஆங்கிலேயக் காலனிய அரசால் உருவாக்கப்பட்ட தேசத்துரோக வழக்கு சட்டப்பிரிவு 124 ஏ-வைப் பற்றி என்ன கருதுகிறது? அந்தச் சட்டத்தின் தாய்வீடான பிரிட்டனிலேயே 2009 ஆம் ஆண்டில் இச்சட்டம் நீக்கப்பட்ட பிறகும் கூட, இந்தியாவில் இன்னும் நடைமுறையில் இருப்பதைப் பற்றி மோடி அரசு அக்கறை கொள்ளவில்லை என்பதோடு, தனது அரசிற்கு எதிராகச் சட்டபூர்வ வழிகளில், அமைதியான முறையில் போராடுபவர்களையும் ஒடுக்குவதற்கு இந்தக் காலனிய காலச் சட்டப்பிரிவைத்தான் வகைதொகையின்றிப் பயன்படுத்தி வருகிறது. இதன் காரணமாகவே, ரன்பீர்சிங் குழுவும் கூட இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்தவில்லை. மாறாக, தேசத்துரோகக் குற்றச்சாட்டைக் கையாளும் 124 ஏ-இன் வரையறை, நோக்கம் மற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் இச்சட்டப் பிரிவைத் திருத்தங்களிலிருந்து தவிர்த்துவிடலாமா அல்லது ஏதேனும் திருத்தம் தேவையா எனத் தந்திரமான கேள்வியை எழுப்பியுள்ளது.

124 ஏ மற்றும் உபா போல ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வரும் கருப்புச் சட்டங்களை இக்குழு தவிர்ப்பது ஒருபுறமிருக்க, திருத்தம் என்ற போர்வையில் சாதாரண கிரிமினல் சட்ட



உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி செல்லமேஸ்வர்.

நடைமுறைகளை இன்னும் கடுமையாக்கத் திட்டமிடுகிறது. எடுத்துக்காட்டாக, தற்போதுள்ள இந்திய சாட்சியச் சட்டத்தின்படி, போலீசு முன் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியாக எடுத்துக் கொள்ளப்படாது. தற்போது அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியாக ஏற்றுக்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனை சட்டமாக்கப்படுவதும் கொட்டடிச் சித்திரவதைகளுக்கு லைசென்சு வழங்குவதும் ஏறத்தாழ ஒன்றுதான்.

ஒரு குற்றம் நடைபெறும்போது, அக்குற்றத்தைச் செய்தவருக்கு அக்குற்றம் தொடர்பான சட்டங்கள் குறித்த புரிதலை கணக்கில் எடுத்துக்கொள்ளுவது கிரிமினல் சட்டத் தொகுப்பில் உள்ளார்ந்த அம்சமாக உள்ளது. இந்த அடிப்படையில், சிலவகை குற்றங்களுக்கு தண்டனை அளிக்கும்போது குற்றஞ்சுமத்தப்பட்டவரின் சட்டம் குறித்த புரிதல் கணக்கில் கொள்ளப்படும். எனினும், சிலவகை குற்றங்களுக்கு தண்டனை அளிக்கும்போது குற்றஞ்சுமத்தப்பட்டவரின் புரிதலைக் கணக்கில் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ரன்பீர் சிங் குழுவினர், பின்னதன் அடிப்படையில் தண்டிக்கப்படும் குற்றங்களின் பட்டியலை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்திருக்கிறது. இதன் நோக்கம் அரசுக்கு எதிரான எந்தவொரு போராட்டத்திற்கும், அதில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் உள்நோக்கம் கற்பித்துவிட முடியும்.

இக்குழு வெளியிட்டிருக்கும் கேள்விகள் அடங்கிய பட்டியல் ஆங்கில மொழி தவிர, வேறெந்த இந்திய மொழியிலும் வெளியிடப்படவில்லை. ஒரு சட்டத்தை எதற்காகத் திருத்த வேண்டியிருக்கிறது, எந்த அடிப்படையில் திருத்த வேண்டியிருக்கிறது எனும் ரீதியில் விளக்கங்கள் அளிக்கப்படாமல், பொத்தாம் பொதுவாகக் கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கேள்விகளும் ஆங்கிலம் தெரிந்தவர்களோ, பொதுவான சட்ட அறிவு கொண்டவர்களோ பதில் அளிக்கமுடியாதபடி தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இத்திருத்த நடைமுறையில் இருந்து சாதாரண பொதுமக்களை விலக்கிவைக்க வேண்டும் என்ற நோக்கம் தவிர, வேறெந்த காரணமும் இதன் பின் இருக்க முடியாது.

கிரிமினல் சட்டத் திருத்தம் பற்றித் தனது கருத்துக்களை ஃபிரெண்டலைன் இதழில் முன்வைத்திருக்கும் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி செல்லமேஸ்வர், ‘‘கிரிமினல் சட்டத் தொகுப்பைத் திருத்த எடுக்கும் முயற்சிகள் அனைத்தும், கிரிமினல் சட்டங்களுக்கும் அரசியல் சாசனத்திற்கும் இடையேயான உறவைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உறவானது தனிமனித உரிமை, சமூகக் கட்டுப்பாடு என்ற இரட்டைத் தன்மையால் ஆளப்படுகிறது என்பதையும் இந்த இரண்டு போக்குகளுக்கும் இடையே அறிவுப்பூர்வமான சமநிலை நிலவ வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த இரண்டு போக்குகளும் ஒன்றுக்கொன்று எதிரானவையும் அல்ல, ஒன்றைவிட்டு மற்றொன்று தனித்து இயங்கக்கூடியதும் அல்ல. இந்த இரட்டைத்தன்மையும், அவை ஒன்றையொன்று சார்ந்து இயங்குவதும் செயல்பூர்வமான அரசியல் ஜனநாயகத்திற்கு இன்றியமையாதவை’’ எனக் குறிப்பிடுகிறார்.

ஆனால், இன்று நமது நாட்டில், மோடியின் ஆட்சியின் கீழ் நடப்பதென்ன? தேசிய நலன், பொது நலன் என்ற பெயரிலும், வளர்ச்சி என்ற பெயரிலும் தனிமனித உரிமைகள் மட்டுமல்ல, பொதுமக்களின் சமூகப் பொருளாதார வாழ்வாதார உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. கருப்புப் பணத்தை ஒழிப்பது என்ற பெயரில் மோடி அரசு அமல்படுத்திய பணமதிப்பு நீக்கமும், வரி ஏய்ப்பைத் தடுப்பது என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட ஜி.எஸ்.டி. வரி விதிப்பும்; திறமை வாய்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது என்ற போர்வையில் திணிக்கப்பட்ட நீட் தேர்வும்; இறுதியாக, கரோனாவை ஒழிப்பது என்ற பெயரில் மோடி அரசு அமல்படுத்திய தேசிய ஊரடங்கும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை மேலும் நாசப்படுத்தியதைத் தாண்டி வேறெந்த பலனையும் தரவில்லை.

இவ்வாறான நிலையில்தான் கிரிமினல் சட்டத் தொகுப்பைச் சீர்திருத்தக் கிளம்பியிருக்கிறது, மோடி அரசு. இதன் பொருள், காலனிய கால அடக்குமுறைச் சட்டங்களை மறுகாலனியாதிக்கத்திற்கு ஏற்பவும், இந்தி, சமஸ்கிருதத் தணிப்பு, குடியுரிமைத் திருத்தச் சட்டம் உள்ளிட்ட தனது காவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவாறும் திருத்தியமைப்பதாக அமையுமேயொழிய, மக்களின் அரசியல் ஜனநாயக உரிமைகளை வலுப்படுத்துவதாகவோ, பாதுகாப்பதாகவோ அமையாது.

● வாகை

# போராட்டங்களின் நோக்கம்

**போராட்டங்கள் கால வரம்பைக் கொண்டிருக்க முடியாது. அநீதி வரம்பற்றதாக இருக்கும் போது, போராட்டங்களும் கால வரம்பற்றதாகவே இருக்கும்.**

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து டெல்லியின் ஷாஹீன் பாக் பகுதியில் முஸ்லிம்களும், கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட ஜனநாயக சக்திகளும் இணைந்து நடத்திய போராட்டம் குறித்த வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பு நகரத்தின் இயக்கத்திற்கு முன்னுரிமை அளித்து, மக்களின் போராட்ட உரிமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. தங்களின் வாழ்வுரிமை மற்றும் வாழ்வாதாரங்கள் பறிக்கப்படுவதை எதிர்த்துப் பொதுமக்களும், ஜனநாயக, புரட்சிகர இயக்கங்களும் முன்னெடுக்கும் போராட்டங்களுக்குச் சட்டம்-ஒழுங்கைக் காட்டி அதீதமான தடைகள், கட்டுப்பாடுகளை விதித்துவரும் அரசுக்கும், போலீசுக்கும் உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் இத்தீர்ப்பு மிகப்பெரும் சலுகையாகும்.

இத்தீர்ப்பை விமர்சித்து டெல்லி பல்கலைக்கழகத்தில் இந்தி மொழி ஆசிரியராகப் பணியாற்றிவரும் ஆபூர்வானந்த் ஆங்கில இந்து நாளிதழில் (அக்.13, 2020) எழுதிய கட்டுரை பு.ஜ. வாசகர்களுக்காகச் சுருக்கி வெளியிடப்படுகிறது.

– ஆசிரியர் குழு

ஷாஹீன்பாக் போராட்டம் நமக்குக் கடந்த கால நிகழ்வு அன்று. டெல்லி - ஷாஹீன்பாக் போராட்டம் குறித்து உச்ச நீதிமன்றம் பிறப்பித்த சமீபத்திய உத்தரவானது, மக்களைச் சட்டபூர்வமாகவே மென்மேலும் அடிபணிய வைப்பதற்கு அரசுக்கு அல்லது அரசாங்கத்திற்கு உதவும். “சுயாதிபத்தியமிக்க ஜனநாயக ஆட்சியில்” (Self-ruled democracy) நடக்கும் போராட்டங்களைக் காலனிய காலத்தில் அரசை எதிர்த்து நடந்த போராட்டபாணி மற்றும் வழிமுறைகளுடன் ஒருபோதும் சமப்படுத்த முடியாது” என்ற ஆபத்தான கருத்தைக் கூறியுள்ளது, உச்ச நீதிமன்றம்.

இங்கு சொல்லப்பட்டுள்ள சுயாட்சி (Self ruled) என்பது ஒரு கண்ணி.

காலனியாக்கும் சபலம் பிரிட்டிஷாருக்கு மட்டுமே உரித்தானதல்ல. அரசானது தன்னளவிலேயே அச்சுறுத்தி நிர்பந்தப்படுத்தக் கூடியதாக இருக்கும் போது, மக்கள் தங்களது இறையாண்மையைப் பறிகொடுத்து விடாமலிருக்க எந்நேரமும் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடு இருக்க வேண்டியுள்ளது. இந்த சுயாட்சியில், சுயம் என்பவர் யார் என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய நிர்பந்தத்தில் நாம் இருக்கிறோம். இந்த சுயம் அல்லது சுயாட்சி நமது பன்முகத்தன்மையை உள்ளடக்கிய ஒன்றா?

**சமத்துவத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சி**

அதிகாரத்தை எதிர்த்து நிற்பது அல்லது போராடுவது என்பது குடியுரிமையின் அல்லது பொதுமக்கள் திரளின் உள்ளார்ந்த அம்சம். உத்தரவுகள் இடுவதற்காகப் போராட்டங்களைக் கட்டமைக்க முடியாது. போராட்டங்கள் என்பது பேச்சுரிமையின் செயல்வடிவம். என்ன பேச வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என்பதை நீங்களும், நானுமே முடிவு செய்ய முடியும். இவ்விடயங்களில் உங்களுக்கோ அல்லது எனக்கோ ஆணையிடுவதற்கு அரசாங்கத்தை அனுமதிக்க முடியாது. ஆனால், உச்ச நீதிமன்றமோ கெடுவாய்ப்பாக ஷாஹீன்பாக் போராட்டத்தின் சரியான தன்மை மீதான தனது தீர்ப்பின் மூலம் இதைத்தான் செய்ய முயற்சித்திருக்கிறது.

நீங்கள் பேசும்போது, அதனை மனதாரக் கேட்பவர் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பீர்கள். ஆனால், உரையாடலுக்கான சூழல் இல்லாத நிலையின் காரணமாகவே போராட்டங்கள் நடைபெறுகின்றன. பேச்சுவார்த்தை சமத்துவத்தை முன்தேவையாகக் கோருகிறது. மக்கள், தாம் சமத்துவமற்ற சூழலுக்குள் தள்ளப்படுகிறோம் என உணருவதன் காரணமாகவே போராடுகிறார்கள். போராட்டங்கள் சமத்துவத்தைப் பெறுவதற்கான அல்லது மீட்டெடுப்பதற்கான முயற்சியே!

போராட்டங்கள் நெருக்கடியை உருவாக்குவதில்லை.

டெல்லியில் நடந்த தொடர் போராட்டத்தின் போது குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக முழங்கும் மூதாட்டி.



அரசாங்கங்கள் சட்டப்பூர்வமாகவே பாரபட்சமான சட்டங்களை நிறைவேற்றுவதன் வழியாக நெருக்கடியை உருவாக்குவதால்தான், போராட்டங்கள் எழுகின்றன. போராட்டங்கள் சமூகத்தின் சமநிலையைக் குலைப்பதில்லை. மாறாக, சமநிலை குலைக்கப்பட்டதால்தான் போராட்டங்கள் வெடிக்கின்றன. சமூகத்தின் சமநிலையைக் குலைக்கும் வண்ணம் குடியுரிமைச் சட்டத்திருத்தம் 2019 உருவாக்கப்பட்டிருப்பது உண்மையில்லையா? அச்சட்டத்தின் உள்ளார்ந்து இருக்கும் தீவிரமான பாரபட்ச உணர்வுதான் முஸ்லிம்களை மட்டுமல்ல, இதர பிரிவினரையும் வீதிக்குக் கொண்டு வந்தது.

### போலீசின் செயல்பாடு

இந்தச் சட்டம் முஸ்லிம்களை மட்டும் சிறுமைபடுத்தவில்லை. பாரபட்சத்தையும், அசமத்துவத்தையும் சட்டபூர்வமாக்கியதன் மூலம் இந்தியாவை இழிவுபடுத்துகிறது. அங்கிருந்த போராட்டக்காரர்கள் தங்களுக்கான உரிமைகளுக்காக மட்டும் போராடவில்லை, அனைவரின் நலன் என்ற உலகு தழுவிய கொள்கைக்காகவும் போராடினார்கள்.

முஸ்லிம்களும், சமத்துவமுள்ள குடியுரிமை என்ற கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளவர்களும் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்ய வீதியில் இறங்கியபோது, போலீசால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டார்கள். இப்பிரச்சினையைக் கூர்ந்து கவனிப்பவர்கள், போலீசின் இரக்கமற்ற கொடூரத்தை உத்திரப் பிரதேசத்திலும், ஜாமியா மிலியா இஸ்லாமியாவிலும் மற்றும் அலிகர் முஸ்லிம் பல்கலைக் கழகத்திலும் கண்டனர். சட்ட ஒழுங்கைப் பேணுவதற்காக அல்லாமல், போராட்டக்காரர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் எனும் நோக்கிலேயே போலீசாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உத்தரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத், போராடியவர்களைப் பொறுக்கிகளைப் போல் நடத்தியதோடு, 'வன்முறை'யில் ஈடுபட்டோரைப் பழிவாங்குவேன் என வன்மத்தையும் கக்கினார்.

மூத்த வழக்குரைஞர்கள் இந்திரா ஜெய்சிங்கும் காலின் கன்ஸால்வஸும் போராட்டக்காரர்கள் மீதான போலீசு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் உச்ச நீதிமன்றத்தை அணுகிய போது, "தெருவில் நடக்கும் வன்முறைகள் முதலில் நிறுத்தப்பட வேண்டும்" என்றது அந்நீதிமன்றம். இதன் மூலம் நீதிமன்றம் மக்களின் போராடும் உரிமையை நிராகரித்ததோடு, மக்களையும் கைவிட்டது.

இத்தகைய சாத்தியமற்ற சூழல்தான் கற்பனைத் திறன்மிக்கதான ஷாஹீன்பாக் போராட்டத்தை வழிநடத்தியது. போராட்டக்காரர்கள், தலைநகரின் மையத்தில் அமையாத புறநகர்ப்பகுதியில் ஓர் இடத்தை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது பற்றி நீதிமன்றம் எண்ணியிருக்க வேண்டும் என மிகச் சரியாகவே அவதானிக்கப்பட்டிருக்கிறது.

"போராட்டங்கள் நெருக்கடியை உருவாக்குவதில்லை. அரசாங்கங்கள் சட்டப்பூர்வமாகவே பாரபட்சமான சட்டங்களை நிறைவேற்றுவதன் வழியாக நெருக்கடியை உருவாக்குவதால்தான், போராட்டங்கள் எழுகின்றன. போராட்டங்கள் சமூகத்தின் சமநிலையைக் குலைப்பதில்லை. மாறாக, சமநிலை குலைக்கப்பட்டதால்தான் போராட்டங்கள் வெடிக்கின்றன."


பேராசிரியர் அபூர்வானந்த்.

நாடெங்கிலும் நடந்த பல ஷாஹீன்பாக் போராட்டங்கள் கொண்டாடப்பட்ட அதேசமயம், இந்திய சமூகத்தின் மற்ற பிரிவினர் போராடக்கூடிய இடங்கள், இந்திய முஸ்லிம் பெண்களுக்குப் பாதுகாப்பற்றதாக, வசதியற்றதாக இருக்கும் சூழலைப் பற்றி உச்ச நீதிமன்றம் சிந்தித்திருக்க வேண்டாமா? சமூகத்தில் மிகப்பெரும் நம்பிக்கையின்மை நிலவி வருவதோடு, அந்த நம்பிக்கையின்மையை இந்த இந்துப் பெரும்பான்மை அரசு மென்மேலும் தீவிரப்படுத்தி வருவதுதான் ஷாஹீன்பாக் தேர்வானதற்குக் காரணமாகும்.

### இரு உரிமைகளின் சமன் நிலை

ஷாஹீன்பாக் போராட்டத்தாலும், அப்போராட்டத்தால் அப்பகுதி சாலைகளைப் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டதாலும், தனது நடமாடும் உரிமை முடக்கப்பட்டதாக மூக்கைச் சிந்திய யாரோ ஒரு குடிமகன் தாக்கல் செய்த மனுவைத்தான் உச்ச நீதிமன்றம் விசாரித்தது. நடமாடும் உரிமையையும் போராடும் உரிமையையும் சமப்படுத்திய உச்ச நீதிமன்றம், அவையிரண்டுக்கும் இடையே ஒரு சமநிலை இருக்க வேண்டுமெனக் கருதியது. நீண்ட நாள் போராட்டம் போக்குவரத்து நெரிசல்களை உருவாக்குவதோடு, மக்களின் நடமாடும் உரிமையை மீறுவதாக உள்ளது என நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்டது.

போராட்டத்தின் காரணமாக போக்குவரத்து தடைபட்டதா அல்லது டெல்லி மற்றும் உத்தரப்பிரதேச போலீசார் தலைநகருக்குச் செல்லும் மாற்றுப் பாதைகளை முற்றிலும் முடக்கியதால் போக்குவரத்து நெரிசல் உருவானதா என்பதைக் கண்டறிய வேண்டிய தேவையை நீதிமன்றம் உணரவில்லை. குறிப்பிட்ட

சாலைகளை முடக்கி, பாதசாரிகளுக்கு ஏன் அசௌகரியத்தை உருவாக்குகிறீர்கள் என்ற கேள்வியை நீதிமன்றம் போலீசிடம் கேட்கவில்லை. போராட்டம் நடந்துவந்த சமயத்தில் இக்கேள்வி கேட்கப்பட்டபோது, இக்கேள்விக்குப் ‘‘பாதுகாப்பு நடவடிக்கை’’ என போலீசு பதில் அளித்திருந்தது.

போராட்டக்காரர்களுக்கு எதிரான பகைமை உணர்வைப் பிறரிடம் உருவாக்குவதற்காக இப்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லையா? போராடுபவர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதற்கான புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இது கையாளப்படவில்லையா?சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை போலீசு ஏன் திருப்பி விடவேண்டும்?

போராட்டத்தைக் கைவிடுவதற்குப் போராட்டக்காரர்களை இணங்கச் செய்ய மத்தியஸ்தர்களை அனுப்பி வைப்பதுதான் சரியானது என முடிவு செய்த உச்ச நீதிமன்றம், ‘‘நீங்கள் போராட்டக்காரர்களுடன் ஏன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை, உங்களின் அமைச்சர்கள் போராட்டக்காரர்களுக்கு எதிராக ஏன் விஷத்தைக் கக்குகிறார்கள், அவர்களுக்கு எதிராக ஏன் வன்முறையைத் தூண்டிவிடுகிறார்கள்?’’ என்ற சாதாரண கேள்விகளைக் கூட அரசாங்கத்திடம் கேட்கவில்லை.

கருத்து மாறுபாடுகளை அனுமதிக்காத ஜனநாயகம், ஜனநாயகமே இல்லை என நீதிமன்றம் ஏற்றுக் கொண்டாலும், போராட்டங்கள் கால வரம்பற்றதாக இருக்கக் கூடாது என்றும், ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. போராட்டங்கள் இன்பம் தரக்கூடிய பொழுதுபோக்கிற்காக நடத்தப்படுவதில்லை. மாறாக, அநீதியான கட்சி அல்லது அதிகாரத்தை தங்களுடன் உரையாடல் நடத்துமாறு பணிய வைக்க வேண்டும் என்பதற்காக பல இன்னல்களை அமைதி வழியில் போராடுபவர்கள் எதிர்கொள்கிறார்கள் என்பதை உணர்ந்தறிய வேண்டும்.

போராட்டங்கள் கால வரம்பைக் கொண்டிருக்க முடியாது. அநீதி வரம்பற்றதாக இருக்கும் போது, போராட்டங்களும் கால வரம்பற்றதாகவே இருக்கும்.

மொழியாக்கம்: **பாவெல்**

# வெட்கக்கேடு!

**ம.பி. உயர்நீதி மன்றம் பாலியல் வழக்கொன்றில் குற்றவாளிக்கு வழங்கியிருக்கும் பிணை உத்தரவு பாதிக்கப்பட்ட பெண்ணைத் தண்டிக்கிறது.**

**உ**.பி. மாநிலம் ஹாத்ரஸில் நடந்த பாலியல் வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட பெண்ணை, அம்மாநில அரசும், போலிசும், சாதிவெறியர்களும் அவமதித்ததை நாடே காறிஉமிழ்ந்து போராடிவரும் வேளையில், ம.பி. மாநில உயர் நீதிமன்றம் அப்போராட்ட உணர்வை எள்ளி நகையாடும் விதத்தில் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. பாலியல் வன்முறைக்குப் பலியாகி நீதி கேட்டு நிற்கும் பெண்ணிடம், தன்னை அக்கொடுமைக்கு ஆட்படுத்திய காமுகனைச் சகோதரனாக ஏற்றுக்கொள்ளும்படியான உத்தரவை வழங்கி, இயற்கை நீதியைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது, அந்நீதிமன்றம்.

சில வழக்குகளில் குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குவதற்கு நீதிமன்றங்கள் நிபந்தனைகளை விதிப்பது வழமையானதுதான். ஆனால், ம.பி. மாநிலத்தின் உஜ்ஜைனி மாவட்டத்தில் பாலியல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த விக்ரம் பார்க்கி என்பவரின் பிணை மனு மீதான வழக்கில் நீதிபதி ரோஹித் ஆர்யா, குற்றவாளிக்குப் பிணை வழங்குவதற்கு விதித்திருக்கும் நிபந்தனைகளோ மிகவும் அருவெறுக்கத்தக்க ஆணாதிக்கத் திமிரும், பாதிக்கப்பட்ட பெண்ணைக் கூனிக்குறுகச் செய்யும் வக்கிரமும் நிறைந்தவையாக உள்ளன.

அவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட விக்ரம், தனது பாலியல் இச்சைக்கும் வன்முறைக்கும் பலியான பெண்ணின் வீட்டிற்குத் தனது மனைவியுடன் சென்று, அப்பெண்ணிற்கு இனிப்புக்களை வழங்கி, அப்பெண்ணைத் தனது கையில் ராக்கி கயிற்றைக் கட்டிவிடக் கோரவேண்டும். மேலும், ராக்கி கட்டி விடும் தங்கைக்கு அண்ணன்

மத்தியப்பிரதேச மாநில உயர் நீதிமன்றம்.





ஆணாதிக்கத் திமிர் நிரம்பிய தீர்ப்பை வழங்கிய
ம.பி. உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹித் ஆர்யா.

**"நிர்பயா வழக்கில் பாலியல் வன்முறையை ஏவிய குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை விதித்த இந்திய நீதித்துறையிலிருந்தா இப்படிப்பட்டதோர் உத்தரவு என யாரும், குறிப்பாகப் பெண்கள் வியப்படையத் தேவையில்லை. நிர்பயா வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு விதிவிலக்கு. பாதிக்கப்பட்ட பெண் எந்தச் சாதி, எந்த வர்க்கம், குற்றவாளிகள் எந்தச் சாதி, எந்த வர்க்கம் என்பதற்கு ஏற்பத்தான் பாலியல் வழக்குகளில் தீர்ப்புகள் அளிக்கப்படுகின்றன."**

பணம் தரும் வழக்கமான சடங்கைக் குறிப்பிட்டு, பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு குற்றம்சாட்டப்பட்டவர் 11,000 ரூபாய் பணம் தந்து அவரது ஆசீர்வாதத்தைப் பெற வேண்டும்; பாதிக்கப்பட்ட பெண்ணின் மகனிடம் துணிகள் மற்றும் இனிப்புகள் வாங்க 5,000 ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் - இவைதான் அந்நீதிபதி விதித்திருக்கும் நிபந்தனைகள்.

ஆதிக்க சாதியினர் நடத்தும் கட்டப் பஞ்சாயத்துகளில் பாலியல் குற்றவாளிகளை விடுவிக்கக் கோவிலுக்கு அபராதம் செலுத்தக் கூறும் நாட்டாண்மைத்தனத்தை ஒத்தது ம.பி. உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு.

தன் மீது பாலியல் வன்முறையை ஏவிய குற்றவாளியை, பாதிக்கப்பட்ட எந்தப் பெண்ணாவது சகோதரனாக ஏற்றுக்கொள்ள முன்வருவாரா? தன் மீது பாலியல் வன்முறையை ஏவிய குற்றவாளியையே கணவனாக ஏற்கச் சொல்லும் கட்டப் பஞ்சாயத்துத் தீர்ப்பைக் காட்டிலும் அருவெறுக்கத்தக்க விதத்திலும், பொறுப்பற்ற விதத்திலும், தன்னிச்சைப்படி வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பிணை உத்தரவு, பாதிக்கப்பட்ட பெண்ணைப் பாதுகாத்து, அவருக்கு நீதி வழங்குவதற்குப் பதிலாக, அவரை அவமானகரமான விதத்தில் தண்டிக்கிறது.

பாலியல் வன்முறைக்குப் பலியான பெண்களும், அவரது குடும்பத்தாரும் அதனைப் புகாராகக் கொடுக்க முன்வருவதே அசாதாரணமானது. அப்படிப் புகாராகக் கொடுக்கப்படும் வழக்குகள் போலிசு நிலையத்தைத் தாண்டி நீதிமன்றப் படிக்கட்டைத் தொடுவதும் போராட்டம் நிறைந்தது. மேலும், பாலியல் ரீதியிலான தாக்குதலுக்கு உள்ளாகும் பெண்களை ஒழுக்கங்கெட்டவர்கள் போலச் சித்தரித்து, அவர்களையே குற்றவாளியாக்குவது; ஆதிக்க சாதிவெறி மற்றும் மதவெறியை முகாந்திரமாகக் கொண்டு அக்குற்றத்தை நியாயப்படுத்துவதுவதோடு, குற்றவாளிகளை நாயகர்களாக விளம்பரப்படுத்துவது என இப்படிப்பட்ட பலவாறான தடைகளைப் பாலியல் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் எதிர்கொண்டு வரும் நிலையில் வழங்கப்பட்டிருக்கும் இப்பிணை உத்தரவு, பாலியல் குற்றவாளிகளுக்கு மனத் துணிவை அளிக்கக்கூடியது. இப்படிப்பட்ட உத்தரவுகள் வழங்கப்படும் நாட்டில் பாலியல் குற்றங்கள் குறைவதற்கு ஏதாவது வாய்ப்புண்டா?

நிர்பயா வழக்கில் பாலியல் வன்முறையை ஏவிய குற்றவாளிகளுக்குத் தூக்கு தண்டனை விதித்த இந்திய நீதித்துறையிலிருந்தா இப்படிப்பட்டதோர் உத்தரவு என யாரும், குறிப்பாகப் பெண்கள் வியப்படையத் தேவையில்லை. நிர்பயா வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு விதிவிலக்கு. மேலும், அச்சமயத்தில் அப்பாலியல் வன்முறைக்கு எதிராக நடுத்தெருவுக்கு வந்த நகர்ப்புறத்தைச் சேர்ந்த மேட்டுக்குடி மற்றும் உயர் நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக, வர்க்கச் சார்போடு வழங்கப்பட்ட தீர்ப்பு அது. பாதிக்கப்பட்ட பெண் எந்தச் சாதி, எந்த வர்க்கம், குற்றவாளிகள் எந்தச் சாதி, எந்த வர்க்கம் என்பதற்கு ஏற்பத்தான் பாலியல் வழக்குகளில் தீர்ப்புகள் அளிக்கப்படுகின்றன என்பதற்கு நம் கண் முன்னே பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

பாலியல் வன்முறை வழக்குகளில், இந்திய நீதிமன்றம் மற்றும் நீதிபதிகளின் மனச்சான்றை இந்தியக் கிரிமினல் சட்டங்களைவிட, தந்தை வழி சமூக அமைப்பின் ஆணாதிக்க மனோபாவம்தான் ஆட்டிவைக்கிறது என்பதற்கு ம.பி. உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பிணை உத்தரவு மற்றுமோர் உதாரணம்.

● முத்து

# முதலாளித்துவம் உருவாக்கும் முரண் நிலை!

அம்பானி, அதானி, அசிம் பிரேம்ஜி என உலகக் கோடீசுவரர்கள் வாழும் இந்தியா, உலகப் பட்டினிக் குறியீட்டுத் தரவரிசைப் பட்டியலிலோ அதளபாதாளத்தில் கிடக்கிறது.

உலகு தழுவிய அளவில் சத்தான உணவு கிடைக்காமல், அரைகுறை பட்டினியால் உடல் மெலிவுற்று, வயதுக்கு ஏற்ற வளர்ச்சியும் உயரத்திற்கு ஏற்ற எடையும் இன்றி நோஞ்சான்களாக உயிர்வாழும் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், அன்றாடம் ஊட்டமான உணவு கிடைக்காமல் வெந்ததைத் தின்று உயிர் வாழும் மக்களைக் கொண்ட நாடுகள் அடங்கிய தரவரிசைப் பட்டியல், உலகப் பட்டினி குறியீடு 2020 எனும் பெயரில் வெளியாகியிருக்கிறது. வழமை போலவே, இந்தியா இந்தப் பட்டியலில் பின்தங்கி இருப்பதோடு - 107 நாடுகளைக் கொண்ட பட்டியலில் இந்தியா 94 ஆவது இடத்தில் உள்ளது - நமது அண்டை நாடுகளான பாகிஸ்தான் (88-ஆவது இடம்) இலங்கை (64), வங்கதேசம் (75), நேபாளம் (73), மியான்மர் (78) ஆகிய சிறிய, வறிய நாடுகளைவிட மிக மோசமான நிலையில் இருப்பதை அக்குறியீடு அம்பலப்படுத்தியிருக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், அதாவது வளர்ச்சி நாயகன் என விளம்பரப்படுத்தப்பட்ட திருவாளர் மோடியின் ஆட்சியில் உயரத்திற்கு ஏற்ற எடை அற்ற இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஐந்தாண்டுகளைக் காட்டிலும் 2.2 சதவீதம் அதிகரித்திருப்பதையும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியிருக்கிறது. இதுவொருபுறமிருக்க, பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனமும், தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனமும் தனித்தனியாக வெளியிட்டிருக்கும் அறிக்கைகள், இந்தியக் கிராமப்புறங்களில் நான்கில் மூன்று பேர் சத்தான, சரிவிகித உணவுக்கு வழியின்றி வாழ்வதாகக் குறிப்பிட்டுள்ளன.



சத்தான சரிவிகித உணவுக்கு வழியில்லாத கிராமப்புற இந்திய மக்கள், உயரத்திற்கு ஏற்ற எடையும், வயதுக்கு ஏற்ற வளர்ச்சியும் இல்லாத இந்தியக் குழந்தைகள் என்ற இந்த விவரமெல்லாம் காட்டுவதென்ன? கோடிக்கணக்கான இந்தியக் குடும்பங்கள் அடிப்படை உணவுத் தேவையைக்கூட

## புதிய ஜனநாயகம் முகவர்கள், சந்தாதாரர்கள் மற்றும் வாசகர்களுக்கு....

செவ்வணக்கம்!

தொடர்ந்து நீடித்துவரும் நிர்வாகச் சிக்கல்களின் காரணமாக எம்மால் ஆகஸ்டு 2020 முதல் நவம்பர் 2020 முடியவுள்ள நான்கு இதழ்களையும் அச்சிதழாகவோ மின்னிதழாகவோ வெளியிட முடியவில்லை. டிசம்பர் 2020 இதழையும் அச்சில் கொண்டுவர இயலாத நிலை நீடிப்பதால், அவ்விதழை மின்னிதழாக வெளியிடுகிறோம். இம்மின்னிதழை வாசகர்கள் எவரும் கட்டணம் எதுவுமின்றி இலவசமாக வாசிக்கவும், பதிவிறக்கம் செய்து கொள்ளுவதற்கும் ஏற்றபடி வெளியிட்டிருக்கிறோம்.

அச்சுப் பிரதிக்கான சந்தா தொகை செலுத்தியுள்ள வாசகர்களுக்கு விடுபட்டுள்ள இதழ்கள் அவர்கள் கணக்கில் நேர்செய்யப்பட்டு, அவர்களின் சந்தா காலம் அதற்கேற்ப நீட்டிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தாதாரர்களும், வாசகர்களும், முகவர்களும் எமது இந்த இக்கட்டான நிலையைப் புரிந்துகொண்டு தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்வதோடு, மிக விரைவில் எமது நிர்வாகச் சிக்கல்களைத் தீர்த்துக்கொண்டு இதழை மாதந்தோறும் முறையாக வெளியிட முயற்சிக்கிறோம் என உறுதியளிக்கிறோம்.

உங்கள் அனைவருக்கும் புதிய ஜனநாயகம் ஆசிரியர் குழுவின் சார்பாக 104-ஆவது நவம்பர் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு




ஈடுசெய்து கொள்ள முடியாத வறுமையின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள் என்பதுதான்.

உலகப் பட்டினிக் குறியீட்டில் இந்தியாவிற்கு அளிக்கப்பட்டிருக்கும் இத்தரவரிசை இடம் கரோனா பாதிப்புகளுக்கு முந்தைய கணிப்பாகும். இப்பெருந்தொற்று தீவிரப்படுத்தியிருக்கும் நிச்சயமற்ற நிலையைக் கணக்கில் கொண்டால், எதிர்காலத்தில் இந்தியா இந்தத் தரவரிசைப் பட்டியலில் இன்னும் கீழே சரிந்து விழக்கூடும்.

அரைகுறை பட்டினி என்ற இந்த அவலத்தை, அபாயத்தை எதிர்கொள்ள வேண்டுமென்றால், ரேஷன் கடைகளில் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் மட்டுமின்றி, பருப்பு வகைகள், தானியங்கள் உள்ளிட்ட அத்தியாவசியமான ஊட்டச்சத்து அளிக்கக்கூடிய உணவுப் பொருட்களை மானிய விலையில் அனைவருக்கும் கிடைக்கும்படி ரேஷன் விநியோகத்தை விரிவுபடுத்த வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள், பால் கொடுக்கும் தாய்மார்கள், ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்காக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு விதமான சத்துணவுத் திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும். மிகவும் முக்கியமாக, கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகளுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்களையும், அவர்களது வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்டக்கூடிய கூலியையும் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

ஆனால், மோடி அரசோ இதற்கு நேர் எதிர் திசையில், ரேஷன் விநியோகத்தில் உணவுப் பொருட்களுக்குப் பதிலாகப் பணப் பட்டுவாடாவைக் கொண்டுவர முயலுகிறது. அத்தியாவசிய உணவுப் பொருள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தி, பதுக்கலுக்கும் விலை உயர்வுக்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. தொழிலாளர் நலச் சட்டத்தில் கொண்டுவந்திருக்கும் சீர்திருத்தங்கள் மூலம் வேலை உத்தரவாதத்தையும், குறைந்தபட்ச கூலி கொடுப்பதையும் இல்லாது ஒழித்திருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், இச்சீர்திருத்தங்கள் மூலம் ஏழைகளை, அடித்தட்டு மக்களைத் தமது வயிற்றைச் சுருக்கிக்கொண்டு வாழச் சொல்கிறது, மோடி அரசு. இப்படிப்பட்ட ஆட்சியில் பட்டினிச் சாவுகள் நடக்கத் தொடங்கினாலும் ஆச்சரியங்கொள்ள முடியாது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் பட்டினிக் குறியீடு தர வரிசை குறையாதது துரதிருஷ்டவசமானது என அங்கலாய்த்துக் கொள்கிறார்கள், முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள். ஆடு கொழுக்கட்டும் என ஓநாய்களும், நரிகளும் வேண்டுமானால் காத்துக் கிடக்கலாம். ஆனால், கார்ப்பரேட் முதலாளி வர்க்கம் இந்த நியதியை ஏற்றுக் கொள்வதில்லை. அம்பானி உலகக் கோடீசுவரர்களின் பட்டியலில் எந்தளவிற்கு முன்னேறிச் செல்கிறாரோ, அந்தளவிற்கு இந்தியாவில் ஏழ்மையும் பட்டினியும் அதிகரிக்கவே செய்யும். இதுதான் முதலாளித்துவ சமூக விதி. கம்யூனிசப் புரட்சியாளர்கள் கூறிவரும் இந்த உண்மையைத்தான் உலகப் பட்டினிக் குறியீடு 2020-ம் எடுத்துக்காட்டியிருக்கிறது.

● மேகலை

## அறிவிப்பு

புதிய ஜனநாயகம் இதழின் அலுவலகம் விரைவில் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறது. புதிய அலுவலக முகவரியை அறிவிக்கும் வரையில், இதுவரை செயல்பட்டு வந்த அலுவலக முகவரிக்குப் பதிவு அஞ்சல், பணவிடைத்தாள் மற்றும் கூரியர் ஆகியவற்றை அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இவற்றுக்குப் பதிலாக எமது மின்னஞ்சல் (puthiyajananayagam@gmail.com), வாட்ஸ்-அப் (94446 32561) மற்றும் ஜி பே (G-Pay - 94446 32561) சேவைகளை மட்டுமே பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அலுவலகத் தொலைபேசி எண்ணின் வழியாகத் தொடர்பு கொள்ள விரும்பும் முகவர்கள், சந்தாதாரர்கள், வாசகர்கள் அனைவரும், மறு அறிவிப்பு வரும்வரை, காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரையில் மட்டுமே தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எமது வங்கிக் கணக்கு விவரம்: Bank: State Bank of India. Branch: Kodambakkam, Chennai-600 024. Account Name: Puthiya Jananayagam. Account Number:10710430715. IFSC:SBIN0001444.

- ஆசிரியர் குழு

Owned and Published by R.SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024/ Editor: R.SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No. 42648/85
REGISTERED No. TN/CC(S)DN/190/18-20. Liscensed to Post without pre-payment under WPP No. TN/PMG(CCR)/WPP562/2018-2020.

# மீண்டும் முருங்கை மரம் ஏறுகிறது வேதாளம்!



வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப்போக வைத்த உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மகாராஷ்டிர மாநிலம் புனே நகரில் நடந்த போராட்டத்தின்போது போலீசோடு மோதும் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள். (கோப்புப் படம்)

இரு ஆண்டுகளுக்கு முன்பு தீண்டாமைக் குற்றம் தொடர்பான வழக்கொன்றில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தைத் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நீர்த்துப் போகச் செய்தது உச்ச நீதிமன்றம்.

அத்தீர்ப்புக்கு எதிராக நாடெங்கும் தாழ்த்தப்பட்டோர் நடத்திய போராட்டங்களில், குறிப்பாக பா.ஜ.க. ஆண்ட ம.பி., உ.பி., இராஜஸ்தான் மாநிலங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டனர். தாழ்த்தப்பட்டோரின் இத்தியாகங்களுக்குப் பிறகுதான், மோடி அரசு அத்தீர்ப்புக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சட்டமியற்றி, அச்சட்டத்தின் முந்தைய நிலையைப் பாதுகாத்தது.

எனினும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் தனது நரித்தனத்தை உச்ச நீதிமன்றம் கைவிட்டுவிடவில்லை. ''ஹிதேஷ்ஷர்மா எதிர் உத்தர்கண்ட் அரசு'' என்றொரு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி நாகேஸ்வர ராவ், ''தாழ்த்தப்பட்டோரைப் பலரும் பார்க்கும் விதத்தில் சாதிரீதியாக அவமானப்படுத்தினால்தான் தீண்டாமைக் குற்றமாகும். யாரும் பார்க்காத இடத்தில், பாதிக்கப்பட்டவர் தனது வீட்டிற்குள் தனியே இருக்கும்போது அவரை அவமதித்தால், அது தீண்டாமைக் குற்றத்தின் கீழ் வராது'' எனக் குறிப்பிட்டுக் குற்றஞ்சுமத்தப்பட்டவரை விடுதலை செய்திருக்கிறார்.

யாரும் பார்க்காத வண்ணம் நடக்கும் தீண்டாமையைக் குற்றமாகக் கருத முடியாது எனத் தீர்ப்பெழுதியிருக்கும் நீதிபதி, பெண்களுக்கு எதிராக நடந்துவரும் பாலியல் வன்முறைகள், பாலியல் சீண்டல்கள், குடும்ப வன்முறைகள் யாவும் யாரும் பார்க்காத வண்ணமும் தனிமையிலும் நடப்பதால், அவற்றையும் குற்றமாகக் கருத முடியாது எனக் கூறத் துணிவாரா? அரசியல்வாதிகளும் நீதிபதிகளும் யாரும் பார்க்காத வண்ணம் காதும்காதும் வைத்தாற்போல இலஞ்சம் பெறுவதால், அவர்களைத் தண்டிக்காமல்தான் விட்டுவிடமுடியுமா?

உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் அனைத்தும் நாடாளுமன்றம் / சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களுக்கு இணையானவை. எனவே, இத்தீர்ப்பு நீடிப்பதை அனுமதிக்கக் கூடாது. அனுமதித்தால், தாழ்த்தப்பட்டவர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்க முயலும்போது, முதலாவதாக, பலரும் பார்க்கும்விதத்தில்தான் சாதிரீதியாக அவமதிக்கப்பட்டேன் என்பதை அவர் சாட்சியங்களின் மூலம் நிரூபித்தாக வேண்டிய நிலை ஏற்படும். அந்த சாட்சியத்தை போலிசு அதிகாரிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சாட்சி தாழ்த்தப்பட்டவராக இருந்தால், அச்சாட்சியம் போலிசு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட வாய்ப்புகள் அதிகமுண்டு. ஆதிக்க சாதிவெறியர்கள் அல்லது அச்சாதியில் பிறந்தவர்கள் சாதிப் பற்று அல்லது பயத்தின் காரணமாகச் சாட்சியம் சொல்ல முன்வரமாட்டார்கள். இதனால் புகார் நிலையிலேயே அத்தீண்டாமைக் குற்றம் நிராகரிக்கப்பட்டுவிடக் கூடும்.

''இத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி நாகேஸ்வர ராவ் இட ஒதுக்கீடுக்கு எதிராகத் தொடர்ந்து உத்தரவுகளை வழங்கிவருவதாகவும், இட ஒதுக்கீடு அடிப்படை உரிமை அல்ல எனத் தீர்ப்புக் கூறியவர் இந்நீதிபதிதான்'' என்றும் சுட்டிக் காட்டுகிறார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

நீதிபதி நாகேஸ்வர ராவ் விதிவிலக்கல்ல; உச்ச நீதிமன்ற நீதிபதிகளுள் பெரும்பான்மையோர் அல்லது அனைவருமே நாகேஸ்வர ராவின் மனநிலையில் இருப்பதையும் அந்நிறுவனத்துக்குச் சமூக நீதி, இயற்கை நீதி என்பதெல்லாம் எட்டிக்காயாகிவிட்டதையும் பல்வேறு தீர்ப்புகள் வழியாக எடுத்துக்காட்ட முடியும்.

நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அதன் புத்தி போகாது என்பார்கள். அந்தப் பழமொழி பார்ப்பன - உயர்சாதி ஆதிக்கம் நிறைந்த உச்ச நீதிமன்றத்துக்கும் பொருந்தும்.

•